# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 31 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 12, செவ்வாய்க்கிழமை 27.12.2016


## காலை 7.30 மணிக்கே பாடசாலை ஆரம்பம்

### மாற்றம் எதுவும் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 27
அடுத்த தவணை ஆரம்பத்திலிருந்து வடக்கு மாகாணப் பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு மாகாண சபை உறுப்பினர்களால் விடுக் >> 25


(மேலும் படங்கள் 3ஆம், 8ஆம் பக்கத்தில்)

## ஆழிப்பேரலை காவுகொண்டோரின் கல்லறைகள் மீது கதறியழுது அஞ்சலி

### நேற்றுச் சோகமயமானது தமிழர் தாயகம்

யாழ்ப்பாணம், டிசெ. 27
ஆழிப்பேரலைகாவுகொண்டோரின் கல்லறைகளின் மேல் விழுந்து கதறி அழுதனர் உறவினர்கள். கைகளில் பூக்களுடன் கண்களில் நீர் சொரிய பெரும் ஓலத்துடன் உறவுகள் அஞ்சலி செலுத்திய காட்சிகள் அனைவரையும் நெஞ்சுருக வைத்தன.
ஆழிப் பேரலையின் 12ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் வடக்கு உட்பட நாடு முழுவதும் நேற்று இடம்பெற்றன. அந்த இடங்களில் அவர்களது உறவுகள் அழுது புரண்டு அஞ்சலி செலுத்தினர். >> 04

## வெவ்வேறு நீர் நிலைகளில் மூழ்கி இருவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.27
சுனாமி நினைவு தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் கடல் மற்றும் குளம் ஆகிய வெவ்வேறு நீர் நிலைகளில் நீராடிய ஆசிரியர் மற்றும் சிறுவன் என இருவர் நீரில் மூழ்கிச் சாவடைந்தனர் என்று >> 25

### ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு

# மேலும் ஒரு வருட நீடிப்பை வழங்க கூட்டமைப்பு தயார்

### புதிய அரசமைப்பு, காணி மற்றும் கைதிகள் விடுவிப்பு என இரு நிபந்தனைகளை விதிக்கின்றது

யாழ்ப்பாணம், டிசெம்பர். 27
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 2015 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த கொழும்பு அரசு கால அவகாசம் கேட்டால் அதனை வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராகியுள்ளது. எனினும், அதற்கு முன்னதாக கொழும்பு அரசு வாக்குறுதியளித்த சில விடயங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று அது நிபந்தனையும் விதித்துள்ளது.
அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு இடம்பெறவுள்ளது. இலங்கையில் மனித உரிமை >> 25

## அநுராதபுரத்தில் தாக்கப்பட்ட இந்து ஆலயத்துக்கு உதவி

### அடுத்த மாதம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 27
அநுராதபுரத்தில் நவராத்திரித் திருவிழாவின் போது தாக்கப்பட்ட இந்து ஆலயத்தின் கும்பாபிசேகம் அடுத்த மாதம் நடைபெறும். ஆலயத்துக்கான உதவிகள் கும்பாபிசேகத்தில் வைத்து வழங்கப்படும். இவ்வாறு இந்து கலாசாரத் திணைக் >> 25

## போராளிகளின் மர்மச் சாவு; யாரும் முறையிடவில்லை

### வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

யாழ்., டிசெ. 27
வடக்கு மாகாணத்தில் சந்தேகமான முறையில் உயிரிழந்த முன்னாள் போராளிகள் தொடர்பிலான விவரங்களைப் பதிவு செய்யுமாறு கோரியிருந்த போதும், இதுவரை எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
புனர்வாழ்வின் பின்னர் விடுதலைசெய்யப்பட்ட முன்னாள் போராளிகள் சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்த >> 25



## மயிலிட்டியை ராணுவம் விட்டுக்கொடுக்கக்கூடாது

### ஜனாதிபதியிடம் வலியுறுத்தியது தேசிய போர் வீரர்கள் முன்னணி

யாழ்ப்பாணம், டிசெ. 27
எந்தவொரு சூழ்நிலையிலும் வலி.வடக்கில் உள்ள மயிலிட்டிப் பகுதியை, இராணுவத்தினர் விட்டுக் கொடுக்கவோ, அங்கு மீள்குடியேற்றம் செய்யவோ அனுமதிக்கக் கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், தேசிய போர் வீரர்கள் முன்னணி என்ற முன்னாள் >> 25

முச்சந்தி முரளி



வலி. வடக்கில அவைக்கு அப்பிடி என்னதான் கிடக்குது...!

## எல்லை நிர்ணய அறிக்கை இன்று திட்டமிட்டபடி கையளிப்பு

யாழ். டிசெ. 27
எல்லை நிர்ணய அறிக்கை திட்டமிட்டபடி இன்று கையளிக்கப்படும். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ள நிலை யில், அந்த அறிக்கையை இராஜாங்க அமைச்சர் பிரியங்கர >> 25

### யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்

## மருத்துவபீடக் கற்கைக் கட்டடம் திட்டமிட்டவாறு அமைக்கப்படும்



யாழ்ப்பாணம், டிசெ. 27
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 720 மில்லியன் ரூபாவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மருத்துவ பீடகற்கைநெறிக் கட்டடத் தொகுதி திட்டமிட்டபடி நிர்மாணிக்கப்படவுள்ளதாக போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். >> 04

## கூட்டமைப்புக்கு அரசு கொடுத்த உறுதி என்ன?

### பகிரங்கப்படுத்துமாறு கோருகிறது மகிந்த அணி

யாழ்ப்பாணம், டிசெ. 27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் அரசு வழங்கியுள்ள வாக்குறுதிகள் என்ன? அதனை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்.
இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்தார்.
கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்படி விடயத்தை முன்வைத்தார். >> 04

## பொருளாதார வலயத்துக்கு இரு காணிகள் கையளிப்பு

### இரண்டொரு தினங்களில் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 27
வடக்கில் பொருளாதார வலயம் அமைப்பதற்கு இனங்காணப்பட்ட இரண்டு காணிகளும், கொழும்பு அரசின் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.
இதற்கு அமைவாகப் பொருளாதார வலய நிர்மாணப் பணிகள் இரண்டொருதினங்களில் ஆரம்பமாகும் என்று தெரியவருகின்றது.
வவுனியா மாவட்டத்தின் மதகுவைத்தகுளம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் ஆகிய இரண்டு >> 25

## கஞ்சாவுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, டிசெ.27
யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்குக் கேரளக் கஞ்சாவுடன் >> 25



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கழிவுநீரை நன்னீராக்கும் திட்டம் சில வாரங்களில்

## வவுனியாவில் செயற்படுத்த நடவடிக்கை

வவுனியா, டிசெ. 27

கழிவுநீரைச் சுத்திகரித்து நன்னீராக்கிக் குளத்துடன் இணைக்கும் செயற்றிட்டம் வவுனியாவில் முழுமை பெற்றுள்ளது. சில வாரங்களில் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று அதன் செயற்றிட்டப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

யுனொப்ஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் எட்டு கோடி ரூபா செலவில் மூன்று மாதங்களாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. நீர்ப்பாசனத் திணைக்களமும் நகர சபையும் இணைந்து இதனை மேற்கொண்டு வருகின்றன. இந்தத் திட்டம் ஓரிரு வாரங்களுக்குள் கையளிக்கப்படும்.

கழிவுநீர் தாங்கியானது 5 தொட்டிககளைக் கொண்டுள்ளது. 3 தொட்டியினுள் கழிவுநீரைச் சுத்தப்படுத்தி மற்றைய இரு தொட்டியினுள் சென்று பின்னர் அது குளத்தினுள் நன்னீராகச் சென்று இணைகின்றது. பெரும் மழைவீழ்ச்சி ஏற்பட்டாலும் நீரைச் சுத்திகரிக்கக் கூடிய மோட்டர்கள் இதற்குப் பொருத்தப்பட்டுள்ளன- என்றார்.

வவுனியா நகரின் மத்தியில் உள்ள கழிவுகள், எண்ணெய்ப் பதார்த்தங்கள், நச்சுப் பொருள்கள் உள்ளிட்ட கழிவுப் பொருள்கள் குளத்தினுள் செல்வதால் குளம் மாசடைகின்றது. அத்துடன் நகரின் மத்தியில் துர்நாற்றம் வீசுவதாகவும் முன்னர் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# கஞ்சா பிடிபட்டபோது தப்பியோடியவர் கைது

தென்மராட்சி, டிசெ. 27

வாகனத்தில் கஞ்சா கடத்திய போது பொலிஸாரிடமிருந்து தப்பியோடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை 9 மாதங்களின் பின்னர் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த மார்ச் 24ஆம் திகதி கொடிகாமம் கச்சாய் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த ஹைஏஸ் வாகனத்தைச் சிவில் உடையில் நின்ற பொலிஸார் நிறுத்திச் சோதனையிட்ட போது வானுக்குள் கஞ்சா இருந்ததைக் கண்டுபிடித்தனர். திடீரெனப் பொலிஸாரைத் தாக்கிவிட்டு கஞ்சா கடத்தியதாகக் கூறப்பட்டவர் தப்பியோடியிருந்தார்.

வாகனச் சாரதியைக் கைது செய்த பொலிஸார் மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுப் பின்னர் விசாரணைகளின் பின்னர் வழக்கிலிருந்து விடுவித்தார்.

சம்பவத்தின்போது தப்பியோடிய நபர் குறித்து கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்றுமுன்தினம் கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள வீட்டில் வைத்து அவரைக் கைது செய்தனர். இந்த நபரை நேற்று நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது ஜனவரி 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-4-9)

# புதிய அரசமைப்புக்கு பன்னாட்டு அழுத்தம்

## இது பிரிவினைக்கே வழி செய்யும் என்று கெஹலிய ரம்புக்வெல சாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 27

இந்தியாவின் அழுத்தம் காரணமாக 13ஆவது திருத்தச் சட்டம் அன்று கொண்டு வரப்பட்டது. பன்னாட்டு அழுத்தம் காரணமாக புதிய அரசமைப்பு இன்று கொண்டு வரப்படுகின்றது. இது பிரிவினைக்குத்தான் வழிவகுக்கும்.



இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 பிளஸ் என்ற பெயரை இலங்கையின் அரசியல் அரங்கில் அறிமுகப்படுத்தியவர் இந்தியாவின் முன்னாள் அயலுறவுத்துறைச் செயலாளர் சிவசங்கர் மேனனாகும். இந்தப் பெயருக்கும் மகிந்த ராஜபக்சவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இந்திய அயலுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் நடத்திய சந்திப்பின்போது, அரசியல் தீர்வு சம்பந்தமாக யோசனை முன்வைத்தார். 13ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று செனட் அல்லது மேல் சபை அமைத்து அந்தச் சபையில் முதலமைச்சர்கள் அனைவரையும் உள்ளடக்குமாறு யோசனை முன்வைத்தார். அந்த முறைமையை 13 பிளஸ் என்று மேனன் அழைத்தார். 13 பிளஸ் என்று பெயர் சூட்டியதே மேனன்தான். மகிந்த அல்ல.

அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் மகிந்த ராஜபக்ச சந்திப்பொன்றை மேற்கொண்டார். அந்தச் சந்திப்பில் நானும் கலந்து கொண்டிருந்தேன். அப்போது 13 பிளஸிற்கான வரைவிலக்கணம் என்ன என்று மன்மோகன் கேட்டார். மேனன் கூறிய அந்த வரைவிலக்கணத்தை மகிந்த கூறினார். இப்படித்தான் 13 பிளஸ் என்ற பெயர் உருவானது. ஆனால், இப்போது பிழையான விளக்கம் கொடுக்கப்படுகின்றது. 13க்கு அப்பால் சென்று நாட்டுக்கு விரோதமாகச் சிலவற்றைக் கொடுப்பதற்கு மகிந்த முயன்றார் என்பது போலவே இப்போது பரப்புரை செய்யப்படுகின்றது. இதில் உண்மை இல்லை. இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஜே.ஆர்.ஜயவர்தன விருப்பத்துடன் கொண்டு வரவில்லை. இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே அதைக் கொண்டு வந்தார். இன்று இந்த அரசு பன்னாட்டு அழுத்தம் காரணமாக புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து பிரிவினைவாதத்துக்கு வழிவிடப்போகின்றது - என்றார். (த-5)

# தேடப்பட்ட கொள்ளையன் உடுவிலில் வைத்துக் கைது

யாழ்ப்பாணம், டிசெ.27

கொள்ளைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பல மாதங்களாகத் தேடப்பட்டு வந்தவர் 2 லட்சம் ரூபா பணம் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரத்தில் வசிக்கும் 'சீக்கியன்' என்று புனைபெயரால் அழைக்கப்படும் 32 வயதுடையவரே நேற்றுமுன்தினம் உடுவில் வீதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

மானிப்பாய், வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற பல பொலிஸ் நிலையங்களில் இவர் தொடர்பான முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன. குறித்த நபர் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (த-4,10)

# வீழ்த்தப்பட்டார் மகாத்மா காந்தி

முல்லைத்தீவு, டிசெ. 27

முல்லைத்தீவு நகரின் மையப் பகுதியில் அமைக்கப்பட்டு வந்த அகிம்சாவாதி மகாத்மா காந்தியின் உருவச் சிலை இனம்தெரியாதோரால் நேற்றுக் காலை தள்ளிவிழுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகனின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் மகாத்மா காந்தியின் உருவச் சிலை அமைக்கப்பட்டு வந்தது. இந்தச் சிலை அந்த பகுதியில் வைத்துச் செய்யப்படவில்லை எனவும் எங்கோ செதுக்கிவிட்டு குறித்த இடத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 18ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் குறித்த சிலை தொடர்பாகக் கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன், குறித்த இடத்தில் வன்னி மன்னன் பண்டார வன்னியனின் சிலை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. பண்டாரவன்னியனின் சிலையை அமைப்பதற்குப் பிரதேச சபை, மாகாண சபை, ஒருங்கிணைப்புக் குழு எனப் பல இடங்களில் கேட்டு கிடைக்கப் பெறாத அனுமதி தற்போது தான் கிடைத்தது. நாங்கள் பண்டாரவன்னியினின் சிலையை அங்கு அமைப்பதற்கு முன்னர் காந்தி சிலை புதிதாக முளைத்துள்ளது. இது யாருடைய அனுமதியும் பெறப்படாது அமைக்கப்பட்டுள்ளது.

அகிம்சையைப் போதித்த காந்திக்கு முல்லைத்தீவில் சிலை அமைப்பதன் அவசியம் என்ன? முல்லைத்தீவுக்குக் காந்தி என்ன செய்தார்? அகிம்சை ரீதியாகப் போராடிய தியாகி திலீபன், முல்லைத்தீவில் உண்ணா விரதமிருந்து ஆபத்தான நிலையில் காப்



பற்றப்பட்ட திருச்செல்வத்துக்கு சிலை அமைப்பதை விடுத்து, காந்திக்குச் சிலை அமைப்பதன் அவசியம் என்ன? இவ்வாறு அனுமதி இன்றிச் சிலை வைப்பதற்கும், அனுமதியின்றி விகாரைகள் கட்டும் புத்த பிக்குவுக்கும் வித்தியாசம் என்ன? என்று தெரிவித்தார்.

ரவிகரனின் கருத்துக்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், 'முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 சிலைகளை அமைப்பதற்கு பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் அனுமதி பெறப்பட்டது, அதனடிப்படையிலேயே இந்தச் சிலை அங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டது - என்றார்.

இதனால் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சில மணி நேரங்கள் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்தன. அதன் பின்னர் வடக்கு மாகாண சபையில் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபையின் வரவு-செலவுத் திட்ட விவாத்தின்போதும் ரவிகரன் குறித்த சிலை தொடர்பான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்றுக் காலை குறித்த சிலை தள்ளிவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. காந்தியின் சிலை தள்ளிவிடப்பட்டதா? அல்லது வேறு புறச்சூழல்களால் வீழ்ந்துள்ளதா? என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (த-21-7)

# தொண்டர் ஆசிரியர்கள் உணவு ஒறுப்புப் போர்

## வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நாளை முதல் நடத்த முடிவு

ஜனவரிமாதம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்போது தாம் நியமன ஆசிரியர்களாகக் கடமையாற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகத் தொடர்ச்சியான உணவு ஒறுத்தல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பொய்த்துப்போயுள்ளதாகக் குற்றஞ்சாட்டிய அவர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஒன்று கூடி இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்தனர். வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் எதுவித ஊதியமும் இன்றி நீண்ட காலமாகச் சேவையாற்றி வந்த தொண்டர் ஆசிரியர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது இவ்வருடம் முடிவதற்குள் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதே வாக்குறுதியைத்தான் கல்வி இராஜாங்க அமைச்சர் ராதாகிருஸ்ணனும் வழங்கியிருந்தார்.

தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு கல்விச் செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கவலை அளிப்பதாகவுள்ளது. எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படும் வரை நாளை தொடக்கம் ஆளுநர் அலுவலகம் முன்பாகத் தொடர்ச்சியாக இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் -என்றனர். (த-4,6,34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு கடற்கரை வீதி



ஆழிப் பேரலை பேரிடரின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் ...



மட்டக்களப்பு சுனாமி பேபி 81 எனும் மாணவனின் இல்லத்தில் ஆழிப்பேரலையால் உயிர் பிரிந்த உறவுகளுக்காக நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

# தொகுதிவாரி முறையினால் பொதுமக்களின் பிரச்சினை தீராது

*எல்லை நிர்ணயக் குழு உறுப்பினர்கள் விமர்சனம்*

கொழும்பு, டிசெ. 27

எல்லை நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகுதிகள் அடிப்படையில் தேர்தல்கள் நடந்தால் மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகள் தீர்வதற்கான சாத்தியங்கள் குறைந்துபோகுமென அந்தக் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தொகுதிவாரித் தேர்தல் நடக்கும்போது சிறுபான்மையினருக்கு உள்ளூராட்சி சபைகளில் கிடைக்கும் பிரதிநிதித்துவம் குறைந்துபோகும். அத்துடன், சனத்தொகை அதிகமாகவுள்ள தொகுதிகளுக்கு அதிகப் பிரதிநிதிகளை நியமிக்க முடியாமல் போகுமென அந்தக் குழுவின் உறுப்பினர் களில் ஒருவரான சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கு முன்னாள் அரச நிர்வாக சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் அமைச்சு செயலாளருமான அசோக பீரிஸ் தலைமையில் ஐவர் கொண்ட குழு 2015 டிசெம்பர் முதலாம் திகதி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் எல்லை நிர்ணயம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடினர். அதனையடுத்து அந்தக் குழுவின் அறிக்கை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## பொலிஸ்மா அதிபர் தடுக்கவில்லை

கொழும்பு, டிசெ. 27

தனியார் ஊடகங்களுக்குப் பொலிஸ் செய்திகளை மின்னஞ்சல் ஊடாக அனுப்பும் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளதாக வெளியான செய்தியைப் பொலிஸ் ஊடகப் பிரிவு மறுத்துள்ளது.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பொலிஸ்மா அதிபரிடமிருந்து தமக்கு அவ்வாறானதொரு உத்தரவு கிடைக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தினமும் ஊடகங்களுக்கு வரும் பொலிஸ் செய்திகள் அடங்கிய மின்னஞ்சல் இறுதியாகக் கடந்த 20 திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## ஆணின் உடலம் புங்குடுதீவில் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், புங்குடுதீவுக் கடற்கரையில் இனம் தெரியாத ஆணின் உடலம் நேற்று மாலையில் கரையொதுங்கியது. புங்குடுதீவுக் கடற்கரையில் ஆணின் உடலம் கரையொதுங்கியுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், உடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

"உடலம் சுமார் 40 தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்டவருடையதாக இருக்கலாம் எனக்கருதப்படுகின்றது. உடலம் மிகவும் உருக்குலைந்து காணப்படுவதனால் அடையாளம் காண முடியாதுள்ளது. உடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-101)

## சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு இரவுப் பணியின்போது அச்சுறுத்தல்

சந்தேகத்துக்கிடமாக நடமாடியவரைப் பிடிக்க முற்பட்ட போது

உடுவிலில் சந்தேகத்துக்கிடமாக நடமாடியவரை பணியிலிருந்த சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள் பிடிக்க முற்பட்டபோது, அந்தச் சந்தேகநபர் மேலும் 5 பேரை வரவழைத்து சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததார் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தச் சந்தேக நபர்களில் 2 பேர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த அச்சுறுத்தல் காரணமாக சிவில் பாதுகாப்புக் குழுவினர் நேற்றுத் தொடக்கம் இரவு கண்காணிப்பு நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் உதயசூரியன் வீதியில் நேற்றுமுன்தினமிரவு சுமார் 11 மணியளவில் இந்த அச்சுறுத்தல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிவில் பாதுகாப்புக் குழுவினரும் பொதுமக்களும் சேர்ந்து இரவில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். திருட்டு, கொள்ளை உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அவ்வாறு செயற்படுகின்றனர்.

இந்த நிலையில் குறித்த வீதியில் ஒருவர் சந்தேகத்துக்கிடமாக நடமாடியுள்ளார். அதனால் அந்தப் பகுதியிலுள்ள நாய்கள் குரைத்ததில் சந்தேகம் கொண்ட பிரதேச மக்கள் குறித்த சிவில் பாதுகாப்புக் குழுவினருக்கு அறிவித்துள்ளனர். அதனையடுத்தே குறித்த பகுதிக்குச் சிவில் பாதுகாப்புக் குழுவினர் சென்றனர். சந்தேகத்துக்கு இடமாக நின்றிருந்தவரிடம் விசாரித்தபோது, அந்தப் பகுதியிலுள்ள கடை ஒன்றில் புகைபொருள் வாங்க வந்ததாகத் தெரிவித்தார். ஆனால் அந்தக் கடை இரவு சுமார் 8 மணியுடன் பூட்டப்பட்டுவிடும். அவரை மறித்து வைத்துக்கொண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருவதற்கிடையில் சந்தேகநபர் அலைபேசியில் அழைப்பை மேற்கொண்டு 5 பேரை அந்த இடத்துக்கு அழைத்துள்ளார். அந்த 5 பேரும் வந்தவுடன் 6 பேருமாகச் சேர்ந்து சிவில் பாதுகாப்புக் குழுவினரை அச்சுறுத்தியுள்ளனர்.

அவ்வாறு அச்சுறுத்தியவர்களில் 2 பேர் பிற மாவட்டங்களில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்று தெரியவந்ததாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர். அந்த நேரம் பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று சந்தேக நபர்களைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று வாய்முறைப்பாடு பெற்று அனுப்பியுள்ளனர். இந்தச் சம்பவத்தை அடுத்து இரவுப் பணியில் ஈடுபடும் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களும் பொதுமக்களும் அச்சமடைந் துள்ளனர். இதனால் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் நேற்றுப் பணிக்குச் செல்லவில்லை என்று பொதுமக்கள் தெரிவித்தனர். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரின் தகவலைப் பெறமுடியவில்லை. (வ-4)

## அதிவேகப் பாதையில் உச்சபட்ச வருமானம்

*நத்தாருக்கு முதல் நாள்*


கொழும்பு, டிசெ. 27

நத்தாருக்கு முதல் நாளான 24ஆம் திகதி மாத்திரம் தெற்கு அதிவேகப் பாதையின் மொத்த வருமானம் ஒரு கோடியே 98 இலட்சத்து 51 ஆயிரம் ரூபா எனவும், அன்றைய தினம் இந்தப் பாதையில் மொத்தமாக 59,782 வாகனங்கள் பயணித்திருப்பதாகவும் பாதையின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர் எஸ்.ஒப்பநாயக்க தெரிவித்திருக்கிறார்.

தெற்கு அதிவேகப் பாதை ஆரம்பித்தது முதல் கடந்த மாதம் 10ஆம் திகதி பெறப்பட்ட வருமானமே உச்சபட்ச வருமானமாகக் கணிக்கப்பட்டிருந்தது. எனினும், அன்றைய தினத்தை விட இம்முறை நத்தாருக்கு முந்தியதினம் கிடைத்த வருமானம் 13 இலட்ச ரூபாவாலும், வாகனங்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தாலும் அதிகரித்திருப்பதாக அவர் கூறினார்.

அன்றைய தினம் அதிகூடிய வாகனங்கள் கொழும்பிலிருந்து வெளியேறும் சுற்றுவட்டத்திலும் குறைந்தபட்ச வாகனங்கள் கொக்மாதுவ பிரவேச வாயிலிலும் பதியப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## புடவை விற்ற இந்தியர் வல்வெட்டியில் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 27

இந்தியாவில் இருந்து சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து சட்டவிரோத மாகப் புடவை வியாபாரம் செய்த குற்றச்சாட்டில் கைதான இந்தியர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

வல்வெட்டித்துறை சமரபாகு பகுதியில் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸார் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறிப்பிட்ட நபர் பொலிஸாரைக் கண்டதும் ஓடியுள்ளார். அவரைக் கைது செய்தபோது இந்தியாவில் இருந்து சுற்றுலா விசா மூலம் வந்து புடவை வியாபாரம் மேற்கொண்டு வந்தமை தெரிய வந்தது.

விசாரணைகளின் பின்னர் அவர் பருத்தித்துறை நீதிமன் றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (த-10,26)

## ஷஷி வெல்கமவின் மறியல் நீடிப்பு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவர் ஷஷி வெல்கமவின் விளக்கமறியலை ஜனவரி மாதம் 5ஆம் திகதி வரை, கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸ் நேற்று நீடித்துள்ளார். பஸ்களைக் கொள்வனவு செய்யும்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் 125 மில்லியன் ரூபா நிதி மோசடிக் குற்றச்சாட்டு தொடர்பில், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 20ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டிருந்தார். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொம்மைகள் மற்றும் நிழற்பாவை நாடகங்கள் நேற்று மேடையேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.27

நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களை முன்னிட்டு யாழ்ப்பாணம் செயல் திறன் அரங்க இயக்கத்தினால் தாயரிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பொம்மைகள் நாடகங்கள் நேற்று நல்லூரில் மேடையேறின.

சிறுவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட பொம்மைகள் மற்றும் நிழற்பாவை நாடகங்கள் நேற்று முதல் ஆங்கிலப் புதுவருட தினம்வரை இடம் பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்ட போதும் நேற்றய தினம் கலந்துகொண்ட சிறுவர்களுடைய ஆர்வம் காரணமாக மேலும் இரண்டு நாள்கள் நீடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.



சிறுவர்களுக்கு முற்றிலும் புதிய அனுபவங்களை நாடகங்கள் மூலம் வழங்கி வருகின்ற செயல் திறன் அரங்க இயக்கம் இந்த ஆண்டு புதிதாக முற்றிலும் வேறுபட்ட நாடக வடிவத்தில் சிறுவர்களுக்கான நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுகின்றது. தற்போது 'மழைக்காலத்தில் மழலைகளுக்கான பாவைகள் அரங்கு' தொனிப் பொருளில் நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. இதில் சிறுவர்களின் மகிழ் வுக்கு ஏற்றதான கதைகள் ஆற்றுகை செய்யப்படுகின்றன. (வ-21,ரி)

# போட்டி போடும் தனியார் பஸ்களின் வழித்தட அனுமதி இடைநிறுத்தப்படும்

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 27

போட்டித்தன்மையோடு செயற்படும் தனியார் பேருந்துகள் பற்றிய விவரங்களை அறியத் தந்தால், அவ்வாறு செயற்படும் பேருந்துகளின் அனுமதிப் பத்திரங்கள் இடைநிறுத்தப்படும் என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் நீண்டகாலமாக நிலவிவரும் நேர ஒழுங்கு பிரச்சினையை தீர்த்துவைக்கும் நோக்கோடு கடந்த சனிக்கிழமை மதியம் 1 மணியளவில் ஆனைக்கோட்டைப் பகுதிக்கு வருகை தந்த அமைச்சர், அங்கு வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் சம்மேளன தலைவர் எஸ்.சிவபரம், காரைநகர் மற்றும் இளவாலை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 782, 786 ஆகிய இரண்டு வழித்தடங்கள் உள்ளன. 786 வழித்தடத்தில் பயணிக்கும் பேருந்துகள் ஆனைக்கோட்டை சந்தியில் 782 வழித்தடத்தில் பயணிக்கும் பேருந்துகளுடன் இணைந்து பயணிக்கின்றன. இவ்வாறு இணையும் பேருந்துகள் ஒரே நேரத்தில் சந்திப்பதானால் அந்த பேருந்துகளுக்கிடையில் போட்டித்தன்மை ஏற்படுகின்றது. இதன் காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களைச் சந்திப்பதோடு, விபத்துக்கான சந்தர்ப்பங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு போட்டியிடும் பேருந்துகளின் அனுமதிப் பத்திரங்கள் இடைநிறுத்தப்படும். அவர்கள் ஒருபோதும் சேவையில் ஈடுபட முடியாது. போட்டித்தன்மையோடு செயற்படும் பேருந்துகள் பற்றிய விவரங்களை ஒன்றியத் தலைவர், ஊடக நேரக்கண்காணிப்பாளர்கள் எமக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அத்தோடு எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வடக்கு மாகாண எல்லைக்குள் போக்குவரத்து சேவை வழங்குகின்றவர்கள் எவரேனும் பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தகூடியவாறோ, ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவாறோ வீதி ஒழுங்குவிதிகளை மீறியோ அல்லது நேர ஒழுங்கு முறைகளை பின்பற்றாது சேவையில் ஈடுபடுவார்களேயானால் கடுமையாகத் தண்டிக்கப்படுவது மட்டுமல்லாது குற்றம் செய்கின்றவர்கள் எதிர்காலத்தில் போக்குவரத்து சேவையில் ஈடு படமுடியாதளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (வ-21)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### கூட்டமைப்புக்கு...

அவர் தெரிவித்ததாவது:

வரவு-செலவுத் திட்ட மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், அரசு வழங்கிய வாக்குறுதி உடனடியாக நிறைவேற்றவேண்டும்-என்றார்.

பன்னாட்டுச் சமூகத்துக்கு அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். காலம் தாழ்த்தக் கூடாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். அப்படி என்னதான் வாக்குறுதியை அரசு வழங்கியிருக்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது தொடர்பில் அறிந்திருக்க வாய்ப்பில்லை. பிரதமர் மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் இருவரும் நிச்சயம் அறிந்திருப்பார்கள். கடந்த அரசை வீழ்த்த முயன்ற சகலருக்கும் தெரிந்திருக்கும்.

தமிழ் பிரிவினைவாதிகளுக்கு வழங்கிய வாக்குறுதி என்ன என்பதை 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசு வெளிப்படுத்தவேண்டும் - என்றார். (த-5)

### மருத்துவபீடக்....

கட்டடத் தொகுதியானது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மேற்குப் பகுதியில் மருத்துவ பீடத்துக்கு ஒதுக்கப்பட்ட 4 பரப்புக் காணியில் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதி உயர்கல்வி அமைச்சின் 720 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்படவுள்ளது. 8 மாடிகளைக் கொண்ட இந்தத் தொகுதியில் மருத்துவபீடக் கற்கைநெறிகளுக்கான பல்வேறு அலகுகளும், மாணவர்களுக்கு கற்கைநெறி வழங்கக் கூடிய அலகுகளும் அமையவுள்ளன.

இந்தக் கட்ட அமைப்பு வேலைகள் முழுவதும் யாழ்ப்பாண மருத்துவபீட நிர்வாகத்தின் கீழ் அமையும். எனினும் நோயாளர் சேவை பிரிவுகள் இயங்கும் போது அவை முழுமையாக வைத்தியசாலைப் பணிப்பாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும்.

இந்தக் கட்டடத்தின் ஒரு தட்டில் அமைய இருக்கும் சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் ஆய்வுகூட வசதி பற்றி கருத்து முரண்பாடு எழுந்தது. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து சுமுகமான ஓர் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியைக் கட்டுவதற்கு வைத்தியர்களோ ஏனையவர்களோ முட்டுக்கட்டை ஏற்படுத்தவில்லை. இதனை அமைப்பதற்கு அனைத்து ஊழியர்களும் முழு ஆதரவை வழங்குவார்கள் - என்றார். (த-4,7)

### ஆழிப்பேரலை...

*வடமராட்சி கிழக்கு*

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவு உயிர்களைக் காவு கொண்ட வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில் பிரதான அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் உணர்வு பூர்வமாக உறவுகள் அஞ்சலி செய்தனர்.

நிகழ்வில் முதலில் தேசியக்கொடியை வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கனகேஸ்வரன் ஏற்றி வைக்க நினைவுத்தூபிக்கான மலர்மாலைகளை விருந்தினர்கள் அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவுகள் நினைவுச் சுடர்களை ஏற்றினர்.

உடுத்துறையில் நினைவுத்தூபி ஒன்றும் நினைவாலயம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளன. அதில் பல நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

உயிரிழந்த தமது குடும்ப உறவுகளுக்குப் படையல்கள் இட்டும் தீபங்கள் ஏற்றியும், கற்பூர ஆரத்தி செய்தும் மக்கள் அஞ்சலி செய்தனர்.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய பிரதேச செயலர் தனது உரையில், 'இந்த நினைவாலயத்தை ஒரு புனித பிரதேசமாக மாற்றப்பட வேண்டிய தேவையுள்ளது' என்றார்.

மருதங்கேணி பிரதேசசெயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாணசபை உறுப்பினர்களான கே.சயந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

*புதுக்குடியிருப்பு*

புதுக்குடியிருப்பில் ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்தில் உயிரிழந்த மக்களின் நினைவாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியும் நினைவு மண்டபமும் திறந்து வைக்கப்பட்டதுடன் உயிரிழந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்கள், மாவட்ட கணக்காளர், உறவுகள், நலன்விரும்பிகளெனப் பலரும் கலந்துகொண்டனர்.

*முல்லைத்தீவு*

முல்லைத்தீவு கடற்கரை வீதியில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்தில் உயிரிழந்தவர்களின் உறவுகள் பல்லாயிரக்கணக்கில் கூடி அஞ்சலி செலுத்தி சர்வமத ஆத்மசாந்தி பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

*வவுனியா*

வவுனியாவில் நரசிம்மர் ஆலயம் மற்றும் பூந் தோட்டம் சிறுவர் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத் தூபி முன்றிலில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதில் அரசியல்வாதிகள் பலர் கலந்துகொண்டனர்.

*மன்னார்*

மன்னார் மாவட்ட கலை, இலக்கிய பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குனர் ஏ.ரி.மோகன் ராஜ் தலைமையில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அங்கு ஒளி ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

*2 நிமிட அஞ்சலி*

சுனாமிப் பேரலையால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி மற்றும் பிரார்த்தனை நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு-கிழக்கு மாவட்ட செயலகங்களில் நேற்று முற்பகல் இடம்பெற்றன.

*சிற்பாலயம்*

தெல்லிப்பழை துர்க்கா புரத்தில் உள்ள சிற்பாலயம் கலைக்கூடத்திலும் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தனால் செதுக்கப்பட்ட சுனாமி சிற்பத்தின் முன்னால் இந்த அஞ்சலி நிகழ்வு நடந்தது. வரலாற்றுப் பதிவான சுனாமி சிற்பத்தின் முன்பாகச் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களது உறவிணர்கள், மற்றும் சிற்பக் கலைஞர் ஆனந்தனின் உறவினர்கள் மற்றும் பலர் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் பேராசிரியர்கள். விரிவுரையாளர்கள், கலைஞர்கள், லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

*தென்மராட்சி வலயம்*

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தீப ஒளியேற்றி நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் அலுவலகப் பணியாளர்கள், மதகுருமார் மெழுகு திரி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

*மட்டக்களப்பு*

மட்டக்களப்பு குருக்கள் மடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுனாமி நினைவுத்தூபி ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் நினைவு தீபங்கள் ஏற்றப்பட்டன.

(த-4,7,6,8,9,108,35,56,402,30,ரி)

### சீனாவுக்கு எதிராக முதல் முறையாக நாமல் களமிறக்கம்

அம்பாந்தோட்டையில் சீனாவின் திட்டங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமை தாங்கி நடத்தியுள்ளார்.

கைத்தொழில் வலயம் அமைப்பதற்கு சீனாவுக்கு 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை அம்பாந்தோட்டையில் வழங்கும் திட்டத்துக்கு எதிராகவே கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கடந்த சனிக்கிழமை காலையில் சீனத் திட்டங்களுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தது. இதன்போது, ராஜபக்சக்கள் கூட அம்பாந்தோட்டைக் காணிகளை சீனாவுக்கு வழங்கத் திட்டமிட்டிருந்தனர் என்றும், ஜனாதிபதித் தேர்தலுக்குள் அவர்களால் அதனைச் செய்ய முடியாது போனதாகவும் குற்றம் சுமத்தியிருந்தனர். இதனையடுத்தே நாமல் ராஜபக்ச தலைமையில் மற்றொரு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. முதல் முறையா கச் சீனாவின் திட்டத் துக்கு எதிராக ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பகிரங்கமாகப் போராட்டத்தில் இறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்களின்போது உயிரிழப்பை தடுக்க முன்னாயத்தம் அவசியம்

*யாழ். மாவட்டச் செயலர் வலியுறுத்து*

யாழ்ப்பாணம் டிசெ 27
இயற்கை இடர்களின்போது உயிரிழப்புக்களைத் தடுப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
சுனாமிப்பேரலையால்உயிரிழந்தவர்களின் நினைவு தினமும் தேசிய பாதுகாப்பு நிகழ்வும் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரம் வரையிலான மக்கள் சுனாமிப் பேரலை காரணமாக உயிரிழந்தனர். அத்துடன்இந்தநாட்டின்அனைத்து பிரதேசங்களிலும் சுனாமியின் தாக்கம் காரணமாகப் பல பாதிப்புக்களும் இழப்புக்களும் ஏற்பட்டன. சுனாமிப் பேரலையின் தாக்கத்தின் பின்னர் தான் தேசிய இடர் முகாமைத்துவம் நிறுவப்பட்டது. அத்துடன் நாட்டு மக்களிடேயே இயற்கை இடர்கள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படத்தொடங்கியது.
யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை சுனாமி இடரின் பின்னரும் எமது மக்களை வறட்சி, புயல்,வெள்ளம் போன்ற இடர்கள் தாக்கும் நிலமை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.
எனவே நாம் அனைவரும் இடர்களின் போது ஆபத்துக்களை குறைப்பது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.
மீனவர்கள் கடலில் மாயமாகும் துர்ப்பாக்கிய நிலமை எமது பிரதேசங்களிலும் இருக்கின்றது. அண்மையில் கூட மீன்பிடிக்காக சென்ற மீனவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். எனவே இவ்வாறான நிலமை இனிவரும் காலங்களில் ஏற்படாதவாறு மக்களும் விழிப்புணர்வுடன் இருப்பதுடன் அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் - என்றார்.
யாழ் மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரவி தெரிவிக்கையில்,
மக்கள் எங்கு இடர்கள் இடம்பெற்றாலும் 117 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எத்தகைய இடர் என உடனடியாகத் தெரிவிக்ககூடிய நிலை ஏற்படவேண்டும்.
ஏனெனில் எமது சமூகத்தில் இடர்கள் தொடர்பில் முழுமையான விழிப்புணர்வு காணப்படாத தன்மை காணப்படுகின்றது.
யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரையில் 14 இடங்களில் நிலப் பயன்பாட்டு வலயங்கள் உருவாக்கப்படாத தன்மை காணப்படுகின்றது.
யாழ்.மாவட்டச் செயலரின் வழிகாட்டலின் கீழ் இரண்டு முக்கிய விடயங்கள் தீர்க்கப்பட்டுள்ளன. செம்மணிப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட நீர்த் தடுப்புக் காரணமாக அங்கு ஏற்படும் வெள்ளப் பெருக்குதடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உடுத்துறைப் பகுதியில் இடர்கள் ஏற்படும் போது கடலை அண்டிய மக்கள் உடனடியாக வெளியேற உகந்த வகையில் புதிதாக வீதி அமைக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் அடுத்த ஆண்டு கண்டல் தாவரங்களை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (த-4,8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆலயத்தில் நீண்டகாலம்
சொற்பொழிவாற்றி வரும்
சிவானந்தவாரிதி, வாரியர் வாரிசு,
வண்டமிழ் வேந்தன்
சிவத்திரு.
**வ.குமாரசாமிஐயா**
அவர்களுக்கு 'வலிதெற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழாவில் **'ஞான ஏந்தல்'** என்னும் விருதினைப் பெற்றுக்கொண்டமைக்காகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் விருது வழங்கல் வைபவத்தில் **'கலாபூஷணம்'** விருதினைப் பெற்றுக் கொள்வதையிட்டும் மனம் மகிழ்வதோடு மேலும் பல விருதுகளைப் பெற்று வாழ எல்லாம் வல்ல வசந்தநாகபூசணி அம்மனை வேண்டி நிற்கின்றோம்.




*நிர்வாகி :-* ஏழாலை தெற்கு, வசந்தநாகபூசணி அம்பாள் தேவஸ்தானம், களபாவோடை வசந்தபுரம்

## எங்கள் தாத்தாவிற்கு இன்று 75 ஆவது அகவை



நவாலி வடக்கு அரசடியைச் சேர்ந்த
**கந்தசாமி மகேந்திரன்**
இன்று 27.12.2016 தனது இல்லத்தில் 75 ஆவது பிறந்தநாளை வெகுவிமர்சையாக கொண்டாடுகிறார். இவர் மேலும் பல்லாண்டுகாலம் வாழ களையோடை கண்ணகை அம்மன் துணை கொண்டு வாழ்த்துகின்றோம். 75

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## HARSHI MULTI PARK



**புதிய வகுப்புகள் ஆரம்பம்**
- அழகுக்கலை
- தையற் கலை
- கேக் ஐசிங்

சகல வகுப்புகளும் குறைந்த கட்டணத்தில் ஆம்பிக்கப்படவுள்ளன.
தகுதியான சான்றிதழ்களும் வழங்கப்படும்

தையல் வேலைக்கும் ஆள்கள் தேவை

(J. 7118)(13.17)

K.K.S.Road, Thellippalai T.P. 077 784 7591

## English Trainer Training Diploma (Teacher Training)

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்தை முழுமையாகவும் அடிப்படையிலிருந்து கற்க விரும்புபவர்களுக்கும்

- ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தை முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்
- " English Medium " மாணவர்களுக்கும்
- Speaking, Writing. Listening and Reading திறனை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்குமானது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் English Medium மாணவர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்கள் தெரிவு செய்கின்ற ஒரேயொரு கற்கைநெறி.

New Batches Start on 02.01.2017 9.00 a.m / 1.30 p.m Weekdays; 07.01.2017 9.00 a.m / 1.00 p.m Weekend

ELAS Sirpon Ramanathan Road, Thirunelveli, Jaffna. (பல்கலை எதிரில்)
T.P: 021 221 2410, 076 697 3040

## எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான

உ




**கலாநிதி லயன் நா.தனேந்திரன்**

அவர்களின் நாளைய (28.12.2016) புதன்கிழமை மங்களகரமான மணிவிழா சிறப்புற நிகழ
எனது அன்பு நிறைந்த பாராட்டு

**மணிவிழா நாயகன் லயன் நாகலிங்கம் தனேந்திரன் அவர்களே!**

உங்களுக்கு நான் வணக்கமும் வாழ்த்துக்களும் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்!
அன்பரே!
உங்களுடைய சமூக சேவைகள் பல கௌரவப் பட்டங்களைத் தந்து இலைமறை காயாக இருந்த தங்களை வெளிக்கொணர்ந்து பல உயர்வுகளைத் தந்துள்ளன.
நாளை நிகழ்கின்ற மங்களகரமான மணிவிழா நாளில் மக்கள் போற்றும் யாழ். மைந்தனாகப் பார்க்கும்போது என்னுடைய மனம் மிகவும் மகிழ்ந்து பூரிப்படைகின்றது. அத்துடன் நாளைய மணிவிழா சிறக்கவும் தங்கள் சமூக சேவைகள் மேலும் நன்கு தொடரவும், ஈழத்துச் சிதம்பரத்தில் குடிகொண்டிருக்கும் ஆண்டிகேணி ஐயனாரை வேண்டி நிற்கின்றேன்.
- கலாநிதி லயன் கனகசபை சுந்தரலிங்கம் (காரைமணிகண்டன்),
சமாதான நீதிவான்கள் அமைப்பின் காரைநகர் பிரதேச அமைப்பாளர்.

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை


Table mat - ~~2400~~/= - 1550/=


Kitchen Rack - ~~2000~~/= - 1450/=


Iron Board - ~~1300~~/= - 990/=


மெத்தை ~~2600~~/= 2250/=


பிரம்பு செற் ~~16500~~/= 14750/=


லெதர் சோபா செற் (டீபோ இலவசம்) ~~41400~~/= 36500/=


6 கதிரை ரீப்போ ~~5500~~/= 4000/=


ஸ்ரீல் அலுமாரி ~~10999~~/= 8750/=


6X4 கட்டில் ~~10500~~/= 8750/=


TV ஸ்டான்ட் ~~10750~~/= 8500/=

இல.230, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911, 076 821 9415, 077 358 3879


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிந்து வாழ்வாதாரத்தைத் தேடும் நிலையில் குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்கள்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.27

நாட்டில் ஏற்பட்ட கொடிய போர் அடிப்படை நிலைகளையே ஆட்டம் காணச் செய்ததன் காரணத்தால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையில் பெண்கள் தமது குடும்பத்திற்குத் தலைமை தாங்கி வாழ்வாதாரத் தேடல்களை மேற்கொள்ள வேண்டியவர்களாக வலிந்து ஈடுபடவேண்டி வந்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச சபை அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற பெண்களைத் தலைமைத்துவமாக கொண்டு கடற்றொழிலில் ஈடுபடும் குடும்பங்களுக்கான சிறியரக வள்ளங்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெண்கள் பொதுவாகவே மென்மையானவர்கள். அவர்களின் உடல்வாகம் மென்மையான தொழில்களுக்கு ஏற்ற உடல் கட்டமைப்பையே கொண்டது.

இவ்வாறான பெண்கள் காலத்தின் கட்டாயத்தால் தமது பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற முனைப்பில் தோட்ட உடல் வெயிலில் வாடி, மழையில் நனைந்து, பனியில் கூதல் எடுத்து எல்லாத் தட்ப வெப்பங்களுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய தொழில்களை அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இங்கு அவர்கள் செய்கின்ற தொழில்களை சற்று இலகுவாக்கும் நோக்கிலேயே இந்தச் சிறியரக மிதவைகளை காரைநகர், ஊரிக்காடு மற்றும் அராலித்துறைப் பகுதிகளில் இறால் பிடிப்புத் தொழிலில் ஈடுபடும் விதத்தில் வழங்குகின்றோம்.

ஒவ்வொன்றும் சுமார் ஒரு லட்சத்து 7ஆயிரத்து 500 ரூபா மற்றும் 74 ஆயிரத்து 25 ரூபா பெறுமதிகளில் கொள்வனவு செய்யப்பட்டவை.

இந்தப் பயனாளிகள் தெரிவு மகளிர் விவகார அமைச்சு மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஆகியோரின் பரிந்துரையில் காரைநகர் பிரதேச சபை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் ஆராயப்பட்டு அவர்களின் தேவைப்பாடு மற்றும் உண்மைத் தன்மை, குடும்ப நிலவரம் ஆகியன உறுதிப்படுத்தப்பட்டே இந்த உபகரணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது.

தரும் உபகரணங்களை பயனாளிகள் உரியவாறு பாதுகாத்து பயனடைய வேண்டும். இன்று வழங்கப்படுகின்ற இந்த சிறியரக வள்ளங்கள் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 22 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு அவர்களின் வீட்டில் உலை ஏறுவதற்கு உதவுகின்ற ஒரு நிகழ்வாக அமைகின்றது. இந்த வள்ளங்களைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் அவற்றின் உதவியுடன் தங்கள் தங்கள் குடும்ப வருமானங்களைப் பெருக்குவதற்கு முயற்சி செய்யுங்கள் - என்றார். (வ-21)



# வீதியில் சரிந்து வீழ்ந்தது யாழ். ரெலிக்கொம் கோபுரம்

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ்ப்பாணம், பண்ணையில் அமைந்துள்ள தொலைத் தொடர்புக் கோபுரம் (சிறிலங்கா ரெலிக்கோமின்) நேற்று மாலை யாழ்ப்பாணம் – தீவகம் வீதிக்குக் குறுக்கே சரிந்து வீழ்ந்தது. அதனால் அந்த வீதி ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டது.

"கோபுரத்தை கழற்றும் பணி கடந்த ஒரு மாதமாக நடைபெற்றுவந்தது. சுமார் 180 மீற்றர் உயரமான இந்தக் கோபுரத்தை முற்றாக இறக்கி சீரமைப்புச் செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. அதில் சுமார் 60 வீதமானவை கழற்றி முடிக்கப்பட்டது. மிகுதியாக இருந்த சுமார் 60 மீற்றர் வரையான கோபுரமே சரிந்து விழுந்தது" என்று தெரிவிக்கப்பட்டது.

கோபுரத் திருத்த வேலைகள் நடைபெற இருப்பதனால் அந்தப் பிரதேசத்தில் எப்போது வேண்டுமானாலும் இப்படி ஒரு சம்பவம் நடைபெறலாம் என்று முன் கூட்டியே அந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதனால் ஒரு சில அலுவலகங்கள் வேறு பிரதேசத்துக்கு மாற்றப்பட்டிருந்தன. தொடர்புக் கோபுரம் வீழ்ந்த இடத்துக்கு அண்மையில் யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய நிலையம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகக் கட்டடத்தின் சிறிய பகுதியும், மதிலும் சேதமடைந்துள்ளன. வீதிக்கு எதிர்ப்பக்கமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த தொலைபேசித் தூண்களும் சேதமகியுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கோண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பில் சிறிலங்கா ரெலிகொமின் பிராந்திய முகாமையாளரின் பதிலைப் பெற முடியவில்லை. (வ-4,ரி)

# இளையோரின் விழிப்புணர்வுக்கு வவுனியாவில் நேற்று வீதி நாடகம்



வவுனியா, டிசெ.27

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய ஆர்.டி.எப். நிறுவனத்தின் ஏற்பாட்டில் தொழிற்பயிற்சி தொடர்பிலான விழிப்பூட்டல் வீதி நாடகம் நேற்றையதினம் வவுனியா செட்டிகுளம் வீரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

"நவீனத்துவமடைந்துவரும் இன்றைய உலகில் வேலையில்லாப் பிரச்சினையை குறைத்துக் கொள்ளவேண்டும். இளையோரை எதிர்கால உலகுக்கு செயற்றிறன் மிக்கவர்களாக மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும். அவர்களின் எதிர்காலத்தை வளம்மிக்கதாக மாற்றிக்கொள்வது அவசியம். தொழிற்பயிற்சி மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் கிராமப்புற மக்களையும் இளையோரையும் தெளிவூட்டும் வகையிலும், நேரடியாக மக்களை அவர்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று விழிப்பூட்டுவதற்காகவும் வீதி நாடக விழிப்புணர்வு செயற்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் இணைப்பாளர் திரு.பாலச்சந்திரன் சிந்துஜன் தெரிவித்தார்.

அத்துடன் கிராமங்கள் தோறும் தொடர்ச்சியாக இவ்வாறான விழிப்பூட்டல் நாடகங்கள் ஆர்.டி.எப் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (வ-21)

# மோட்டார் சைக்கிள் வியத்தில் சிறுவனும் இளைஞனும் காயம்

## சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, டிசெ. 27

வீதி வளைவால் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிள் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மற்றும் சிறுவன் ஆகிய இருவரும் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது. கச்சாய் வீதி சாவகச்சேரியை சேர்ந்தவர்களான அருளப்பு அஜந்தன் (வயது-23) என்ற இளைஞனும், சந்திரசேகர் டிலக்ஸன் (வயது-11) என்ற சிறுவனுமே விபத்தில் காயமடைந்தனர்.

"நேற்று முன்தினம் மதியம் சாப்பாட்டுக்குச் சென்ற இளைஞன் வீதயில் நின்ற 11 வயதுச் சிறுவனை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ளார். வீதியின் வளைவில் முச்சக்கர வண்டி நிற்கவே, அதனை முந்திச்செல்ல முற்பட்ட வேளையில், எதிரே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து ஏற்பட்டது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இளைஞனும் அழைத்துச் சென்ற சிறுவனும் காயமடைந்தனர். இவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தை அறிந்த அஜந்தனின் தந்தை, விபத்தில் சிக்கிய மற்றை மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவிரின் வீட்டுக்குச் சென்று விசாரித்துள்ளார். அங்கு கைகலப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக விபத்தில் சம்பந்தப்பட்டவர், இளைஞனின் தந்தை தனது வீடு தேடிவந்து தாக்கினார் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இதனையடுத்தே அஜந்தனின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவரது தந்தையை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21,9)

## சாவகச்சேரி வைத்தியசாலையில்

# விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு கட்டட நிர்மாணப் பணி நிறைவு

சாவகச்சேரி, டிசெ.27

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட விபத்து அவசரப் பிரிவுக்கான மூன்று மாடிக் கட்டடத் தொகுதி வேலைகள் நிறைவடைந்த நிலையில் சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது என்று என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு சுகாதார அமைச்சினால் ஏ-9 வீதியுடன் இணைந்துள்ள வவுனியா பொது வைத்தியசாலை மற்றும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைகளில் தலா 200 மில்லியன் ரூபா செலவில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க 2015ஆம் ஆண்டில் மாகாண சுகாதார அமைச்சிடம் நிதி வழங்கப்பட்டது.

மாகாண சுகாதார அமைச்சினால் இந்த வேலைத்திட்டம் மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டன. முதற் கட்டமாக கட்டடம் அமைக்கும் பணிகள் ஒப்பந்ததாரரிடம் கையளிக்கப்பட்டன. அந்த வேலைகள் நிறைவடைந்துள்ளன. அடுத்தகட்ட வேலைகளாக கட்டடத்திற்கான மின் இணைப்பு உட்பட ஏனைய உள்ளக வேலைகளும் மூன்றாவது வேலைத்திட்டமாக சிகிச்சைப் பிரிவுகளுக்கான உபகரணங்கள் கருவிகள் இணைக்கப்படுவதும் இடம் பெறவுள்ளன.

மாகாண சுகாதார அமைச்சரின் முயற்சியினால் வவுனியா பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு வேலைகள் முழுமையாக நிறைவு செயற்படும் நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# உதவிப் பொருள்கள் கையளிப்பு

முன்னாள் தமிழக முதல்வர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். இன் 29ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று சாந்தை விநாயகர் பொது மைதானத்தில் கலந்துரையாடலும், உதவிப்பொருள்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வு இன்று மாலை 4 மணிக்குக் கழகத் தலைவர் நா.முருகானந்தம் தலைமையில் இடம்பெற உள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட்டும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தனும், வடக்கு மாகாண. எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத் தலைவர் வ.இ.செல்வகுமாரும் கலந்துகொள்கின்றனர்.

எம்.ஜி.ஆர் இன் 29ஆவது நினைவு தினத்தில் குறித்த பகுதிகளுக்கு உட்பட்ட பெற்றோரை இழந்த 29 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன. (வ-21)

# 'வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல்' கவிதை நூல் வெளியீடு

செ.கஜானனின் 'வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல்' கவிதை நூல் வெளியீடு பளை பிரதேச சபை மண்டபத் தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும், கௌரவ விருந்தினர் களாக பளை அறத்தி [illegible] பிரபாகரக்குருக்கள் [illegible] பங்குத் தந்தை அருட்திரு அ. சில்வஸ்ரர்தாஸ், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி. அ.ஜெயராணி, கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், பளை பிரதேச மருத்துவ அதிகாரி சி.சிவரூபன், கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி.பி. மதுரநாயகம், கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வே.இறை பிள்ளை, கவிஞர் சுப. சிந்துதாசன், பளை பொலிஸ் அதிகாரி எஸ். உபாலிமினிப்புர ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கலை நிகழ்வுகளாக செல்விகள் ப.மதுசா, இ.விதுசா ஆகியோரின் வரவேற்பு நடனம், வரவேற்புரை, ஆசியுரை, தலைமையுரை, நூல் வெளியீடு, முதல், சிறப்புப் பிரதிகள் வழங்கல், நூல் ஆய்வுரை, நவீன கண்ணம்மா நடனம், முதன்மை, சிறப்பு விருந் தினர்களின் உரைகள், நூலாசிரிய ரின் ஏற்புரை என்பன இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுத்தைக் குட்டி மன்னாரில் மீட்பு

மன்னார், டிசெ.27

மன்னார் அடம்பன் பிரதேசத்தில் அனாதரவான நிலையில் நடமாடிய சிறுத்தைக் குட்டி ஒன்று மீட்கப்பட்டு அனுராதபுரம் வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் அடம்பன் பிரதேசத்தில் நேற்றையதினம் அனாதரவான நிலையில் காணப்பட்ட குறித்த சிறுத்தைக்குட்டியை மன்னார் பொலிஸ் அதிகாரிகள் மீட்டனர். அந்தக் குட்டி அனுராதபுரம் வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. குறித்த சிறுத்தைக்குட்டி நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருப்பதாக அனுராதபுரம் மற்றும் வடமேல்



பிராந்தியத்திற்கு பொறுப்பான கால்நடை மருத்துவர் சந்தன ஜயசிங்க தெரிவித்தார். (வ-21)

# சக பணியாளரின் காதுக்குள் கத்தரிக்கோலால் குத்தினார் புடைவைக் கடைச் சிப்பந்தி

சாவகச்சேரி, டிசெ. 27

காதுக்குள் கத்தரிக்கோலால் குத்தப்பட்டு படுகாயமடைந்த நிலையில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

"சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள புடைவை விற்பனை நிலையத்தில் நேற்றையதினம் உரிமையாளர் இல்லாதவேளையில் கடையில் பணிபுரியும் இரு சிப்பந்திகளிடையே தகராறு ஏற்பட்டது. இது சிறிது நேரத்தில் மோதலாக மாறியது. கடையில் காணப்பட்ட கத்தரிக்கோலை எடுத்து சக சிப்பந்தியின் காதினுள் மற்றைய சிப்பந்தி குத்தியுள்ளார். இதனால் படுகாயமடைந்த சிப்பந்தி வாய், மூக்கு மற்றும் காது வழியாக குருதி வெளியேறியநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவத்துடன் தொடர்புடைய மற்றையவர் கைது செய்யப்பட்டார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்தவர் முதலில் சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். மருத்துவ அதிகாரி சிகிச்சை வழங்கிக் கொண்டிருந்த வேளையில் அவரது வாய், மூக்கு, காது போன்ற உறுப்புகளால் குருதி வெளியேறியது. இதனால் காயமடைந்தவரை உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்குமாறு அவரை அழைத்துச் சென்றவர்கள் கூறியுள்ளனர்.

நோயாளிக்கு பெரியளவில் காயம் ஏற்படாதபோதிலும் வைத்தியசாலை நடைமுறைக்கேற்ப விடுதியில் அனுமதித்து அங்கிருந்துதான் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டுமென மருத்துவ அதிகாரி கூறியுள்ளார். இதனை ஏற்காத உறவினர்கள் வைத்தியசாலையில் பதிவுகளை மேற்கொள்ளாமல் காயமடைந்தவரை தமது வாகனத்தில் ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு சென்றனர் என்று சாவகச்சேரி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (வ-21,9)



# எழுச்சியுடன் வளர்ந்து வருகிறது தமிழீழம்

## இந்திய இசையமைப்பாளர் கிளிநொச்சியில் தெரிவிப்பு

தனக்கே உரித்தான தன் எழுச்சியுடன் தமிழீழம் எழுந்து வந்து கொண்டிருக்கின்றது. அதை உலகம் தெரிந்து கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை.

இவ்வாறு இந்திய இளம் இசையமைப்பாளர் இரா. நா.வசந்த் தெரிவித்தார்.

செல்வி பி.ஜோ. ஹேமாஷிரோனியின் அகினதூரிகை கண்காட்சியும், புத்தக வெளியீடும் நேற்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

"ஈழத் தமிழ் சொந்தங்களின் ஈடற்ற தன் முயற்சியினால் ஏழே ஆண்டுகளில் துடித்தெழுந்து இருக்கின்றது கிளிநொச்சி மாநகரம். எறிகணைக் குண்டுகளால் புல் பூண்டு முளையாதிருந்த மண்ணிது. நம்மவர் உழைப்பால் இன்று மலர்ந்திருக்கிறது.

நமக்கான பாடத்தை நம்மிடமிருந்தே கற்றுக்கொள்ள செய்திருக்கிறது பேரியற்கை. இந்த மண் ஒவ்வொன்றும் ஆவணப்படுத்தப்பட வேண்டிய மிக பெறுமதி மிக்கது. உலகில் எந்த மண்ணுக்கும் இல்லாத பெருமை இந்த மண்ணுக்கு இருக்கின்றது. வரும்போது பெரும் பாரத்துடன் வந்தேன். செல்லும் போது மிகுந்த மன நிறைவுடன் செல்லப்போகிறேன். தனக்கே உரித்தான தன் எழுச்சியுடன் தமிழீழம் எழுந்து வந்து கொண்டிருக்கின்றது. அது உலகம் தெரிந்து கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை" என்று இசையமைப்பாளர் இரா.நா.வசந்த் தெரிவித்தார். (வ-21,35,6)

# கிரவல் மண் அகழ்ந்தவர்களே குழிகளை நிரப்பவேண்டும்

*மாந்தை கிழக்கு பிரதேச செயலர் அறிவுறுத்து*

வன்னிவிளாங்குளம் பகுதியில் ஒப்பந்தகாரர்களால் கிரவல் மண் அகழ்ந்த குழிகளுக்கு அவர்களே மண் போட்டு நிரப்ப வேண்டும். மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வன்னி விளாங்குளம் கிராமத்தில் கிரவல் மண் அகழப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை முறையற்ற வகையில் நடைபெறுவதாக அதிருப்தி வெளியிட்ட பொதுமக்கள், இது தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசாவிடம் முறையிட்டிருந்தனர்.

இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் கிரவல் மண் அகழ்வு நடைபெறும் இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார். இதுதொடர்பில் அவர் பிரதேச செயலாளரிடம் விளக்கம் கோரியிருந்தார்.

இந்த நிலையில் வன்னிவிளாங்குளம் கிராமத்துக்கு சென்ற மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், இதுவரை கிரவல் மண் அகழப்பட்ட குழிகள் மண்ணை அகழ்ந்தவர்களால் நிரப்பிக் கொடுக்கப்படும். இல்லையேல் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் கிரவல் மண் அகழ்வதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது. எவரும் தமது காணிகளை கிரவல் மண் அகழ்வதற்காக, அதனை விற்பனை செய்ய முடியாது என்று மக்களிடம் தெரிவித்தார். (வ-7)

# சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 12 வருடங்கள் கடந்தும் உதவிகளில்லை

*சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு*

வவுனியா, டிசெ.27

எமது நாட்டில் 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் 12 வருடங்கள் கடந்தும் இன்று வரையில் மீளப் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. காணி, வீடுகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தினரால் நேற்றையதினம் நடத்தப்பட்ட ஆழிப்பேரலையில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு நினைவு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தங்களுக்கான வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை, தங்களுக்கான வாழ்வாதாரம் கிடைக்கவில்லை என எங்களிடம் பலர் வருகின்றார்கள். இந்தப் 12 வருடகாலம் கடந்த நிலையில்கூட சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றது. போருக்கு அப்பால் பேரிடரில் பாதிக்கப்பட்டிருந்தும்கூட பலருக்கு அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அரசுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது. சுனாமியினாலும், போரினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனவர்களுக்கான வாழ்வாதார அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

அதே நேரத்தில் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வை எட்டவேண்டிய தேவையும் இருக்கின்றது. ஆனால் மாறாக எங்களுடைய நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்கள் எங்கள் எல்லோருக்கும் கவலையளித்துக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக மட்டக்களப்பில் இருக்கின்ற பௌத்த துறவி ஒருவர் நடத்தும் அடாவடிகளுக்கு துணைபோகின்ற வகையில் நீதி அமைச்சர்கூட பேசியிருக்கின்றார். இப்படிப்பட்ட ஒரு நிலையிலே பல ஆயிரக்கணக்கான மக்கள் சுனாமியாலும் போராலும் உயிர் நீத்திருக்கின்றார்கள். ஆகவே பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு இந்த அரசு முழுமையான உதவித் திட்டங்களை வழங்கவேண்டியதுதான் அவர்களுக்கு நாங்கள் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலியாக இருக்கும்-என்றார்.

"வடக்கைப் பெறுத்தவரையிலே போராட்டக் குணங்களைக் கொண்ட தமிழ் இனமாக நாங்கள் இருந்தாலும், 2004ஆம் ஆண்டு சுனாமிப்பேரலை ஏற்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகள் தெற்கு வரைக்கும் சென்று தங்களது உதவிகளை - தங்களது மனித நேயத்தை இந்த இலங்கைப் பேரினவாதத்துக்குக் காட்டியதை நாங்கள் மறந்துவிட முடியாது. சுனாமியால் வவுனியாவிலிருக்கின்ற உறவுகளுக்கும் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் தங்களுடைய உறவுகள் உயிர்நீத்த இடங்களிலே தமது அஞ்சலிகளைச் செலுத்த முடியாவிட்டாலும், வவுனியா மாவட்டத்திலுள்ள இந்த நினைவுத்தூபி அமைந்திருப்பது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். 2004ஆம் ஆண்டு உயிரிழந்த உறவுகளுக்கு எம் இனம் சார்ந்து சாராத அனைத்து உறவுகளுக்கும் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயூரன் தெரிவித்தார். (வ-21,402)

# வருகின்ற திட்டத்தைச் செய்யத் தவறிவிட்டு ஒன்றுமே கிடைக்கவில்லை என்பது தவறு

*அதிகாரிகளுக்கு சிவமோகன் எம்.பி அறிவுரை*

முல்லைத்தீவு, டிசெ. 27

முல்லைத்தீவுக்கு என்று வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டு மாவட்டத்துக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை என அதிகாரிகள் தெரிவிப்பது தவறு.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த 19ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 21 மில்லியன் ரூபா நிதியில் நெல் சேமிப்புக் களஞ்சியம் அமைக்கப்படுவதாக இருந்தது. தற்போது அதற்குரிய பணிகள் எத்தகைய நிலையில் உள்ளன. விளக்கம் தேவையாக உள்ளது. அதற்கான விளக்கங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கேட்டுக்கொண்டார்.

"நெல் களஞ்சியம் அமைப்பதற்காக 21 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 6 மில்லியன் ரூபா கிடைத்திருந்திருந்தது. நிர்மாணிப்பதற்காக கேள்வி மனுக் கோரப்பட்டது. ஆனால் ஒருவரிடம் இருந்து மட்டுமே விண்ணப்பம் கிடைத்திருந்தது. அதனை தொழில் நுட்ப பகுதிக்கு அனுப்பப் பட்டவேளை, அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது" என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

மாவட்டச்செயலாளருடைய பதிலை அடுத்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், முல்லைத்தீவுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்கின்றீர்கள். ஆனால் நாங்கள் தந்த வேலைத்திட்டத்தை செய்யாது விடுகின்றீர்கள் - செய்யவில்லை எனச் சொல்கின்றார்கள். எனவே இவ்வாறு கேள்வி மனுக் கோரலில் பிரச்சினைகள் இருந்தால் தயவு செய்து ஒருங்கிணைப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்களும் அதனுடன் இணைந்து செயற்படுவோம் - சில பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம் என்றார். (வ-21,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கிளிநொச்சியில் சேவையாற்ற பின்னிற்கும் தமிழ் மருத்துவர்கள்

## மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை விசனம்

யாழ்ப்பாணம் டிசெ 27

தமிழ் மருத்துவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சென்று கடமைகளைச் செய்யப் பின்னடிக்கிறார்கள். அவர்கள் அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறவேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசு பதிப்பிள்ளை குற்றம்சாட்டினார்.

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சிப் பிரதேசத்தில் மாவட்ட ரீதியில் வருடாவருடம் மருத்துவத் துறைக்கு 5 பேர் வரை செல்கின்றனர். இவர்கள் மாவட்ட ரீதியில் தான் செல்கின்றார்கள். தேசிய ரீதியில் செல்வதில்லை. அப்படியிருந்தும் அவர்கள் ஏன் பின்னடிக்கின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை.

இந்த வருடம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு 19 சிங்கள மருத்துவர்களும் 2 தமிழ் மருத்துவர்களுமே கடமைக்கு வந்துள்ளனர். அங்கு கடமையாற்றும் சிங்கள மருத்துவர்கள் நோயாள்ர்களுடன் பணிவுடனும் அன்புடனும் பழகுகின்றனர். இதனைப் பார்க்கும்போது மிகவும் சந்தோசமாக இருக்கின்றது.

எங்கோ இருந்து வந்து எமது பிரதேசத்தில் இவ்வளவு அக்கறையுடன் மருத்துவம் பார்க்கும்போது, எமது பிரதேசத்தில் உருவாகும் தமிழ் மருத்துவர்கள் ஏன் இங்கு வரப் பின்னடிக்கின்றனர்?

இதுதவிர, கிளிநொச்சி வைத்திய சாலைக்குச் செல்லும் சில பிரதான வீதிகள் திருத்தப்படாத நிலமை காணப்படுகின்றது. அதனால் கர்ப்பிணிப் பெண்கள், நோயால் அவதிப்படுபவர்கள், விசக்கடிக்கு உள்ளானோர் போன்றோரைக் காப்பாற்ற முடியாத நிலமை காணப்படுகின்றது. இதனால் சாவுகளும் அதிகரித்துள்ளன- என்றார்.

குறித்த சில வீதிகள் திருத்தப்பட்டுள்ளன. மற்றைய வீதிகளையும் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். (த-4,8)



தொண்டர்நாள்தொறும் துதிசெய்யவருள்செய் கேதீச்சரமதுதானே
திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபை

### நிர்வாக அலுவலர் தேவை

திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபைக்கு கொழும்பில் இருந்து பணியாற்றக் கூடிய சேவை மனப்பான்மையுள்ள, நிதி நிர்வாகத்தில் அனுபவமுடைய ஒரு நிர்வாக அலுவலர் தேவை. விண்ணப்பதாரர் கடமையுணர்வுடன் பணிபுரியக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். தேவையேற்படின் திருக்கேதீச்சர ஆலயத்திலும் தங்கியிருந்து சேவையாற்ற தயாராகவிருக்க வேண்டும். சுயவிபரக்கோவையுடன் விண் ணப்பிக்கவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

விண்ணப்பங்களை 02/01/2017 ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு/ மின்னஞ்சலுக்கு/ தொலைநகலுக்கு அனுப்பவும்.

தலைவர்
அறங்காவலர் சபை
திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபை
சரஸ்வதிமண்டபம், இல 75,லோரன்ஸ் வீதி,கொழும்பு 4.
மின்னஞ்சல்:<careerscmb3@gmail.com>
தொலைநகல்: 011 2371111

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் பகிரங்க ஏல அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட, கீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக்கடைகள், என்பவற்றை 2017/01/01ஆம் திகதிதொடக்கம் 2017/12/31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 2016/12/30 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏலம் கோரப்பட உள்ளது.

மேற்படி ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் மீளளிக்கப்படாத தொகையாக ரூபா 102.00 இனையும் (NBT 2% உள்ளடங்கலாக) மீளளிப்புத் தொகையாக ரூபா 5000.00 இனையும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 2016/12/30 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்பாக வைப்புச் செய்து மேற்படி ஏலத்தில் பங்குகொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| | மானிப்பாய் பட்டின உபஅலுவலகம் |
| 01 | மானிப்பாய் மரக்கறிச் சந்தை (பழைய மீன் சந்தைக் கட்டடம் தவிர) |
| 02 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக் கடை (புதியகட்டடத் தொகுதி) |
| | மானிப்பாய் கிராம உபஅலுவலகம் |
| 03 | நவாலி பிரசாத் சந்தை |
| 04 | ஆனைக்கோட்டைகோழி இறைச்சிக் கடை (அமைவிடம் தாங்களே தெரிவுசெய்தல் வேண்டும்) |
| 05 | ஆனைக்கோட்டை ஆட்டிறைச்சிக் கடை (அமைவிடம் தாங்களே தெரிவுசெய்தல் வேண்டும்) |
| 06 | காக்கைதீவு பொதுச்சந்தை சிற்றுண்டிச்சாலை |
| | பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம் |
| 07 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கோழி இறைச்சிக் கடை |
| 08 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை |
| | பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் |
| 09 | மாகியப்பிட்டி பொதுச்சந்தை |
| 10 | இளவாலை பொதுச்சந்தை |
| 11 | இளவாலை பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை |
| 12 | மாதகல் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை |

திரு.கு.சற்குணராசா
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை,
மானிப்பாய் (0212255381)
27.12.2016
(சி.27272)(13.17)

# முல்லைத்தீவில் தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 27

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை முல்லைத்தீவு மாவட்டத்தில் என்.வி.கியூ. தரத்திலான கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளதாக அதன் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில்,

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், தையல், வெதுப்புநர், அழகுக்கலையும்சிகையலங்காரமும், அலுமினியம் பொருத்துநர், கணினி வன்பொருள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் வாக னம்திருத்துநர் ஆகியகற்கைநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிகள் முல்லைத்தீவு, ஒட்டு சுட்டான், பாலிநகர் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற இருக்கின்றன.

இந்தக் கற்கைநெறிகளைக் கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகத்தில் அல்லது மாந்தை கிழக்கு, முல்லைத்தீவில் அமைந்துள்ள பாலிநகர் தொழிற்பயிற்சி நிலையத் தில் அல்லது 14ஆம் கட்டை, மாங்குளம் வீதி முல்லைத்தீவில் அமைந்துள்ள ஒட்டு சுட்டான் தொழிற்பயிற்சி நிலையத்தில் செய்ய முடியும். பயிற்சிநெறிகள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளன-என்றார். (த-10)

### தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் NO-தகடு NP-0163 கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. இதைக்கண்டு எடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

076 675 7472, 075 520 2614

### பெண் உதவியாளர் தேவை

லண்டன் பிரஜாஉரிமை பெற்றவர்களும் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டவர்களும் தற்போது இந்தியாவில் வசித்து வருபவர்களுமான குடும்பத்தினரின் 16 வயதினை உடைய இந்தியாவில் படிக்கும் ஒரேமகளுக்கு உதவியாக இருக்க 20 - 30 வயதிற்கு இடைப்பட்ட பெண் உதவியாளர் தேவை. இந்தியாவிற்கு செல்வதற்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். சம்பளமாக 20,000 - 25,000 ரூபா வரை வழங்கப்படும்.

077 021 0255/ 077 175 5720

# 40 வருடங்களுக்கு மேல் சீரின்றி அச்சுவேலி தொழிற்பேட்டை வீதி

## மாணவர்கள், பாதசாரிகள் பெரும் சிரமம்

அச்சுவேலி,டிசெ.27

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை வீதி 40 வருடங்களுக்கு மேலாக திருத்தி அமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. வீதியில் காணப்படும் பெரிய குழிகளில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் வீதியைப் பயன்படுத்த முடியாமல் பல சிரமங்களுக்கு உள்ளாவதாகக் கவலை தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவிக்கையில்,

"அச்சுவேலி-சங்கானை வீதியையும், அச்சுவேலி இராச வீதியையும் இணைக்கும் இரண்டு கிலோ மீற்றர் அளவுகொண்ட கைத் தொழிற் பேட்டை வீதி நீண்ட காலமாகத் திருத்தி அமைக்கப்படாமல் உள்ளது. அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிவோர், அச்சுவேலி அரசினர் கோழிப் பண்ணை மற்றும் அச்சுவேலி பூங்கனி இயல் கருமூலவள நிலையம், செல்வநாயகபுரம் குடியேற்றத்திட்டம், குட்டியப்புலம் ஆகிய பகுதிகளுக்குச் செல்வோர் மற்றும் விவசாயிகள் மேற்படி வீதியை நாளாந்தம் பயன்படுத்தி வருகின்றனர்.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்ட 1977ஆம் ஆண்டு காலப் பகுதியில் கைத்தொழிற்பேட்டையை மையமாகக் கொண்டு இரண்டு பிரதான வீதியையும் இணைக்கும் வகையில் இந்த வீதி அமைக்கப்பட்டது. இந்த வீதியைத் திருத்தி அமைக்குமாறு அச்சுவேலி மேற்கில் உள்ள பொது அமைப்புக்கள் எழுத்து மூலம் மனு சமர்ப்பித்துக் கோரிக்கை விடுத்ததோடு தூதுக் குழுக்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களை நேரில் சந்தித்து வலியுறுத்தி வந்துள்ளன.

இந்த வீதி வலி. கிழக்குப் பிரதேச சபைக்கா அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கா அல்லது வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கா சொந்தமானது. யார் இந்த வீதியை நிர்மாணிப்பது என்ற விடயத்தில் தெளிவில்லாமல் இருப்பதாக அதிகாரிகள் கூறித் தட்டிக்கழிக்கின்றனர். இந்த வீதியைத் திருத்தி அமைக்கும் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொருத்தமான தீர்மானத்துக்கு வந்து திருத்தி அமைக்க ஆவன செய்யவேண்டும்" - என்றனர்.

"இந்த வீதியானது வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குரியதாகும். கைத்தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்படும்போதே குறித்த வீதியைத் திருத்துவதற்கென 10 மில்லியன் ரூபா நிதி மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் எமக்கு அதற்குரிய நிதி உரிய தரப்பினரால் ஒதுக்கித் தரப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் எமது திணைக்களத்துக்குரிய வீதிகளில் புனரமைப்புச் செய்யப்படவேண்டிய வீதிகளுக்கு நிதி கோரியவண்ணமே உள்ளோம். எமக்கு வருகின்ற நிதி போதாமையாகவே உள்ளது. இதனால் இந்த வீதி தொடர்பாகவும் யாராவது நிதி உதவி செய்யும்பொருட்டு உடனடியாகத் திருத்திக் கொடுக்கப்படும் என்று வீதி அபிவிருத்தித் திணைக்கள யாழ்.மாவட்ட முதன்மைப் பொறியியலாளர் தெரிவித்தார். (த-10-11)

# 16 வயது மகளை மரத்தில் கட்டித் தாக்கினார் தந்தை

தென்மராட்சி, டிசெ. 27

தாக்குதலுக்கு இலக்கான தாயை வைத்தியசாலையில் சேர்த்து விட்டு வீடு திரும்பிய 16 வயது மகளை மரத்துடன் கட்டிவைத்து கருக்குமட்டையால் தாக்கினார் தந்தை. இதனைத் தடுக்கச் சென்ற மனைவியின் தாயாரையும் பெரிய தாயாரையும் அவர் தாக்கியுள்ளார்.

இவரின் தாக்குதலுக்கு இலக்கான மூன்று பெண்களும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இரவு மது போதையில் வீட்டுக்கு வந்த கணவர் தனது மனைவியை மோசமாகத் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான தாயை அவரது மகள் நேற்றுமுன்தினம் காலை சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்த்துவிட்டு வீடு திரும்பியுள்ளார்.

அவ்வேளை வீட்டில் மதுபோதையில் காணப்பட்ட தந்தை, "அம்மா எங்கே?" எனக் கேட்டபோது "வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்" எனத் தெரிவித்தார் மகள். இதனால் ஆத்திரமடைந்த தந்தை, மகளை மரத்துடன் கட்டி வைத்து கருக்கு மட்டையால் தாக்கியுள்ளார். இதனால் மகளுக்கு உடலின் பல இடங்களில் காயம் மேற்பட்டது. பேர்த்தியின் அழுகுரல் கேட்டு ஓடிவந்த மாமியையும் பெரிய மாமியையும் கையில் வைத்திருந்த கருக்கு மட்டையால் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

### அறிவித்தல்

17.12.2016ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, செட்டிகுளம் பொதுச் சந்தைக்கட்டடத்தின் கடைகளுக்கான ஒரே தடவைக் கட்டணக் கேள்வி அறிவித்தல் 2017 என்னும் கேள்வி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பிரதேசசபை,
செட்டிகுளம்.
27.12.2016
(C 27273)(22.18)

திரு.சு.விஜயதாஸ்
செயலாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கரைதுறைப்பற்று பிரதேச பிரிவில் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.27
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.இந்த நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு குமுழமுனை கலைவாணி சனசமூக நிலையத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது .

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார பேரவை, வன்னி மேம்பாட்டுப் பேரவை, குமுழமுனை கனடா பழைய மாணவர் சங்கம், கலைவாணி கலாமன்றம், ஆகியன இணைந்து குமுழமுனைக் கிராமத்தில் உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றிணைந்து தொன்று தொட்டு கலைக்காக உழைத்து வரும் மூத்த கலைஞர்களை கௌரவித்தனர். இதன் போது பாராட்டு மடல்கள், சான்றிதழ் முதலியன கலைஞர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், பிரதேச செயலாளர் குணபாலன், வன்னி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் க.தவராஜா, இணைத் தலைவர் கமலகாந்தன், மற்றும் கலைஞர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (வ-21,7)

## 3 லட்சம் பெறுமதியான அரச சாராயம் சிக்கியது

யாழ்ப்பாணம,; டிசெ, 27,
கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று அதிகாலை சட்டவிரோதமாக எடுத்துச்செல்லப்பட்ட 3 லட்சம் ரூபா பெறுமதியான அரச சாராயம் கிளிநொச்சி மாவட்ட உடனடி முறியடிப்புப் படை என்ற பெயரில் இயங்கும் சிறப்புப் பொலிஸ் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் பொறுப்பதிகாரி ஜசிந்தன் தெரிவித்தார்.

பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புதுக்காடு-மருதங்கேணி வீதியில் அரச சாராயம் எடுத்து வரப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற சிறப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் வாகனம் ஒன்றை மறித்துச் சோதனையிட்டபோது 3 லட்சம் ரூபா பெறுமதியான அரச சாராயம் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்டதைக் கண்டனர்.

அதில் கால் போத்தல் சாராயம் 348 போத்தலும், ஒரு போத்தல் சாராயம் 60 போத்தலும், விலை கூடிய அரச சாராயப் போத்தல் (ஓல்ட் அரக்) 15 போத்தலும் கைப்பற்றப்பட்டதுடன் அதனைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாராயம் கடத்திய வாகனமும் பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிறப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி ஜெசிந்தன் தெரிவித்தார். (து-6)



# இளம் சமூகத்துக்கு போதிய சட்ட அறிவு மிக அவசியமானது

### லயன்ஸ் கழகச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27
கல்வியுடன் நாட்டின் சட்ட முறைமைகளையும் சிறுவர்களுக்கு ஊட்டுவதற்கு கல்விச் சமூகத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நாட்டில் உள்ள இளம் சமுதாயத்தினரின் தவறான நடவடிக்கைகளுக்கு போதிய சட்ட அறிவு இல்லாமையே காரணமாகும்.

இவ்வாறு பன்னாட்டு லயன்ஸ் கழக 306பி1மாவட்ட ஆளுநரின் பிரதிச் செயலாளர் லயன் வ.சிறிபிரகாஸ் தெரிவித்தார்.

கடந்த ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவினால்; தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

ஜப்பானில் வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸாரைக் காண முடியாது. அங்கு போக்குவரத்து விதிமுறைகளை மக்கள் கடைப்பிடிக்கிறார்கள். ரயில் நிலையங்கள் மற்றும் பஸ்களில் பொலிஸார் காணப்படுவதில்லை. பயணத்தை மேற்கொள்வோர் அங்குள்ள ரயில் நிலையங்களிலும் பஸ்களிலும் செல்லும் இடங்களுக்கான ரிக்கெற்றைப் பெற்று ஏறி உரிய இடத்தில் இறங்குகின்றனர். அங்குள்ள மக்களுக்கு கல்வி நிலையங்களில் சிறுவயது முதல் ஊட்டப்படும் சட்ட ஒழுங்குமுறையே இதற்குக் கரணம். அவர்கள் சட்டத்தை மதிக்கின்றனர். அந்த நிலையை இங்கு உருவாக்கினால் எதிர்காலத்தில் ஒழுக்கம் நிறைந்த சிறந்த மனிதர்களை நாம் உருவாக்கமுடியும்.

நவீன மாற்றத்திற்கேற்ற வகையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கல்வி முறையில் மாற்றம் ஏற்படவில்லை. கல்வி நிலை சமூக செயற்பாட்டுக்கேற்ப மாற வேண்டும். முன்னைய காலத்தில் இளம் சமூகத்தினரை மைதானங்களில் காணமுடியும். அந்தக் காலத்தில் கல்வியுடன் விளையாட்டு த்துறைகளும் வளர்ச்சியடைந்தன. தற்போது இளம் சமுதாயத்தினரை மைதானங்களில் காணமுடிவதில்லை. பாடசாலைக் கல்வி, தனியார் கல்வி நிலையம் ஆகியவற்றை முடித்து வீடுவரும் மாணவர்கள் வீடுகளுக்குள் தங்கியிருந்து தொலைக்காட்சி, கணினி, தொலைபேசி, பேஸ்புக் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். மாணவர்கள் அரசின் கல்விக் கொள்கைக்கமைவாக பாடத்திட்டங்களை மேற்கொள்கின்றனர். உடல் களைப்படையும் விளையாட்டுக்களில் கலந்து கொள்வதில்லை.

இதனால் விரைவில் நோயாளியாகும் வாய்ப்பைத் தாமாகவே பெற்றுக் கொள்கின்றனர். மாணவர்களின் கல்வி நிலையில் பெற்றோர் காட்டும் அக்கறை அவர்களை ஓய்வாக இருக்கவிடுவதில்லை. மூளைக்கு ஓய்வுகொடுப்பதில்லை சிறு வயது தொடக்கம் படிக்கவேண்டுமென அக்கறை காட்டுகிறார்களே தவிர பிள்ளைகளை நாட்டுக்குச் சிறந்த சேவையாற்றக்கூடியவராக உருவாக்காமல் உயர்பதவி பெறும் கல்வியைப் பெறவேண்டுமென்பதில் ஆர்வமாக உள்ளனர்.

மாணவர்களுக்கு சிறுவயது தொடக்கம் தம்மைத் தாமே ஒழுங்கமைத்து வாழப் பழக்கினால் வருங்காலத்தில் நாட்டுக்குச் சிறந்த சேவையாற்றக்கூடிய தலைவர்களாக வருவார்கள் என்பதில் ஐயமில்லை என்றார். (க-4,9)



நத்தார் தினமாகிய நேற்றுமுன்தினம் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய வளாகத்தில் 30 அடி உயரமான கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டது. இதனைப் பலரும் கண்டுகளித்தனர். (க-த-422)

## உணவுப் பொதிகளின் விலைகள் அதிகரிப்பு




வவுனியா, டிசெ.27
வவுனியாவில் உள்ள உணவகங்கள் பலவற்றில் உணவுப் பொதிகளின் விலை அதிகரித்துள்ளதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

அரிசியின் விலை அதிகரித்துள்ளதால் உணவுப் பாசல்களின் விலை 10 ரூபாவால் அதிகரித்துள்ளது என உணவகங்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை அகில இலங்கை சிற்றுண்டி உணவக உரிமையாளர் சங்கம் வெளியிட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (து-21)

# 25 நாள்களில் மட்டும் 43 பேருக்கு டெங்கு



### தென்மராட்சிப் பகுதியில்

தென்மராட்சி டிசெ. 27
தென்மராட்சி பிரதேசத்தில் டிசெம்பர் மாதத்தில் கடந்த 25 தினங்களில் 43 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மாதத்தில் டெங்கினால் 8 பேர் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர் எனவும், இவர்களில் பெரும்பாலானோர் தென்பகுதிக்கு வியாபார மற்றும் உறவினர் வீடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நவம்பர் மாதத்தில் பிரதேசத்தில் பெய்த மழையையடுத்து டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. இவர்கள் அனைவரும் தென்மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் கூறப்பட்டது.

அயல் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் இங்கு இல்லாததால் அவை பற்றைகளாகக் காணப்படுகின்றன. இந்தக் காணிகளில் குப்பைகள் மற்றும் பாவனைக்குதவாத தகரப் பொருள்கள், பிளாஸ்ரிக் போன்றவை காணப்படுகின்றன. டெங்கு நுளம்பு அங்கு உற்பத்தியாகி தம்மைத் தாக்கியிருக்கலாமென விடுதியில் சிகிச்சை பெறுவோர் தெரிவித்தனர்.

டெங்கின் தாக்கம் உள்ளதென உறுதிப்படுத்தும் நோயாளர்கள் குடியிருப்புகள் உள்ள பகுதிகளுக்குச் சுகாதாரப் பகுதியினர் புகை விசிறும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (கு-9)

## காரைநகர் இந்து பழைய மாணவர் சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சங்கத் தலைவரும் கல்லூரி அதிபருமான திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக அதிபர் திருமதி வாசுகி தவபாலனும், உப தலைவராக கல்லூரியின் முன்னாள்அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளையும், செயலாளராக ந.பாரதியும், பொருளாளராக க.நிமலதாசனும், உபசெயலாளராக க.நாகராசாவும், உப பொருளாளராக வி.கம்சனும், நிர்வாக சபை உறுப்பினர்களாக சு.அகிலனும். த.சற்குணராசாவும், ந.யோகநாதனும், செ.அருட்செல்வமும், சி.கந்தசாமியும், பொ.சிறிகரனும், க.தில்லையம்பலமும், திருமதி யோகலட்சுமி யோகநாதனும், செல்வி சிவரூபி நமசிவாயமும் தெரிவு செய்யப்பட்டனர். (து-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப் பேரலை பேரிடரின் 12ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்


மட்டக்களப்பு


உடுத்துறை




வவுனியா விநாயகர் ஆலயம்


மட்டக்களப்பு கடற்கரை


தெல்லிப்பழை துர்க்காபுரம் சிற்பாலயம் கலைக்கூடம்


மட்டக்களப்பு





கல்முனை


திருகோணமலை வைத்தியசாலை


மன்னார்




புதுக்குடியிருப்பு சுனாமி நினைவுத் தூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.பிக்களுக்கு வாடகை வாகனம் வழங்கும் திட்டம் இடைநிறுத்தம்

### கிரய அடிப்படையில் வழங்க மாற்று ஆலோசனை

கொழும்பு, டிசெ 27

பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களாகச் செயற்படும் 58 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிக வாடகை செலுத்தி வாகனங்கள் வழங்கப்படுவதற்காக முன்னெடுக்கப்பட்ட திட்டம் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதம செயலாளரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படவிருந்த வாகனமொன்றுக்கு மாதாந்த தவணைக் கட்டணம், அதற்கான பெறுமானம் சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் நிதி உட்பட மாதாந்தம் சுமார் ஏழரை இலட்சம் ரூபா செலவாகும் என்பதால் அந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்குப் பதிலாக அவர்களுக்கான வாகனங்களைக் கிரய அடிப்படையில் வழங்குவதற்கான மாற்றுத்திட்டமொன்று பற்றி தற்போது ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, விசேட பணிப்பொறுப்புகள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம ஆகியோர் கலந்தாலோசித்து வருவதாகவும் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்குத் தலைமை தாங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னைய அரசு, அரச வாகனங்களை வழங்கியிருந்தது. அந்தப் பணிக்காக தற்போதைய அரசு இது வரை 58 பேருக்கு மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபாவை வழங்கி வந்தது. அதன்பின் அவர்களுக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டபோதும் அதற் கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் நிமல் போப்பகே மறுத்ததையடுத்து திட்டம் இடைநிறுத்தப்பட்டதாக மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (த)

## தேர்தல் தினம் அறிவித்த பின்னர் பொதுமக்கள் முன்னணியின் மாநாடு

### பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ 27

உள்ளூராட்சித் தேர்தல் தினம் பிரகடனப்படுத்தப்பட்ட பின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் முதல் மாநாடு நடத்தப்படுமென அந்தக் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.



தற்போதைய அரசின் பலவீனமான நிர்வாகம், எதேச்சாதிகாரப் போக்கு, நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சரிவு உட்பட்ட பல் வேறு முக்கிய விடயங்களைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கும் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தங்களது கட்சிக்கு அமோக ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்குமான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் கிராம மட்டத்தில் தமது கட்சிக்கான உறுப்பினர்களை உள்வாங்கும் நடவடிக்கை தற்போது வெற்றிகரமாக நடந்துவருவதாகத் தெரிவித்த பீரிஸ், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சிக்கு மகத்தான வெற்றி கிடைக்குமெனவும் நம்பிக்கை தெரிவித்தார். (த)

## தேயிலைத் தோட்டங்களை பதிவு செய்ய நடவடிக்கை

கொழும்பு, டிசெ 27

நாடு முழுவதும் உள்ள தேயிலைத் தோட்டங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருவதாக இலங்கை தேயிலைச் சபை அறிவித்துள்ளது.

காணி உறுதிப்பத்திரங்களை வழங்குதல், தேயிலை செய்கையாளர்களுக்கான ஆள் அடையாள அட்டை, தேயிலை கொழுந்துக்கான உத்தரவாத விலையை உறுதிப்படுத்தல் போன்றவற்றை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்கான வாய்ப்பு இதன்மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இலங்கைத் தேயிலைச் சபை குறிப்பிட்டது. (த)

## தகுதியற்றவர்களுக்கு தூதரகங்களில் வேலை

### வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

கொழும்பு, டிசெ. 27

எந்தவொரு கல்வித் தகைமையும் இல்லாதவர்களுக்கு வெளிநாடுகளிலுள்ள அரச தூதரகங்களில் நியமனங்களை வழங்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுயாதீன சட்டத்தரணிகள் குழுவொன்று வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையிலும் சித்தியடையாதவர்கள் இவ்வாறு அரச தூதரங்களில் நியமனங்களைப் பெற்றுள்ளதாகவும் அந்தக்குழு குற்றம்சாட்டியுள்ளது.

நல்லாட்சி அரசில் பொறுப்பான பதவிகளுக்கு நியமனங்களை வழங்கும்போது, தகுதி, திறமை அடிப்படையில் அமைவதற்கான ஒழுங்குமுறையொன்று முன்னெடுக் கப்பட வேண்டும். அதற்காகவே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அந்தக் குழு மேலும் தெரிவித்தது. (த-4)

# மரண அறிவித்தல்

## திருமதி பதுமநிதி இராசையா



ஊர்காவற்றுறை, கரம்பனை பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பதுமநிதி இராசையா 26.12.2016 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கமலம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவதாரிணி, காலஞ்சென்ற சாரிகா (பிரான்ஸ்), துஷ்யந்தன் (பிரான்ஸ்), இளங்குமரன் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரமேஸ்வரன் (ரவி), செல்வநாயகம் (பிரான்ஸ்), சிவாநந்தினி (பிரான்ஸ்), ரஜந்தி (சட்டத்தரணி) ஆகியோரின் மாமியாரும் தனுஷன், சாரங்கன், செந்தூரா, சாவித்யா, துலக்ஷன், துவாரகி, ஜெயவரினி, சத்யகி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆனந்த ஈஸ்வரி(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: இ.இளங்குமரன் (சட்டத்தரணி)**

**077 841 0379, 024 222 4626**

**இ .துஷ்யந்தன் (பிரான்ஸ்)**

**0033614879440, 00 33148896891**

**56/9, புதிய வீதி, தோணிக்கல், வவுனியா.**

பிறப்பு
17.09.1939

இறப்பு
26.12.2016

(V/176)(12.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டாரவளையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி மரக்கறிகளை ஏற்றிசென்ற லொறி எல்ல என்ற இடத்தில் நேற்றுத் தடம்புரண்டது. லொறியில் சென்ற இருவர் காயமடைந்தனர். இது குறித்து விசாரணை இடம்பெறுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# போதைப்பொருள் பாவனைக்குள்ளே மூழ்கும் மாணவர்

## மட்டு. மாவட்டச் செயலர் கவலை

கொழும்பு, டிசெ. 27
மாணவர்கள் அதிகளவில் போதைப் பாவனைக்கு உள்வாங்கப்படும் நிலைமை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டச்செயலர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.
மட்டக்களப்பு நகர மண்டபத்தில் போதை தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடத்திய புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களை வலுவூட்டும் செயலமர்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் தலைமையுரை ஆற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்தப் போதைதான் சமூகத்தில் தற்போது ஏற்படும் அசம்பாவிதங்களுக்கும், குற்றச் செயல்களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைகின்றது.
மது அருந்துவதைச் சட்டம் போட்டுத் திருத்தவோ அல்லது பொலிஸ், இராணுவத்தை வைத்து தடுக்கவோ முடியாது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய செயற்பாடு மற்றும் ஆன்மிக ரீதியான செயற்பாடுகள் மூலமாக மது அருந்துவதைக் கட்டுப்படுத்த முடியும்.
மட்டக்களப்பிலுள்ள மதுபானச்சாலைகளை மூடுமாறு பல தரப்புகளிடமிருந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. அவற்றை மூடுவதற்காக முயற்சித்தபோதும் அது வெற்றியளிக்க முடியாமல் போன சந்தர்ப்பங்கள் உள்ளன.
மதுபானச்சாலைகளை மூடுவதால் மாத்திரம் மதுப் பாவனையைக் குறைத்து விட முடியாது. மதுபானம் அருந்துவதை நிறுத்திவிட்டால், மதுபானச் சாலைகள் இல்லாமலே போய்விடும்.
பெற்றோருடைய அரவணைப்பிலும் ஆசிரியர்களது வழிகாட்டலிலும் இருக்கின்ற மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் சென்று பல யதார்த்தமான சவால்களை எதிர்நோக்குகின்றனர். பல்கலைக்கழகங்களில் கூடுதலாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் விடயம், விசாரணைகள், இடைநிறுத்தல், மாணவர்களை பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேற்றுதல், விடுதிகளை விட்டு வெளியேற்றுதல், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்பனவே.
தனியார் நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்களில் கல்வி கற்பவர்கள் தங்களுடைய பட்டங்களை முடித்துக்கொண்டு தமது வாழ்க்கைப் பாதையின் படிகளிலே ஏறிக் கொண்டி க்கின்றனர்-என்றார். (த-4)

# துப்பாக்கிமுனையில் ஓட்டோ கொள்ளை

## பொலிஸாரிடம் சிக்கிய கொள்ளையன்

கொழும்பு, டிசெ 27
சிகரெட் விற்பனையில் ஈடுபடும் முச்சக்கர வண்டியொன்றை, 1.85 மில்லியன் ரூபா பணத்துடனும் 750,000 சிகரெட்களுடனும் துப்பாக்கிமுனையில் நபரொருவர் கொள்ளையிட்டுச் சென்றுள்ள சம்பவம், மாகொல பிரசேத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.
குறித்த முச்சக்கரவண்டியின் உரிமையாளர், சம்பவ இடத்திலிருந்து பொலிஸாரின் அவசர இலக்கத்துக்கு அறிவித்ததற்கமைய, முச்சக்கர வண்டியில் பொருத்தப்பட்டிருந்த ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தின் உதவியுடன், ரதுபஸ்வெல பிரதேசத்தில் வைத்து, கொள்ளையிடப்பட்ட பொருள்களுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர், அத்திடியப் பகுதியிலுள்ள தனியார் வங்கியொன்றில் 5 மில்லியன் ரூபாயைக் கொள்ளையிட்டிருப்பதும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
சந்தேகநபர், 12 நாள்களுக்கு முன்னர்தான் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி வந்துள்ளார் எனத் தெரிவித்த கடவத்த பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# ஓ.எல். கூடச் சித்தியடையாதோருக்கு விளையாட்டு ஆலோசகர் பதவி

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ 27
ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறாதவர்களும் அரச பாடசாலைகளில் விளையாட்டு ஆலோசகர்களாக நியமனம் செய்யப்பட்டிருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.
அரச பாடசாலைகளில் எந்தவொரு தொழிலிலும் நியமிக்கப் படவேண்டியவர்கள் குறைந்தபட்சம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும் என்பது கல்வியமைச்சின் அடிப்படைக் கொள்கையாக இருந்தபோதிலும் அண்மையில் நடந்த விளையாட்டு ஆலோசகர் நியமனங்களில் இந்தக் கொள்கை முற்றாக மீறப்பட்டிருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.
நாடு முழுவதிலும் உள்ள அரச பாடசாலைகளுக்கு 3 ஆயிரம் விளையாட்டு ஆலோசகர்களை நியமிக்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார். (த)

# சுற்றுலா சென்ற 40 பேர் ஒவ்வாமையால் பாதிப்பு

இரத்தினபுரியிலிருந்து பொத்துவில், அறுகம்பைப் பிரதேசத்துக்குச் சுற்றுலா சென்ற சுமார் 40 பேர் உணவு ஒவ்வாமை காரணமாகத் திடீர் சுகவீனம் அடைந்த நிலையில் திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் நேற்றுச் சிகிச்சை பெற்றதாக வைத்திய அதிகாரி பி.மோகனகாந்தன் தெரிவித்தார்.
அறுகம்பையிலிருந்து திருக்கோவில் பிரதேசம் ஊடாக வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை இவர்களுக்குத் திடீரென்று வயிற்று வலி, வயிற்றோட்டம், தலைச்சுற்று என்பன ஏற்பட்டுள்ளன. இதனை அடுத்து இவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாக அவர் கூறினார்.
அறுகம்பைப் பிரதேசத்திலுள்ள உணவகங்களில் காலை உணவை உட்கொண்டதாகவும் இதன் பின்னர் குடிதண்ணீர் அருந்தியதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறினர். (த)

# துப்பாக்கியைப் பறித்து பொலிஸார் மீதே சூடு

## இனந்தெரியாதோர் கைவரிசை

கொழும்பு, டிசெ 27
ரோந்து சென்ற கான்ஸ்டபிள்கள் இருவர் மீது, இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவ்விருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.
கட்டான கடியல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் மீதே இவ்வாறு துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அதில், கான்ஸ்டபிள் ஒருவரின் ரிவோல்வரைக் கைப்பற்றி, அந்த கான்ஸ்டபிள் மீதும் அவருடைய உதவியாளரான மற்றுமொரு கான்ஸ்டபிள் மீதும் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அதன் பின்னர், துப்பாக்கிதாரிகள், வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து, அதிலிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதன் பின்னர், மோட்டார் சைக்கிளையும் கடத்திச் சென்றுவிட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த)

# ரூபா 80 இலட்சம் பணமோசடியில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு, டிசெ 27
தம்பதிவ யாத்திரைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி, பணமோசடியில் ஈடுபட்ட நபரை, மஹவெல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
மேற்படி நபர், சுமார் 20 பேரிடம், 80 இலட்சம் ரூபா பணமோசடியில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
இவரிடம் பணம் கொடுத்து ஏமாந்த மக்கள், கிராமிய வங்கிகளில் பணத்தைக் கடனாகப் பெற்றே வழங்கியுள்ளதாக தெரிய வருகின்றது.
மாத்தளை மாவட்டத்துக்கு உட்பட்ட தும்கலவத்த, இமுலன் தண்ட, ரஜகம்மான, தொடம்வெ மற்றும் மடவல உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பணமோசடிக்கு உள்ளாகியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# இயற்கையில் தளம்பல்; அதனாலேயே இடர்கள்

## எருவில் பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

அம்பாறை, டிசெ. 27
எமது சுற்றாடலை இயற்கையின் சமநிலைக்கு ஏற்ப பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் நாங்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் சகல இடங்களிலும், இயற்கையில் தளம்பலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.
அதனால்தான் சுனாமி போன்ற இயற்கை இடர்கள் ஏற்படுகின்றன.
எனவே இவற்றை எமது மக்கள் நன்கு சிந்தித்துச் செயற்படவேண்டும்.
இவ்வாறு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் தெரிவித்தார்.
சுனாமியில் உயிர் நீர்த்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட ஒந்தாச்சிமடம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி ஞாபகார்த்த தூபியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
அதில் அஞ்சலி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
மேலும் தெரிவித்ததாவது:
கடலோரப் பிரதேசங்களில் மணலின் உயரம் 25 அடி, 50அடி போன்ற அளவுகளுக்கு உயர்ந்து காணப்படுகின்றன. ஆனால் மனிதர்கள் வாழக்கூடிய இவ்வாறான கரை [illegible] படுத்தப்படுவதுதான் கடலலை, கிராமங்களுக்குள் உட்புகுவதற்கான காரணங்களாக அமைகின்றன.
அரசு கொண்டு வந்துள்ள சட்டதிட்டங்கள் மூலமாகத் தற்போது கரையோரங்களில் மணல் அகழ்வு நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளன.
தற்போது கரையோரங்களில் 300 அடி, 100 மீற்றர், 50 மீற்றர் என [illegible] எல்லைகள், [illegible] எல்லைகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
இவ்வாறான எல்லைகளை மீறி மக்கள் பல வேலைத் திட்டங்களில் ஈடுபடுவதனாலும் சுனாமி நீர் கிராமங்களுக்குள் உட்புகுகின்றது.
தற்போது பலத்த மழை பெய்வதற்குரிய காலமாக இருந்தாலும், இதுவரை பெரிய மழை பெய்யவில்லை. எனவே எமது ஆலயங்கள், தேவாலயங்கள் உள்ளிட்டவற்றில் பூசைகள் செய்து வழிபாடுகளில் ஈடுபட வேண்டும்-என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கையில் இந்த வருடமும் பெரும் பாதிப்பு

## போதிய மழை இல்லாமையே காரணமென விவசாயிகள் கவலை

அச்சுவேலி,டிசெ.27
யாழ். குடாநாட்டில் மேட்டு நில நெல்வயல்கள் கைவிடப்பட்டு கால்நடைகளைக் கட்டி மேய விடப்படும் நிலை காணப்படுகின்றது. இந்த வருடமும் நெற்பயிர்ச் செய்கையில் 50 வீதத்துக்கு மேற்பட்ட நெற்செய்கை பாதிப்புக்கு உள்ளாகலாம். மாரி மழை போதியளவு பெய்யாமை நெற்பயிர்ச்செய்கையில்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான நெற்பயிர்ச் செய்கையின் உத்தேச இலக்கு 11500 ஹெக்ரேயர் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 10500 யஹக்ரேயர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாக மாவட்ட விவசாயத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
யாழ்.மாவட்டத்தில் செய்கை பண்ணப்படும் நெற்பயிர்ச் செய்கையில் பெரும்பகுதி மேட்டு நில வயல்களாகும். நெல் வளர்ச்சிப் பருவத்தில் வயலில் மழைநீர் தேங்கி நிற்கவேண்டும். இல்லாவிடில் கடும் ஈர நிலமாக இருக்க வேண்டும். ஆனால் இந்த வருடம் இந்த நிலை இல்லாமல் இருப்பதோடு கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக போதிய மழை பெய்யவில்லை. வெப்பநிலை வீச்சும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் வயல் நிலங்களில் நெல்வளர்ச்சி குன்றிப் புல் இனங்களின் வளர்ச்சி மேலோங்கி உள்ளது. எதிர் பார்த்தளவு வயல் நிலங்களில் இருந்து புல்லை அகற்ற முடியாத நிலையும் காணப்படுகின்றது.
இந்த நிலையில் மேட்டு நில வயல் நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் மாடு, ஆடுகளைக் கட்டி மேயவிடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சில இடங்களில் நெல்லோடு சேர்ந்து புல் அரியப் பட்டு கால்நடை உணவுக்குப் பயன்படுத்துவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.
இந்த வாரம் குறிப்பிடத்தக் களவு மழை பெய்யாவிடில் கணிசமான அளவு வயல்கள் மேய்ச்சல் தரவையாக மாறக் கூடிய ஏதுநிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
இதனை விவசாயத்திணைக்களமும் உறுதிசெய்துள்ளது. (சு-11)

## ஓய்வூதியர்களுக்கு உயிர் வாழ் நிலை அத்தாட்சிப் பத்திரம்

தென்மராட்சி டிசெ.27
தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவில் ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்களும் தமது உயிர் வாழ் நிலை அத்தாட்சிப் பத்திரத்தை ஜனவரி பத்தாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினர் அறிவித்துள்ளனர்.
பிரதேச செயலகங்களில் ஓய்வூதியம் பெறுவோர் வருடாந்தம் உயிர் வாழ் நிலை அத்தாட்சிப் பத் திரத்தை அந்தந்த வருடத் தில் ஜனவரி மாதம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான படிவம் பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியர்களுக்கு டிசெம்பர் மாதத்தில் அனுப்பி வைக்கப்பட்டு ஜனவரி மாதத்தில் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு பிரிவு கிராம அலுவலரின் பரிந்துரையுடன் ஓய்வூதியக் கிளையில் ஒப்படைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
அவ்வாறு 2017 ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ் நிலை அத்தாட்சிப் பத்திரம் ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதனைப் பூர்த்தி செய்து எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் பிரிவு கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு அறிவித்துள்ளனர். (சு-9)

## உரிமை கோரப்படாத நிலையில் சைக்கிள்கள், மோ.சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், டிசெ.27
பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் உரிமைகோரப்படாத நிலையில் உள்ள சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பவற்றை உரிமை கோரிப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பருத்தித்துறை பொலிஸாரினால் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்து ஒரு சைக்கிள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பவை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன.
55547393 இலக்கமுடைய லுமாலா ஆண்கள் சைக்கிள் மற்றும் என்.பி. எம்.ஓ. 0416 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் என்பவையே உரிமை கோரப்படாத நிலையில் உள்ளன.
இந்தப் பொருள்களுக்குரிய உரிமையாளர்கள் யாராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். தவறின் 6 மாதங்களுக்குப் பின்னர் இவை அரசுடைமை ஆக்கப்படும் என்றும் தெரிவித்தார். (சு-10)



கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் 2016 டிசெம்பர் மாதம் பிறந்த நாளைக் கொண்டாடும் குழந்தைகளின் பிறந்த நாள் விழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது வருகை தந்திருந்த முதன்மை விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்களை இல்லத் தலைவர் தி. இராசநாயகம் மற்றும் இல்லக் குழந்தைகளும் மலர் மாலை அணிவித்து வரவேற்றனர். நிகழ்வில் குழந்தைகளுக்கு இனிப்பு உணவுகள் வழங்கப்பட்டன. இல்லக் குழந்தைகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன் கலந்துகொண்டார். (வ-21)

## பெற்றோரை இழந்த சிறுவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



வவுனியா, டிசெ.27
வவுனியா பிரதேச செயலகத்தில் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு 'சிறுவர் சிநேக குடும்பம்' என்னும் தொனிப்பொருளில் பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜே.கென்னடி தலைமையில் நடைபெற்றது.
வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மதவு வைத்தகுளம், அண்ணா நகர் மற்றும் அரபாநகர் ஆகிய மூன்று கிராமங்களிலிருந்து 120 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. தந்தை அல்லது தாயாரை அல்லது இரண்டு பேரையும் இழந்த பாடசாலைச் சிறுவர்களுக்கான உபகரணங்களை சிறுவர் அபிவிருத்திலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.விமலன் வழங்கியிருந்தார். இந்த மாணவர்கள் தமது பாடசாலை மற்றும் பல்கலைக்கழக படிப்பை முடிக்கும் வரை தொடர்ச்சியாக சிறுவர் அபிவிருத்தி லங்கா நிறுவனத்தால் கற்றலுக்கான உதவிகள் மாதாந்தம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-21)

## கால்நடைகளைக் களவாடி இறைச்சியாக்கும் கும்பல்

### நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலவு, கோவிலாக்கண்டி போன்ற இடங்களில் மேய்ச்சலுக்குக் கட்டப்படும் கால்நடைகள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு அந்தப் பகுதிகளில் உள்ள பற்றைக் காடுகளிலேயே வெட்டப்பட்டு இறைச்சியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. அவற்றின் எச்சங்களால் பற்றைக்காடுகளில் இருந்து துர்நாற்றம் எழுகின்றது என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.
கால்நடைகள் திருட்டுத் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் மக்கள் கூறினர்.
இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவிக்கையில்,
காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கால்நடைகளை வளர்ப்போர் தமது ஆடு, மாடுகளை அந்தப் பகுதிகளில் உள்ள வெற்றுக் காணிகளில் மேய்ச்சலுக்கு கட்டி மாலையானதும் வீடுகளுக்குக் கொண்டு செல்கின்றனர். பல குடும்பங்களிடம் பத்துக்கு மேற்பட்ட மாடுகள் காணப்படுகின்றன.
அத்துடன் பெரும்பாலான குடும்பங்கள் நெற்செய்கை மற்றும் உப உணவுப் பயிர்களை மேற்கொண்டு வருகின்றன. அயலில் உள்ள பயிர்களைப் பாதுகாக்க தமது கால்நடைகளைத் தினமும் அப் பகுதியில் உள்ள தரவைக் காணிகளில் கட்டி விடுகின்றனர்.
இந்த நிலையில் இந்த மாதத்தில் பலரின் மாடுகள் திடீரென காணாமற்போகும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெற்றுள்ளன. கடந்த வாரம் காணியொன்றில் மேய்ச்சலுக்குக் கட்டி வைக்கப்பட்ட 5 ஆடுகள் காணாமல் போயின. அதன் பின்னர் தினமும் ஒவ்வொரு மாடுகள் காணாமல் போகின்றன. டிசெம்பர் மாதத்தில் மட்டும் 30க்கும் மேற்பட்ட கால்நடைகள் திருட்டுப் போயுள்ளன. இவை தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்து விட்டுச் செல்கின்றனர். மாடுகளைத் திருடுவோரைப் பிடிப்பதற்கான எந்தவொரு ஏற்பாடும் மேற்கொள்ளவில்லை என்றார். (கு-210-9)

# அனுமதி பெறாது அமைத்த கட்டடங்கள் அகற்றப்படும்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் அறிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 27
புதுக்குடியிருப்புப் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் பிரதேச சபையின் அனுமதியுடன் அமைக்கப்படவேண்டும். அவ்வாறு உரிய அனுமதிகளை பெறாது நிர்மாணிக்கப்படும் கட்டடங்கள் உரிய சட்ட நடவடிக்கைகள் மூலம் அகற்றப்படும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.
கடந்த காலங்களில் பிரதேச சபையின் அனுமதியைப் பெறாது பல கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மழைகாலங்களில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதுடன் பல இடப்பெயர்வுகளும், சொத்தழிவுகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அனுமதியில்லாமல் தனியார், அரச திணைக்களங்களால் நிர்மாணிக்கப்படும் அனைத்துக் கட்டடங்களுக்குமான அனுமதியை பெற்ற பின்னரே நிர்மாணிக்கப்படவேண்டும். நேற்று முன்தினம் மாங்குளம் பகுதியில் நிர்மாணிக்கப்படும் கட்டடத்துக்கு எந்தகைய அனுமதியையும் பிரதேச சபையிடம் எடுக்காது வேலைகளை ஆரம்பித்துள்ளார்கள். அதனை தற்போது பொலிஸாரின் உதவியுடன் நிறுத்தியுள்ளோம். உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பிரதேச சபை எல்லைக்குள் நிர்மாணிக்கப்படும் அனைத்துக் கட்டடங்களுக்கும் உரிய அனுமதியை பெற்றதன் பின்னரே நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப் படவேண்டும். அவ்வாறு அனுமதியை பெறாது நிர்மாணிக்கப்படும் அனைத்துக்கட்டடங்களும் சட்ட நடடிக்கைகள் மூலம் அகற்றப்படும். எனவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். (சு-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிணைமுறி விவகாரம்; விவாதம் ஜனவரி 24இல்

கொழும்பு, டிசெ 27
இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பான கோப் குழுவின் அறிக்கை மீதான விவாதம் ஜனவரி 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவாதத்தை ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடத்தவேண்டுமென்று எதிர்பார்த்தாலோ அல்லது விவாதத்துக்காக மேலதிக நாளொன்றை ஒதுக்கிக்கொள்ள விரும்பினாலோ அதுபற்றி கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவெடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி சபாநாயகருக்கு ஏற்கனவே சமர்ப்பித்துள்ள கடிதத்தில் இந்த விவாதம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவேண்டுமென வேண்டுகோள் விடுத்திருப்பதால் அதற்கான முடிவு கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே எடுக்கப்படலாம் எனவும் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புதுவருடத்தில் நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு ஜனவரி 9ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பித்து 10 மணிக்கு முடிவடையவுள்ளது. அதனைத் தொடர்ந்து 10ஆம், 11ஆம் திகதிகளில் அரசமைப்புச் சபையின் கூட்டம் நடைபெறவுள்ளது.

எனவே, ஜனவரி முதலாம் வாரத்தில் பிணைமுறி விவகாரம் தொடர்பான விவாதம் எடுக்கப்படவேண்டுமானால் ஜனவரி 9ஆம் திகதிக்கு முன்பு கட்சித் தலைவர்களின் கூட்டம் ஏற்பாடுசெய்யப் படவேண்டும் எனவும், அவ்வாறான கூட்டமொன்றைக் கூட்டுவதற்கான அதிகாரம் சபாநாயகரிடமே உள்ளது எனவும் நாடாளுமன்ற வட்டாரங்கள் சுட்டிக்காட் டியுள்ளன. (ம)

## அடுத்த ஆண்டு ஓய்வூதிய திகதிகள்

அடுத்த ஆண்டுக்கான ஓய் வூதியம் வழங்கும் திகதிகள் பற்றிய விவரங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தால் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் ஜனவரி 9, பெப்ரவரி 9, மார்ச் 10, ஏப்ரல் 7, மே 9, ஜூன் 9, ஜூலை 10, ஓகஸ்ட் 10, செப்ரெம்பர் 8, ஒக்ரோபர் 6, நவம்பர் 10, டிசெம் பர் 8 ஆகிய திகதிகளில் ஓய் வூதியம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# இனவாதத்தை தூண்டினாலும் ஒற்றுமையை பாதுகாப்போம்

## கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் அழைப்பு

மட்டக்களப்பு, டிசெ. 27
இனவாதாங்களைத் தூண்டும் செயல்கள் முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்றாலும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் எப்போதும் வேறுபாடுகள் இல்லாமல் ஒற்றுமையுடனும் நல்ல மனப்பாங்குடன் இருக்கவேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தெரிவித்தார்.


கம்பஹா மினுவாங்கொட அல்-கமர் பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பும், கலை நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மினுவாங்கொட கல்லெலுவ அல்-அமான் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தெரிவித்ததாவது:

இலங்கை இனவாதம் அற்ற சூழலை உருவாக்க நாம் அனைவரும் முன்வருவதுடன் அதெற்கேற்றாப்போல் நமது ஒற்றுமையுடனான மனப்பாங்கை உருவாக்க வேண்டும்.

நாம் ஒற்றுமையுடன் இருக்கின்றோம். குறிப்பாகக் கல்லுவ உள்ளிட்ட பிரதேசங்கங்களில் மூவின மக்களும் சூழ்ந்து ஒற்றுமையாக வாழ்கின்றோம். அவ்வாறாக வாழ்கின்ற எமக்கெதிராகச் சில இனவாத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆகவே அதையெல்லாம் இந்தக் காலகட்டத்தில் சிறந்த முறையிலும், நல்லதொரு திட்டங்கள் ஊடகாவும் கையாளவேண்டும்.

நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்டது இவ்வாறான இனவாதச் செயற்பாடுகளைத் தவிர்த்து நல்லதொரு சமூதாயத்தையும், இனவாதம் அற்ற சூழலையும், நல்லதொரு பொருளாதார சூழலலையும் உருவாக்குவதற்கே. அத்தகைய செயற்பாட்டினையே எமது நல்லாட்சி மேற்கொண்டு வருகின்றது. ஆனால் இனவாதங்களைத் தூண்டும் சில செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. அதற்கான தீர்வுகளையும் எமது நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும், தலைவர்ரவூப்ஹக்கீமும் இணைந்து பல திட் டங்களை மேற்கொண்டு முன் வைத்து வருகின்றனர்.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் ஒரு சிலர் இனவாதச் செயற்பாடுகளை மேற்கொள்ள இனவாதிகளின் தூண்டுதலால் முயற்சி செய்கின்றனர். ஆகவே அதற்கேற்றாற்போல் நமது செயற்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும்-என்றார். (த-4)



## களுவாஞ்சிக்குடியில் மோட்டார் குண்டுகள்

மட்டக்களப்பு, டிசெ. 27
மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடியிலுள்ள வளவு ஒன்றிலிருந்து வெடிக்காத 2 மோட்டார் குண்டுகளை நேற்றுமுன்தினம் மாலை மீட்டதாகக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு வளவைத் துப்புரவு செய்துகொண்டிருந்தவேளை மர்மப் பொருள் தென் படுவதை அவதானித்த வீட்டு உரிமையாளர் களுவாஞ்சிக்குடிப் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டு இரண்டும் வெடிக்காத குண்டுகள் என்பதால் அவ்விடத்துக்குப் பாதுகாப்பு வழங்கினர்.

இந்தக் குண்டுகள் இரண்டும் எச்.ஈ வகையைச் சேர்ந்தவை. குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டு அவை நேற்றுச் செயலிழக்கச் செய்யப்பட்டன என்று களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

## மதுபோதைச் சாரதிகளை மடக்க பொலிஸ் ரோந்து

கொழும்பு, டிசெ 27
எதிர்வரும் பண்டிகைக் காலத்தின்போது மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை மடக்கிப் பிடிக்க நாடெங்குமுள்ள பொலிஸ் நிலையங்கள் 24 மணித்தியால சிறப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த 24 மணித்தியால சோதனை நடவடிக்கை ஜனவரி 2ஆம் திகதிவரை தொடர்ந்து நடக்குமெனவும், கைது செய்யப்படும் சாரதிகள் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள் எனவும் பொலிஸ் போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பர்னாந்து தெரிவித்தார். (து)


## 3 தொழில்நுட்பக் கல்லூரிகளை புதிதாக அமைக்கச் சீனா உதவி

அம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் புத்தளம் பிரதேசங்களில் மூன்று புதிய தொழில்நுட்பக் கல்லூரிகளை அமைக்க சீன அரசு முன்வந்திருப்பதாக திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஒரு கல்லூரியில் ஒரேநேரத்தில் 2 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய வகையில் சகல வசதிகளும் கொண்டதாக இந்தக் கல்லூரிகள் அமைக்கப்படவுள்ளதாகவும், அண்மையில், தான் மேற்கொண்ட சீனப் பயணத்தின்போது அந்த நாட்டு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுகளின் பின் இந்த இணக்கம் எட்டப்பட்டதாகவும், அக்கல்லூரிகளுக்கு 'லங்கா சைனா டெக்' என்று பெயரிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# திட்டமிட்ட உயரத்தை எட்டாத நத்தார் மரம்

யாழ்ப்பாணம், டிசெ. 27
கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள கின்னஸ் சாதனைக்கான உலகின் மிக உயர்ந்த செயற்கை நத்தார் மரம் திட்டமிட்ட உயரத்தை விடவும் குறைவாகவே அமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




உலகின் மிக உயரமான நத்தார் மரம் என்ற சாதனையைப் படைக்கும் நோக்கில், காலி முகத்திடலில் 80 ஆயிரம் டொலர் செலவில் பிரமாண்டமான நத்தார் மரம் அமைக்கத் திட்டமிடப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நத்தார் மரம், 325 அடி உயரமுள்ளதாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதற்கு வீணாகப் பணம் செலவிடப்படுவதாகக் கத்தோலிக்கத் திருச்சபையின், கர்தினால் மல்கம் ரஞ்சித் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் திடீரென இதன் கட்டுமானப் பணிகள் ஆறு நாள்கள் நிறுத்தப்பட்டன. மீண்டும் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 24 ஆம் திகதி இரவு திறந்து வைக்கப்பட்டது.

முன்னர் திட்டமிட்டதைப் போன்று 325 அடி உயரம் கொண்டதாக நத்தார் மரம் அமைக்கப்படவில்லை. சில நாள்கள் பணிகள் இடைநிறுத்தப்பட்டதால், குறிப்பிட்ட நாளுக்குள் இந்த மரத்தின் கட்டுமானப் பணிகளைத் திட்டமிட்டவாறு முடிக்க முடியாது போயுள்ளது. இதனால் 73 மீற்றர் (238 அடி) உயரமுள்ள நத்தார் மரமே தற்போது அமைக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவே உலகின் மிக உயர்ந்த செயற்கை நத்தார் மரம் என்று உரிமை கோரப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் உலகின் மிக உயரமான செயற்கை நத்தார் மரம் என்று பதிவு செய்யப்பட்ட, மரத்தைவிட இது 18 மீற்றர் (59 அடி) கூடுதல் உயரமானதாகும்.

இரும்புக் குழாய்கள், பிளாஸ்டிக் வலை, போன்றவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்தச் செயற்கை நத்தார் மரத்தை அலங்கரிக்க, ஒரு மில்லியன் இயற்கை அன்னாசிக் கூம்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு பச்சை, வெள்ளி, பொன்னிற வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆறு இலட்சம் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ள இந்த நத்தார் மரத்தின் உச்சியில், 6 மீற்றர் (20 அடி) உயரமுள்ள நட்சத்திரம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான துறைமுகப் பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் நான்கு மாதங்களாக இந்த மரத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நத்தார் மரமே உலகில் மிக உயரமானது என்பதை கின்னஸ் உலக சாதனைப் பதிவு இன்னமும் உறுதிப்படுத்தவில்லை.

உலகின் மிக உயரமான செயற்கை நத்தார் மரம் என்ற சாதனையை சீனாவின் குவாங்சூ நகரில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட, 55 மீற்றர் (180 அடி) உயரமான நத்தார் மரமே பெற்றிருக்கிறது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நுட்பம்

## ஓர்கானிக் பொலிமர் உள்ளீடு கொண்ட அதிதிறன் பேசி கண்டறிவு

### தொடுகை மூலம் மின்னேற்றம் செய்கிறது



அதி நவீன தொழில்நுட்ப உத்திகளை கொண்டதாக விரல் தொடுகையுறல் மூலமாக மின்கலங்களுக்கான மின் சக்தியை மின்னேற்றிக் கொள்ளக் கூடியதான அதிதிறன் பேசியை விஞ் ஞானிகள் கண்டறிந்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

அதிதிறன் பேசிகளில் காணப்படுகின்ற பிரச்சினையாகச் சொல்லப்படுகின்ற மின்கலங்களின் மின்சக்தி சேமிப்பு திறன் குறைவினை நிவர்த்திக்கும் வகை யிலேயே மேற்படி தொடுகை மூலமான மின்சக்தி பெறும் கண்டறிவு அமைந் துள்ளது.

இதன்படி பென்சில்வேனியா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் ஓர்கானிக் பொலி மர் (Organic Polymer) உள்ளீடு கொண்ட அதிதிறன் பேசியை கண்டறிந் துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த ஓர்கானிக் பொலிமரால் செய் யப்பட்ட அதிதிறன்பேசியானது திரையை தொடுகையுறும் போது மின்னேற்றம் இடம்பெறும் வகையிலே வடிவமைக் கப்பட்டுள்ளது.

இவைதவிர இதே அதிதிறன் பேசியினை இன்னமும் நவீனமயப்படுத்தவும் திட்ட மிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. குறிப்பாக மழைத்துளிகள் அதிதிறன் பேசியின் திரையில் விழும் போது அவற்றை மின்சாரமாக்கி மின் கலங்கள் தானாக மின்னேற்றம் பெறுவதான சோதனை நடவடிக்கை தற்போது இடம்பெற்றுவருவதாகவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அதிதிறன் பேசிகளில் உள்ள வயர்லெஸ் சென்சார்கள் இத்தகைய தொழில்நுட் பத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் அதி திறன் பேசிகள் தாமாக மின்னேற்றத்தை பெற்றுக்கொள்கிறது.

மேலும் அயனுக்குரிய டையோட மின்கலங் களில் இவை இணைப்புப் பெற்றுள்ள தால் மின்கலங்கள் மைக்ரோ வாற்ஸ் மின் சாரத்தை பெற்றுக்கொள்கிறது.

# நெடுங்கேணி இலங்கை வங்கிக் கிளை நவீனமயப்படுத்தப்பட்டது

### தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திர சேவையும் ஆரம்பம்

நெடுங்கேணி இலங்கை வங்கிக் கிளையில் தன்னி யக்க பணப்பரிமாற்ற இயந் திர சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி வங் கியின் பொதுமுகாமை யாளர் ப.நிரூஜன் தலை மையில் இடம்பெற்ற புதிய தன்னியக்க பணப்பரி ம ாற்ற இயந்திர சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் இலங்கை வங்கி யின் வடமாகாண உதவி பொது முகாமையாளர் எம்.ஜே.பிரபாகரன் கலந்து கொண்டதுடன் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் ஆரம்ப பணப்பரி மாற்றசெயற்பாடாகவவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திரம் ஊடாக பணத் தைப்பெற்றுக் கொண்டார்.



“ நெடுங்கேணி விவசாயிகளின் நலன்கருதி மேற்படி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## துல்லியமான அறிக்கைக்கான கௌரவிப்பு

### யூனியன் அசுரன்ஸ் வெண்கல விருதினை வென்றது



இலங்கை பட்டயக் கணக் காளர் நிறுவனத்தால் வரு டாந்தம் ஏற்பாடு செய்யப் படுகின்ற சிறந்த நிதி அறிக் கைகளுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் நிதி யியல் மற்றும் நிதியியல் சாராத அறிக்கையிடலுக் கான கௌரவிப்புகள் அண்மையில் வழங் கப்பட்டுள்ளது.

அந்த வகையிலே நிதி அறிக்கையிடலில் வெளிப் படைத்தன்மையை ஊக்கு விக்கும் வகையில் அமைந் திருந்த நடப்பாண்டுக்கான நிதி அறிக்கை விருது வழங் கலில் காப்புறுதித்துறை சார்ந்து துல்லியமான அறிக்கையிடலுக்கான கௌரவிப்பாக யூனியன் அசுயூரன்ஸ் வெண்கல விருதினை பெற்றுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் கருத் துரைத்துள்ள யூனியன் அசுரன்ஸ் பிஎல்சி நிறு வனத்தின் நிதி மற்றும் திட்ட மிடலுக்கான பொது முகா மையாளர் ஷெரின் காதர், “சிறந்த நிதி அறிக்கைகளுக் கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் நாம் தொடர்ச்சி யாக பேணி வரும் வெளிப் படைத்தன்மை, சிறந்த மேலாண்மை மற்றும் சிறப் புத்தன்மைக்காக கௌர விப்பைப் பெற்றுள்ளோம். நிறுவனத்தின் நம்பிக்கை எனும் உறுதிமொழிக் கமைய முன்னெடுக்கப் படும் செயற்பாடுகளின் பெறுபேறுக்குக் கிடைத்த விருதாக இது அமைந் துள்ளது. இந்த விருதை எமது சகல பங்காளர் களுக்கும் உரித்தானதாக்க தீர்மானித்துள்ளோம்” - என்றார்.

# வணிகம்



நம்ப முடியாத விலையில் கொள்வனவு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

## பிக் டீல் ஊக்குவிப்புத் திட்டம்

### போட் மாதிரிகளுக்கு விசேட சலுகைகளை பெறமுடியும்

போட் மற்றும் அதன் உள்நாட்டு விநி யோகஸ்தர்களான பியுசர் ஓட்டோ மொபைல் பிறைவேட் நிறுவனம் என் பன இணைந்து வருட நிறைவினை முன்னிலைப்படுத்தும் விதமான பிக் டீல் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை நாட ளாவிய ரீதியில் அறிமுகம் செய்துள்ளது.

இதன்படி வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்ட போட் மாதிரிகளுக்கு இம் மாதம் 31 ஆம் திகதி வரை கவர்ச்சிகர மான சலுகைகளை பெற்றுக் கொள்ள முடியுமென் தெரி விக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத் துள்ள போட் மோட்டர் கம்பனி யின் மலேசியா மற்றும் தென்கொரியா, ஆசிய பசுபிக் வளர்ந்து வரும் சந்தைகளுக்கான முகாமைத்துவ பணிப்பாளர் பேகஸ் சுசன்டோ, “இந்த வருடம் இலங்கையில் பிக் டீல் ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகம் செய்வதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சி யடைகிறோம். இந்த ஊக்குவிப்புத்திட் டத்தின் மூலமாக எமது போட் குடும் பத்தை விஸ்தரிப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதுடன் எமது பன்னாட்டு போட் வாகனங்களுக்கு மிகச்சிறந்த சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றது”- என்றார்.

மேலும் இந்த ஊக்குவிப்பு காலப்பகுதி யில் எவரெஸ்ட் மாதிரியை கொள்வனவு செய்யும் சகல வாடிக்கையாளர்களில் இருந்தான வெற்றியாளர்கள் இருவருக்கு பாங்கொக் நகருக்கு பயணிப்பதற்கான விமானப் பயணச்சீட்டுகள் வழங்கப்படுவதுடன் இரு இரவுகள் தங்கியிருப்பதற்கான தங்குமிட வசதிகளும் வழங்கப்பட வுள்ளதாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த மேலும் வாடிக் கையாளர்களுக்கு எவரெஸ்ட் மீது விசேட தள்ளுபடிகளை அனுபவிக்க முடியுமென கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக இவை ஒப்பற்ற ஓவ் றோட் மற்றும் ஒன் றோட் இயலுமைகளை கொண்டுள்ளதுடன் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் உள்ளகத் தோற்றம் என்பவற்றுடன் ஏழு பேர் பயணிக்கக்கூடிய சௌகரியத்தையும் கொண்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நவாஸுக்கு வாழ்த்து; தெரிவித்தார் மோடி

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்புக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.
நவாஸின் பிறந்த நாளான நேற்றுமுன்தினம், மோடி தனது டுவிற்றர் பக்கத்தில், 'பாகிஸ்தான் பிரதமர் நவாஸுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். அவர்நீண்ட ஆரோக்கியமாக வாழ மன்றாடுகிறேன்' எனப் பதிவுசெய்திருந்தார்.
கடந்த வருடம் நவாஸுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக மோடி பாகிஸ்தானுக்குச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ரஷ்யாவின் துக்கத்தில் இணைகிறது இந்தியா

புதுடெல்லி, டிசெ. 27
ரஷ்யாவின் இராணுவ விமானம் வீழ்ந்து நொறுங்கிய விபத்தில், அதில் பயணித்த 92 பேரும் உயிரிழந்துள்ளநிலையில்ரஷ்யாவுக்கு இரங்கல் தெரிவித்தது இந்தியா.
விமான விபத்தில் 92 பேர் உயிரிழந்த துயரத்தில் வாடும் ரஷ்யாவின் துக்கத்தில் இந்தியா இணைகிறது என்று இந்தியப் பிரதமர் மோடி தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டார். (ம)



# ட்ரம்ப் அறக்கட்டளை கலைக்கப்படவுள்ளது



அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகவுள்ள டொனால்ட் ட்ரம்ப், தனது தொண்டு நிறுவனமான ட்ரம்ப் அறக்கட்டளையைக் கலைக்கவுள்ளேன் என அறிவித்தார்.
பெரும் கோடீஸ்வரரான ட்ரம்ப், டொனால்ட் ஜே. டிரம்ப் பவுண்டேசன் என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்றை நடத்தி வருகிறார். உள்நாட்டு வருவாய் சட்டத்தை மீறிய வகையிலும், வரிஏய்ப்பு செய்யும் நோக்கத்திலும் சில முறைகேடுகளில் இந்த அறக்கட்டள்ளை ஈடுபட்டது என்று சில ஊடகங்கள் ஆதாரங்களுடன் நிரூபித்தன. குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தற்போது விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.
இந்த நிலையில் அறக்கட்டளையை இல்லாமல் செய்வது தொடர்பில் ட்ரம்ப் முடிவெடுத்துள்ளார்.
நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும்போது, அறக்கட்டளை தொடர்பாக எந்தவொரு கருத்து மோதலும் ஏற்பட்டுவிடக்கூடாது என கருதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டேன் என்று ட்ரம்ப் தெரிவித்தார். (ம)



# ரஷ்ய விமான விபத்து; விசாரணைக்கு உத்தரவு

மொஸ்கோ, டிசெ. 27
ரஷ்யாவின் இராணுவ விமானம் வீழ்ந்து விபத்துக்குள்ளான விடயத்தில் முழுமையான விசாரணை நடத்த ரஷ்ய ஜனாதிபதி புடின் உத்தரவிட்டார். விபத்தை அடுத்து ரஷ்யாவில் நேற்று தேசிய துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது.
சிரியாவில் நடைபெறும் உள் நாட்டுப் போர் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான போர் ஆகியவற்றுக்காக அங்கு முகாமிட்டிருக்கும் ரஷ்யப் படையினருக்கு தேவையான பொருட்கள் மற்றும் வீரர்களுடன் புறப்பட்டுச் சென்ற விமானம் கருங்கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.
விமானத்தில் பயணித்த இராணுவ இசைக்குழுவைச் சேர்ந்த 64 பேர் உட்பட 92 பேர் உயிரிழந்தனர். இந்த விடயத்தில் முழுமையான விசாரணை நடத்தி தனக்கு அறிகட்கை சமர்ப்பிக்குமாறு ரஷ்ய ஜனாதிபதி புடின் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.
உயிரிழந்தவர்களில் மூவரின் உடல்கள் ஏக்னவே மீட்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மதியம் வரை மேலதிகமாக 11 உடல்கள் மீட்கப்பட்டன. விமானங்கள், உலங்குவானூர்திகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்றனவும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. (ம)

# ஐ.நா. சபையி தீர்மானத்துக் ஒருபோதும் கட்டுப்படோம்

## கிழக்கு ஜெருசலேம் விவ உலகை எதிர்க்கிறது இ

ஜெருசலேம், டிசெ. 27
கிழக்கு ஜெருசலேம் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையையும் பலஸ்தீனத்துக்கு ஆதரவானதும் தனக்கு எதிரானதுமான தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகளையும் வெளிப்படையாக எதிர்க்கும் சமிக்ஞைகளை வெளிப்படுத்தியது இஸ்ரேல்.
1967 ஆம் ஆண்டு நடந்த நீண்ட போரின் இறுதியில் பலஸ்தீன நாட்டில் இருந்து கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் கைப்பற்றியது. அன்று முதல் குறித்த பகுதியை இஸ்ரேல் சொந்தம் கொண்டாடுகின்ற போதிலும், குறித்த பகுதியை இஸ்ரேலுக்குச் சொந்தமானதாக பன்னாட்டுச் சமூகம் அங்கீகரிக்கவில்லை.
சமீப காலமாக, பலஸ்தீன நாட்டுக்கு உட்பட்ட பகுதியில் கிழக்கு ஜெருசலேமுக்கு நெருக்கமாக இஸ்ரேல் குடியிருப்புக்களை அமைத்து வருகிறது. ஆனால், குறித்த குடியிருப்புக்கள் பலஸ்

> “இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந் நாடுகளுடனும் ஐக்கிய நாடுகள் சபையுடனும் நாம் கொண்டுள்ள உறவைத் தொடர்வது தொடர்பாக மீண்டும் பரிசீலனை செய்யவுள்ளோம்

தீனத்தின் சுய பாதுகாப்புக்கு அ தல் என்று உலக நாடுகளின் தல கள் கருத்துத் தெரிவித்தனர். பன் எல்லைக்கோடு சட்டத்தை மீறி ரேல் மேற்கொண்டுவரும் நடவ களை உடனடியாகத் தடுத்து நி மாறு நியூசிலாந்து, மலேசியா,



எகிப்திய குகை ஒன்றில் 3 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட குறைஓவிய அந்த ஓவியத்தில், தாய், தந்தைக்கு நடுவில் அவர்களை விட மேலான நி வரையப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் குறித்த ஓவியம் ஜேசு னறிவித்தலாக அமைந்திருக்கலாம் என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

# இறைச்சிக்காகக் கொல்லப்படவிருந்த நாய்கள் மீட்பு



டொரண்டோ, டிசெ. 27
சீனாவில் இறைச்சிக்காகக் கொல்லப்படவிருந்த நாய்கள் காப்பாற்றப்பட்டு கனடாவுக்கு கொண்டு செல்லப்பட்டன.
சீனாவின் யுலின் மாகாணத்தில் ஆண்டு தோறும் டிசம்பரில் நாய்க்கறி திருவிழா நடைபெறுகிறது. நாய்க்கறி சாப்பிட்டும், மது அருந்தியும் குளிர்காலத்தைப் பொதுமக்கள் குதூகலமாகக் கழிப்பார்கள். இதன் மூலம் குளிர்காலம் தங்களுக்கு உடல் நலத்தையும், வளத்தையும் தருவதாக நம்புகின்றனர். குறித்த விழாவுக்காக 2 கோடி நாய்கள் கொல்லப்பட்டு இறைச்சி விற்கப்படும். இதற்கு சமூக நல ஆர்வலர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தும் அதைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
அதைத் தொடர்ந்து கனடாவில் உள்ள பன்னாட்டு இரக்க சிந்தனைச் சங்கம் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டது.
அந்த அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் யுலின் பகுதிக்குச் சென்றனர்.
110 நாய்களை மீட்டெடுத்து கனடாவுக்கு கொண்டு சென்றனர்.
அங்கு அவற்றுக்குத் தஞ்சம் அளிக்கப்பட்டது. (ம)

# ஆக்ஸ்பேர்க் நகரை உலுக்கியெடுத்த இரண்டாம் உலகப் போரி

இரண்டாம் உலகப் போரின்போது பயன்படுத்தப்பட்ட வெடிக்காத மிகப்பெரிய குண்டைச் செயலிழக்க வைப்பதற்காக ஜெர்மனியின் ஆக்ஸ்பேர்க் நகரில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். கிட்டத்தட்ட ஆயிரத்து 800 கிலோ எடையுள்ள குறித்த குண்டு 1944 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்துப் படைகளால் பயன்படுத்தப்பட்டது என்று நம்பப்படுகிறது. இரண்டாம் உலகப்போரால் நிர்மூலமான நகர்களில் ஆக்ஸ்பேர்க்கும் ஒன்று. பின்னர், மெல்ல, மெல்ல மீண்டும் கட்டமைக்கப்பட்ட இந்த நகரத்தில் இவ்வளவு பெரிய வெடிகுண்டு கிடைத்த தகவல் அந்த நகர மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.
வெடிகுண்டு பாதுகாப்பாக நேற்றுமுன்தினம் செயலிழக்கச் செய்யப்பட்டது. ஆனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெடிகுண்டு இருந்த பகுதியிலிருந்து ஒன்றரை கிலோமீற்றர் சுற்ற வரையும் தங்களது வீடுகள அரசு அறிவுறுத்தியது. இ கிறிஸ்மஸ் பண்டிகையை ஆக்பேர்க் நகர மக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...பின் ...க்கு



## ...வகாரம்; ...ஸ்ரேல்

...சுலா, செனெகல் ஆகிய நாடுகளின் சார்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளும் வாக்களிக்க இருந்த நிலையில், தனது வெட்டுரிமை (வீட்டோ) அதிகாரத்தை அமெரிக்கா பயன்படுத்தி மேற்கண்ட தீர்மானத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என அமெரிக்காவின் வருங்கால அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியிருந்தார். ஆனால், தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா தலைமையிலான அமெரிக்க அரசு அவரது ஆலோசனையை நிராகரித்தது.

இஸ்ரேலுக்கு எதிரான இந்தத் தீர்மானத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ வாக்களிக்காமல் அமெரிக்கா நடுநிலை வகித்தது. இதனால் 15 நாடுகளில் 14 நாடுகளின் அமோக ஆதரவுடன் இஸ்ரேலுக்கு எதிரான இந்தத் தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியை பலஸ்தீன அரசு கொண்டாடி வரும் அதேவேளையில், தன்னைக் கைவிட்ட அமெரிக்காவுக்கு இஸ்ரேல் அரசு கண்டனம் தெரிவித்தது.

எங்கள் நாட்டுக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்துக்கு நாங்கள் கட்டுப்படமாட்டோம். இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகளுடனும் ஐக்கிய நாடுகள் சபையுடனும் நாம் கொண்டுள்ள உறவைத் தொடர்வது தொடர்பாக மீண்டும் பரிசீலனை செய்யவுள்ளோம் என்று இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு எச்சரித்தார்.

தனது ஆலோசனையை நிராகரித்த ஒபாமாவின் அரசைக் கண்டித்த ட்ரம்ப், ஜனவரி 20ஆம் திகதிக்குப் பின்னர் காட்சிகள் மாறும் என்று தெரிவித்தார். (ம)



# ஆட்டம் கண்டது சிலி சுனாமியும் தாக்கலாம்

தென்னமெரிக்க நாடான சிலியில் நேற்று பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தின் விளைவாக சுனாமி அலைகளும் ஏற்படலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

லேக் மாவட்டத்திலேயே இந்த நில அதிர்வு ஏற்பட்டது. அது ரிச்டர் அளவில் 7.6 எனப் பதிவாகியது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. உயிரிழப்புக்கள் தொடர்பான எந்தத் தகவல்களும் தெரிவிக்கப்படவில்லை. பொருள் சேதம் தொடர்பில் கணக்கிடப்படவில்லை. (ம)

# லி சியோபோவை விடுவிக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள்

மனித உரிமைகள் ஆர்வலரும் மற்றும் நோபல் பரிசு பெற்றவருமான லிசியாபோவைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக தடுப்புக் காவலில் வைத்துள்ள சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக்கணக்கான மக்கள் இணைந்து ஹொங்கொங்கில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சீனாவில் அரசியல் மாற்றம் வேண்டிப் போராடிய லியோ சிறைக்குத் தள்ளப்பட்டு ஏழாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதமாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ம)




# சிரியப் போருக்கு வேண்டும் முடிவு

*பாப்பரசர் வலியுறுத்தல்*

சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர் மிக விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்தார்.

வத்திக்கானில் உள்ள சென். பீற்றர் சதுக்கத்தில் தான் ஆற்றிய சிறப்பு உரையிலேயே பிரான்சிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

"சிரியாவில் கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. பன்னாட்டுச் சமூகமும் ஒன்றிணைந்து போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அங்கு அல்லற்படும் மக்களுக்காக நான் மன்றாடுகிறேன். இஸ்ரேலியர்களும், பலஸ்தீனியர்களும் ஒன்றிணைந்து புதிய வரலாறு எழுத வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள புதிய பதற்றங்கள் தணிய வேண்டும்.

தலைதூக்கும் பயங்கரவாதத்தால் உலக மக்களிடையே சாவு தொடர்பான "பயம் விதைக்கப்பட்டுள்ளது" என பிரான்சிஸ் மேலும் தெரிவித்தார். (ம)



...வியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ... நிலையில் குழந்தையின் ஓவியம் ...ஜசுவின் பிறப்பைப் பற்றிய முன்...ர். (ம)

## ...ரின் எச்சம்

...ற்றளவில் வசிக்கும் மக்கள் அனை... ...களில் இருந்து வெளியேறுமாறு ... இந்த அவசர வெளியேற்றத்தால் ...யைக் கடந்த சனிக்கிழமையே ... கொண்டாடி முடித்தனர். (ம)

# முஸ்லிம்கள் தொடர்பான விவரங்கள் ட்ரம்ப் அரசுக்கு வழங்கப்படமாட்டாது



அமெரிக்காவில் குடியேறியுள்ள முஸ்லிம்கள் தொடர்பான தகவல் பதிவுகள் டொனால்ட் ட்ரம்ப்பின் அரசுக்கு வழங்கப்படமாட்டாது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற நியூயோர்க் நகர இரட்டைக் கோபுர தாக்குதலைத் தொடர்ந்து 'தேசிய வருகைப் பதிவேடு' திட்டத்தை அமெரிக்க அரசு நடைமுறைப்படுத்தியது. அதன்படி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஈராக், ஈரான், சூடான், சிரியா உள்ளிட்ட 25 நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு வந்தவர்கள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டனர். அவர்கள் தொடர்பாக தனித்தனிப் பதிவேடு பராமரிக்கப்பட்டது. அமெரிக்காவில் குடியேறிய முஸ்லிம்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் குடியேற்ற அதிகாரிகளைச் சந்தித்து தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும் என்ற நடைமுறை கண்டிப்புடன் பின்பற்றப்பட்டது. 2002ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தக் கட்டுப்பாடுகள் 2003 ஆம் ஆண்டு டிசெம்பரில் தளர்த்தப்பட்டன. 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் முஸ்லிம்களைக் கண்காணிக்கும் 'தேசிய வருகைப் பதிவேடு' திட்டம் நடைமுறையில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டது.

ஆனால் இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி மீண்டும் செயற்படுத்த ட்ரம்ப் முடிவு செய்துள்ளார். அமெரிக்காவில் முஸ்லிம்கள் நுழைய தடை விதிக்கப்படும், முஸ்லிம்களுக்கு தனிப் பதிவேடு பராமரிக்கப்படும் என்று அவர் அண்மையில் தெரிவித்தார். இதனால் அமெரிக்காவின் மதச்சார்பின்மை பாதிக்கப்படும் என்று தற்போது ஆட்சியில் உள்ள ஜனநாயகக் கட்சியின் மூத்த தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எனவே முஸ்லிம்கள் தொடர்பான பதிவேட்டை முழுமையாக அழித்துவிட தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா முடிவு செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொது நலன்சார் விடயங்களில் ஒன்றுபட்ட அக்கறை அவசியம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை அண்டிய பகுதியில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தால் ரூபா 72 கோடி செலவில் அமைக்கப்பட இருந்த 8 மாடிகளைக் கொண்ட மருத்துவக் கல்வி வளாகம் அமைப்பது தொடர்பில் எழுப்பப்பட்ட எதிர்க் கருத்துக்கள் அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கின்றன.

இந்த விவகாரம் கடந்த 22ஆம் திகதி வடக்கு மாகாண சபையில் உறுப்பினர் ச.சுகிர்தனால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின்போது அவர் இது விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்தப் புதிய வளாகம், யாழ்ப்பாணத்தில் அமையப் பெறுவது மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்பதை மருத்துவத் துறையினரேகூட ஏற்றுக்கொள்கின்றனர். தற்போது வரைக்கும் வடக்கு மாகாணம் முழுவதிலுமே உயர்தர மருத்துவ வசதிகளையும், சிகிச்சைகளையும் வழங்கக்கூடிய மருத்துவமனையாக யாழ். போதனா வைத்தியசாலையே இருந்து வருகின்றது. மற்றைய எந்தவொரு மாவட்ட, ஆதார வைத்தியசாலைகளும் மேலதிக மற்றும் சிறப்புச் சிகிச்சைகளுக்கு இந்த வைத்தியசாலையையே நம்பியிருக்கின்றன.

போருக்குப் பின்னரான கடந்த சில ஆண்டுகளில் யாழ். போதனா வைத்தியசாலை புதிய புதிய பிரிவுகளுடன் மேலும் விரிவாக்கம் பெற்று விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்றது என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்டது. பௌதீக வளங்களின் அடிப்படையிலும், – பல கட்டுமானப் பணிகள் விரைவாக நடக்கின்றன – அது அண்மைக் காலங்களில் இன்னும் மேம்பட்டு வருகின்றது.

புதிய மருத்துவக் கல்வி வளாகமும் போதனா வைத்தியசாலைக்கு அருகில் அமையப்பெறுமானால் அது இன்னமும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. புதிய வளாகத்தில் நவீன அறுவைச் சிகிச்சைக் கூடங்களும் அமைக்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த வசதி கிடைக்கப் பெற்றால், தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியாமல் இருக்கின்ற – அதற்காகத் தனியார் வைத்தியசாலைகளை நாடிப் பெருந் தொகைப் பணத்தைச் செலவிடவேண்டியிருக்கிற – சில வகை அறுவைச் சிகிச்சைகளைச் செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இது தவிர பொது மருத்துவம், பெண்நோயியல், குழந்தை வைத்தியம், பரிசோதனைக்கூடங்கள் என்பவற்றின் வசதிகளும் இந்தப் புதிய மருத்துவ வளாகத்தின் மூலம் மேம்படும் வாய்ப்புண்டு.


இவ்வாறு பொதுமக்களுக்குப் பல வழிகளிலும் நன்மையளிக்கக்கூடிய ஒரு மருத்துவ வளாகத்திற்கு போதனா வைத்தியசாலையில் பணியாற்றக்கூடிய மருத்துவ நிபுணர்கள் சிலர் மாற்றுக் கருத்தை முன்வைத்திருக்கிறார்கள் என்பது கவலையளிக்கக்கூடியது. இது தொடர்பில் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு எழுதிய கடிதத்தில் இதற்காகப் பல்வேறு காரணங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவற்றை நியாயமற்றவை என்று நிராகரித்துவிடவும் முடியாதவை.

ஏற்கனவே மருத்துவ ஆளணி மற்றும் தாதியர் பற்றாக்குறையை எதிர்கொண்டுவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் இத்தகைய புதிய வளாகம் ஏற்படுத்தப்படுவது மேலும் பற்றாக்குறைகளை உருவாக்கிவிடும், அது, தற்போது அங்கு இருக்கின்ற மருத்துவ வசதிகளை யும் சீரழித்துவிடும் என்று அவர்கள் தமது கவலையை வெளிப் படுத்தியிருக்கிறார்கள். அது நியாயமான கவலையும்கூட.

எனினும், இத்தகையதொரு வரப்பிரசாதம் கிடைக்கும்போது – அதுவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீண்ட காலத்தின் பின்னர் கிடைக்கும்போது – அதன் சாதக பாதகங்களை ஆராய்ந்து, பாதகங்களைக் களைவதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து செயற்படுத்த அனைவரும் நிச்சயம் ஒன்றிணையவேண்டும்.

பிரச்சினைகள் இருக்கிறது என்பதுதற்காகப் புதிய வளாகத்தை நிராகரிப்பது சரியானதாகப்படவில்லை. எனவே பிரச்சினைகளுக்கான தீர்வைக் கண்டு புதிய வளாகத்தை கம்பீரத்துடன் கட்டுவிப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் இணைந்து முன்வரவேண்டும்.

கட்டடத்தின் ஒரு தளம் குறித்தே கருத்து முரண்பாடு இருந்தது அதுவும் தீர்க்கப்பட்டுவிட்டது என்று போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ப.சத்தியமூர்த்தி நேற்று அறிவித்திருக்கிறார். திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் கூறியிருக்கிறார். அது ஆரோக்கியமானது. அந்த ஒற்றுமை நீடித்திருக்கவேண்டும். பொது நலன்சார் திட்டங்களில் குறைகள் இருந்தாலும்கூட அவற்றை நிறைவாக்கிச் செயற்படுத்த அந்த ஒற்றுமையே அவசியமானது.



# அரசியல் தீர்வை அர்த்தமற்றதாக்கும் அரசின் நகர்வுகள்

எம்.ஐ.முபாறக்

உலகில் பல நாடுகள், தத்தம் நாடுகளில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாகவே உலக அளவில் பிரபல்யம் அடைந்திருக்கின்றன.

தற்போது நாம் சிரியா பற்றிப் பேசுகின்றோம். 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிரியா இந்த அளவுக்குப் பேசப்பட்டது கிடையாது. சிரியாவில் இடம்பெற்றுவரும் கொடூரப் போர், அதனால் லட்சக்கணக்கில் மக்கள் கொல்லப்படுவதும், அந்த நாடு உலகம் முழுவதும் பிரபல்யமடையக் காரணமாகியுள்ளது. அந்த நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மனிதப் பேரவலத்தை மறைக்கவோ மறுக்கவோ முடியாத அளவுக்கு அது தீவிரம் அடைந்துள்ளது. இவ்வாறு போர் இடப்பெற்றுக் கொண்டிருக்கும் எல்லா நாடுகளும் உலகம் பூராகவும் அறியப்படுகின்றன; மக்கள் எதிர்கொள்ளும் அழிவுகள் தினமும் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறுதான் இலங்கையும் உலக அளவில் பிரபல்யமானது.

### மூன்று தசாப்த காலப் போருக்கு உரிய அரசியல் தீர்வே இன்றைய தேவை

30 வருடங்களாக இடப்பெற்று வந்த போர், இலங்கையை எல்லா நாடுகளுக்கும் அறிமுகப் படுத்தியுள்ளது. கூடவே போர் அழிவுகளையும் அது பிரபல்யப் படுத்திக்கொண்டே இருந்தது. அந்தப்போரால் கடும் பாதிப்புகளை எதிர்கொண்ட வடக்கு, கிழக்கு தமிழர்களின் நிலைமையை, முழுமையாகச் சர்வதேசத்துக்குக் கொண்டு சென்றது. அவர்கள் உண்மையிலேயே கடும் பாதிப்புகளை எதிர்நோக்கினார்கள் என்பதாலேயே அவர்களின் பாதிப்பை ஈடுசெய்வதற்கு-அவர்கள் எதிர் கொண்ட-எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கு சர்வதேசம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது. இலங்கை அரசும் அந்த உண்மையை ஏற்றுக் கொண்டுதான் அரசியல் தீர்வு காணும் முயற்சியில் இறங்கியுள்ளது.

> போரை முடித்து வைத்து, ஐந்து வருடங்களுக்கும் அதிகமாக ஆட்சியில் இருந்த மகிந்த, தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்க எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஆனால்,தீர்வு வழங்கப்படும் என்று சொல்லிச் சொல்லியே காலத்தைக் கடத்தினார். அவரைத் தொடர்ந்து ஆட்சிபீடமேறியிருக்கும் ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் சற்று வேகமாகவே செயற்படுகின்றனர்

போரை முடித்து வைத்து ஐந்து வருடங்களுக்கும் அதிகமாக ஆட்சியில் இருந்த மகிந்த, தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்க எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஆனால்,தீர்வு வழங்கப்படும் என்று சொல்லிச் சொல்லியே காலத்தைக் கடத்தினார். அவரைத் தொடர்ந்து ஆட்சிபீடமேறியிருக்கும் ஆட்சியாளர்கள், இந்த விடயத்தில் சற்று வேகமாகவே செயற்படுகின்றனர் என்பது தெரிகின்றது. தீர்வுப் பொதியை உள்ளடக்கிய புதிய அரசமைப்பை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் நிலைக்கு அவர்கள் இப்போது வந்துள்ளனர். அடுத்த வருடம் ஜனவரி அல்லது பெப்ரவரியில் அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படலாம் என்று தெரிய வருகின்றது.

ஆனால், அந்தத் தீர்வு தமிழர்கள் விரும்புகின்ற விதத்தில், -தமிழர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்கும் விதத்தில்-அமையாது என்பதை நிச்சயமாகச் சொல்லலாம்.

தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் அளவை-அவற்றின் வீரியத்தைக்-குறைத்துக் காட்டுவதன்மூலம்தான், அரசு முன்வைக்கும் அரைகுறை அரசியல்தீர்வை முழுமையான தீர்வாகக் காட்டி சர்வதேசத்தை நம்பவைக்க முடியும். அதற்கான வேலைகளில் அரசு இப்போது இறங்கியுள்ளது.

தமிழர்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என்றும், அவற்றுக்கு தீர்வு அவசியம் என்றும் ஒருபுறம் கூறிக்கொண்டு, அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகள்தான் என்று பெயரிடும் ஓர் இராஜதந்திர நகர்வை அரசு இப்போது மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

இதன்மூலம் இப்போது தமிழர்கள் எதிர்நோக்கும் நிர்வாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியிலான பிரச்சினைகளுக்கு மாத்திரம் தீர்வை முன்வைத்து. போரால் ஏற்பட்ட பிரச்சினைகளை மூடிமறைப்பதற்கு அரசு திட்டம் வகுத்துள்ளது என்று தெரிய வருகின்றது.

நிர்வாக ரீதியிலான பிரச்சினைகள் என்று பார்த்தால், அவை ஓர் இனத்துக்கு மாத்திரம் உரித்தானவை அல்ல.எல்லா இனங்களும் அவ்வாறான பிரச்சனைகளை எதிர்நோக்கவே செய்கின்றன.தமிழர்கள் எதிர்நோக்கும் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகள் தீர்க்கப்படும் அதே நேரம், சிங்கள மற்றும் முஸ்லீம் மக்கள் எதிர்நோக்கும் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

அந்தவகையில்,தமிழர்கள் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்போது, சிங்களவர்கள் அதை எதிர்க்கமாட்டார்கள். பதிலுக்கும் சிங்களவர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் . ஆகவே தமிழர்களின் பிரச்சனைகளை பொதுப் பிரச்சினையாகக் கருதி அதன் அடிப்படையில்தான் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேசத்தில் இலங்கையின் பெயர் மிக மோசமாகப் பேசப்பட்டதால் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பது போல் மகிந்த நாடகமாடத் தொடங்கினார்.அந்த நாடகத்தின் ஓர் அங்கமாக காணாமல் போனோரைக் கண்டு பிடிக்க–அது தொடர்பிலான முறைப்பாடுகளைத் திரட்டுவதற்காக–ஜனாதிபதி ஆணைக் குழுவை அமைத்துப் படம்காட்டத் தொடங்கினார்.



### உயிரிழப்பு

உண்மையில் தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் அனைத்தும் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகள் தானா என்று ஒருமுறை பார்க்க வேண்டியுள்ளது.30 வருடகாலப் போரால் அவர்கள் இழந்த உயிர்கள் எத்தனை என்பதை இந்த உலகம் நன்கு அறியும்.

போரில் நேரடியாகச் சிக்கியும், தமிழன் என்ற காரணத்துக்காக வேறு வழிகளில் கொல்லப்பட்டும் பல்லாயிரக்கணக்கான உயிர்களை தமிழர்கள் இழந்தனர்.அந்த இழப்பின் தாக்கங்கள் இன்னும் அந்த இனத்தைப் பாதித்துக்கொண்டே இருக்கின்றன.

இந்த இழப்பை எந்த நிர்வாகப் பிரச்சினையின் கீழ் சேர்ப்பது?இந்த இழ்ப்பை மூடி மறைத்துவிட்டா- அதற்கான தீர்வைத் தவிர்த்து விட்டா- அரசியல் தீர்வை வழங்குவதற்கு அரசு திட்டமிடுகின்றது?

### கடத்தல்,காணாமல் போகச் செய்யப்பட்டமை

உயிரிழப்பைப்போன்று, காணாமல் ஆக்கப்பட்டமையும் தமிழர்கள் எதிர்கொண்ட மற்றுமோர் இழப்பாகும். போர்க் காலத்தின்போது உறவினர்களின் கண் முன்னே படையினரால் கைது செய்யப்பட்ட -வெள்ளை வான்களில் கடத்தப்பட்ட–தமது உறவுகளைத் தேடித் தமிழர்கள் பல வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

மகிந்தவின் ஆட்சியில்தான் இந்தக் கடத்தல்களும் கைதுகளும் உச்ச நிலையில் இருந்தன.கடத்தப்பட்டவர்கள்–காணாமல் போனவர்கள் எவரும் கண்டு பிடிக்கப்படவில்லை. அவர்களின் உறவினர்கள் அவர்களைத் தேடி நாடு பூராகவும் அலைகின்றனர்.ஆனால்,எதுவித பயனும் இன்னும் கிட்டவில்லை.

போர் முடிந்ததும் இவ்வாறான உறவுகளைத் தேடிக் கண்டு பிடித்துத் தருமாறு மக்கள் போராட்டங்களை நடத்தினர்.அப்படி ஏதும் நடக்கவில்லை என்பதுபோல் மகிந்த அரசு காட்டிக் கொண்டது.இருந்தும்,மக்கள் விடவில்லை.சர்வதேசத்தின் கவனத்திற்கு இதைக் கொண்டு சென்றனர்.

சர்வதேசத்தில் இலங்கையின் பெயர் மிக மோசமாகப் பேசப்பட்டதால், தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதுபோல் மகிந்த நாடகமாடத் தொடங்கினார்.அந்த நாடகத்தின் ஓரங்கமாக, காணாமல் போனோரைக் கண்டு பிடிக்க–அது தொடர்பிலான முறைப்பாடுகளைத் திரட்டுவதற்காக–ஜனாதிபதி ஆணைக் குழுவை அமைத்து படம்காட்டத் தொடங்கினார்.

அந்த ஆணைக் குழு, வடக்கு–கிழக்குக்குச்சென்றுவிசாரணைகளை நடத்தியது.புதிய அரசிடம் அது தொடர்பிலான அறிக்கையைக் கையளித்தது. அந்த அறிக்கையைப் பிரதமர் நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

இந்தக் கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் ஏற்படக் காரணமான நிர்வாகச் சிக்கல்கள் எவை?

### அரசியல் கைதிகள் விவகாரம்

அரசியல் கைதிகள் விவகாரம் என்பது போரால் தமிழர்கள் எதிர்கொண்ட மற்றுமோர் இழப்பாகும்.இந்தப் பிரச்சினை சுமார் இரண்டு தசாப்த வயதைக் கொண்டது.அன்று முதல் அந்தக் கைதிகள் அவர்களது விடுதலை தொடர்பில் பல போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். புலிகள் விடயத்தில் அப்போதைய காலம் கடுமையாக இருந்ததால், அரசியல் கைதிகளின் ஜனநாயகப் போராட்டங்கள்கூடக் கடினமானவையாகவே இருந்தன.

2009 இல் போர் முடிந்து 10,000 இற்கு மேற்பட்ட புலிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டமை, இந்த அரசியல் கைதிகளுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது.அதனால்,அவர்கள் அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தும் பார்த்தனர்;போராடியும் பார்த்தனர்.ஆனால்,அப்போதைய மகிந்த அரசு அவற்றுக்கெல்லாம் அடிபணியவில்லை.போராட்டங்கள் முற்றாக அவமதிக்கப்பட்டன.

இந்த நிலையில்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ரணில்–மைத்திரி ஆட்சி ஆட்சிப் பொறுப்பேற்றதும், அந்த அரசிடம் தமது விடுதலைக் கோரிக்கையை முன்வைத்து சிறைகளில் வாடும் இந்தக் கைதிகள் கடந்த வருடம் நவம்பர் மாதம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.அந்தப் போராட்டத்துக்கு ஓரளவு செவி சாய்த்த அரசு, முதல் கட்டமாக 72 கைதிகளைப் பிணையில் விடுதலை செய்வதாக அறிவித்தது. ஆனால்,அந்த விடுதலைநடவடிக்கை முழுமை பெறாததால் கைதிகள் அதன் பிறகும் பல தடவைகள் போராட்டம் நடத்திவிட்டனர்.

ஆக,இதுவும் இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே உள்ளது. இதை எந்த நிர்வாகப் பிரிவின்கீழ் இந்த அரசு சேர்க்கப் போகின்றது?

போரால் ஏற்பட்ட இழப்புகளில் ஓரிரு விடயங்கள்தான் மேலே சுட்டிக்காட்டப்பட் டுள்ளன.இவைபோக காணி உள்ளிட்ட இன்னும்பல இழப்புகளை தமிழர்கள் சந்தித்துள்ளனர்.அவை இன்னும் உரியமுறையில் பட்டியலிடப்படவில்லை.

இவ்வாறு போரால் எண்ணற்ற இழப்புகளை சந்தித்துத் தமிழர்கள் தவிக்கின்ற நிலையில், இவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டு-மூடி மறைத்துவிட்டு தமிழர்கள் இப்போது எதிர்நோக்கி வரும் நிர்வாக ரீதியிலான பிரச்சினைக்கு மட்டும் தீர்வை வழங்க முற்படுவது எந்தவகையில் நியாயம்? இவ்வாறான தீர்வை வழங்குவதற்கு ஏன் அரசமைப்பை மாற்ற வேண்டும்? இப்போதுள்ள அரசமைப்பில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லையா? அரச சேவையை உரிய முறையில் கண்காணித்தால், இந்தப் பிரச்சினை தானாகத் தீர்ந்து போகும். இதுவா தமிழர்களின் இப்போதைய பிரச்சினை?தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டிய தீர்வு, உரிய முறையில் வழங்கப்பட்டால், இந்த நிர்வாக ரீதியிலான பிரச்சினைகள் தாமாகவே தீரும்.

ஆகவே,சிங்கள அரசியல் தலைவர்களின் எதிர்ப்புக்குப் பயந்து, தீர்வை வழங்குதல் என்ற பெயரில் தமிழர்களையும் உலகையும் ஏமாற்றுவதற்கு அரசு இவ்வாறான முட்டாள்தனமான வேலைகளைச்செய்வதற்கு முற்பட்டால் அது ஒருபோதும் வெற்றியளிக்காது.



## வாசகர் திருமுகம்

### வேடதாரிகள் குறித்து அவதானம் அவசியம்

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் குறித்துத் தமக்கு எந்தவித அக்கறையும் கிடையாது என்று ஒரு தரப்பினர்கள் வெளியில் வேடம் போட்டு வந்தாலும், உள்ளுக்குள் உறுப்பினராகும் ஆசையுடன், தேர்தல் எப்போது இடம்பெறுமென்ற எதிர்பார்ப்புடன் நாள்களை நகர்த்தி வந்ததென்னமோ உண்மைதான். எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் இடம்பெறுமென்ற உறுதிப்பாடு தற்போது ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

இனியென்ன? எம்மவர்களில் ஒரு சாரார் ஆளுக்கு ஆள் 'கொடுக்குக் கட்டிக் கொண்டு' புள்ளடிக்காக உங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டத் தொடங்கப் போகிறார்கள்!

இவர்களெல்லாம் கடந்த காலத்தில் உள்ளூராட்சிச் சபைகளது நிர்வாகத்தில் தலையிட்டு எத்தகைய தகிடுதத்தங்களை மேற்கொண்டார்கள் என்பதை அலசி ஆராய்ந்து பார்த்துத் தகுதியானவர்களை இனம்காணும் பெரும் பொறுப்பு உங்களுடையதே.

*பா.வடிவேற்கரசன்*
*ஊரெழு*

### பொருத்தமானவர்கள் பயனடைவதே நியாயமானது

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் மற்றும் அதன் அமைச்சுக்களால் தத்தமக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரதேச மக்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்படும்போது. அவை ஒரு ஒழுங்கமைந்த பொறிமுறையின் கீழ் வழங்கப்படுவதில்லை எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எத்தகைய சுத்துமாத்துக்கள் செய்தாவது, இத்தகைய உதவித்திட்டங்களில் தாம் பயன்பெற்றுவிடும் கில்லாடிகள் பலர் எம் மத்தியில் உள்ளனர். அந்த வகையில் குறிப்பிட்ட ஒருவர் இருவேறு உதவித்திட்டங்களில் எவ்வாறோ பயன்பெற்றுவிடுகின்றார் என ஆதாரப்பூர்வமாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நியாயமற்ற இந்த நடைமுறை தவிர்க்கப்பட்டு, பொருத்தமானவர்களுக்கு அவை கிடைக்க வழி செய்ய வடக்கு மாகாணசபை உரிய பொறிமுறையொன்றை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*ப.சீவரத்தினம்*
*அரியாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த அன்பு சிறந்தது?



ஆசிரியர் அன்பு தொடர்பான நன்னெறிக் கல்விப்பாடத்தைநடத்திக்கொண்டிருந்தார். வகுப்பிலிருந்த மாணவன் ஒருவன் அவரிடம், "ஐயா நம்மிடம் அதிகமான அன்பு கொண்டவரை எப்படி அடையாளம் காண்பது?" என்று கேட்டான். ஆசிரியர் அவனிடம், "உண்மையான அன்பை நீ அறிந்துக் கொள்வதற்கு முன்பாக, நான் சொல்வதைச் செய். பிறகு, அதன் பொருளை நீ அறிந்து கொள்வாய்" என்றார்.

அந்த மாணவனும், "சொல்லுங்கள் ஐயா, செய்கிறேன்" என்றான்.

உடனே அந்த ஆசிரியர், "நம்பள்ளியிலிருக்கும் தோட்டப்பகுதிக்குச் செல். அங்கிருக்கும் புற்களைக் கீழ் நோக்கிப் பார்த்தபடி நடந்து செல். உனக்கு அழகாகத் தோன்றும் ஒரு புல்லைத் தேர்வு செய்து என்னிடம் கொண்டுவா. ஆனால், ஒரு நிபந்தனை, நீ நடந்து சென்ற பாதையைத் திரும்பிப் பார்க்கக்கூடாது. உன் முன்னால் இருக்கும் புல்லை மட்டுமே தேர்வு செய்து என்னிடம் கொண்டு வர வேண்டும்" என்றார்.

தோட்டத்திற்குச் சென்று திரும்பிய அந்த மாணவனின் கையில் எந்த ஒரு புல்லும் இல்லை.

ஆசிரியர் அவனிடம், "நான் உன்னை ஓர் அழகான புல்லைக் கொண்டு வரச் சொன்னேன். ஆனால், நீ வெறுங்கையுடன் வந்திருக்கிறாயே...?" என்று கேட்டார்.

உடனே அந்தமாணவன், "ஐயா, நான் புற்களைப் பார்த்தவாறு நடந்து கொண்டிருந்தேன். எனக்குப் பல அழகான புற்கள் தெரிந்தன. நீங்கள் கேட்ட மிக அழகான புல்லைத் தேடி நானும் தொடர்ந்து நடந்தேன். நான் முன்னால் சென்ற பின்பு, முன்பு தெரிந்த புல்லே இந்தப் புல்லை விட அழகாக இருந்ததே... என்று நினைத்துத்திரும்ப நினைத்தேன். ஆனால், நீங்கள் சொன்ன நிபந்தனை என்னைத் திரும்ப விடாமல் செய்து விட்டது. நான் எந்தப் புல்லையும் தேர்வு செய்ய முடியாமல் போய்விட்டது." என்றான்.

அதைக் கேட்ட ஆசிரியர், "மாணவனே, நீ கேட்ட கேள்விக்கான பதில் அதுதான். நம் மீது அன்பு காட்டும் ஒருவர் நம்மருகில் இருக்கும் நேரத்தில் நாம் அவரை விடச் சிறந்த ஒருவரைத் தேடக் கூடாது. அவர்களின் அன்புக்கு மரியாதை செலுத்த வேண்டும். நம் வாழ்க்கையைப் பின் நோக்கிப் பார்த்துப் பாசத்தை எடை போடக்கூடாது. இறந்த காலத்தை நாம் சரிசெய்ய இயலாது. எம்மோடு நிகழ்காலத்தில் இருப்பவரோடு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், அதைச் சரி செய்து கொள்ளமுடியும். அவர்களது பாசத்தை நிலைக்கச் செய்ய முடியும். நம் மீது அன்பு செலுத்தப் பலர் இருந்தாலும், நிகழ்காலத்தில் இருப்பவரே சிறந்தவர். நம் வாழ்க்கையின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டு நம் மீது அன்பு செலுத்துபவர்களிடம், நேர்மையாக நடந்து கொள்வதே சிறந்த குணமாகும்" என்றார்.



பகவான் ராமகிருஷ்ணர் நம் நாட்டில் பிறந்த பல்லாயிரக்கணக்கான மகான்களில் ஒருவர். மிகச் சமீப காலத்தில் தோன்றிய ஒரு பெரிய மகான்... சுவாமி விவேகானந்தரை ஆன்மிகப் பாதையில் செலுத்திய குரு... அவர் தம் மொழிகளைக் கேட்டலும் படித்தலும் நம் மனத்திற்கு அமைதியையும், தெளிவையும் வழங்கும் என்பதில் ஐயமே இல்லை.

*பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்*

# எனது கிராமம்



பச்சைப் பசேலென்ற வயல்வெளிகளின்
நடுவில் பிறந்தேன் நான்
எனது அறியாமையினால் – என்
வாழ்க்கையில் தோற்றது போன்ற
ஓர் உணர்வு.

இரைச்சலைக் கொண்ட நகர்
நோக்கிச் சென்றேன்– ஆனால்
கிராமத்தில் இருக்கும் அமைதி எங்கு?
அங்கு வாழும் இன்பம் எங்கே? என
என்னுள் தேடினேன் நான்.
அவ்வேளை தோன்றியதே ஒரு குரல்
திரும்பு உன் கிராமத்திற்கென்று...

*ச. அஜீத்தா*
*தரம் – 13A கலைப்பிரிவு*
*யா/ டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி*



## சிந்தனை விருந்து


1. எவருடைய குறைகளை எண்ணிவிட முடியுமோ அவரே உண்மையில் உயர்ந்த மனிதர்.
2. மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட ஒரு கணப் பொழுதாயினும் உதவி செய்வது மேல்!
3. பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் எவருக்கும் உன்னைத் தெரியாது.
4. சில நேரங்களில் புத்தி வெற்றி பெறுகிறது. பல நேரங்களில் வெற்றியே புத்தியாகிவிடுகிறது!
5. மனிதனின் இயற்கையான குணம் சிறப்பாகச் சிந்திப்பது. ஆனால் முட்டாள்தனமாகச் செயற்படுவது!
6. முட்டாளைச் சமாளிக்க சுருக்கமானமான வழி மௌனமாக இருப்பதுதான்!
7. அருகில் இருக்கும்போது கோபுரங்கள்கூட உயரமாகத் தெரிவதில்லை. தூரத்தில் இருக்கும்போதே பிரமாண்டமாகத் தெரிகின்றன!
5. நன்றாகப் பேசுவது நல்லதுதான். ஆனால் நன்றாகச் செய்வது அதனிலும் நல்லது!



## வரலாற்றில் இன்றைய தினம்

1845 - ஜோர்ஜியா ஜெபர்சனில் முதன் முதலாக மகப்பேற்றின்போது மருத்துவர் கிறபோட் லோங்கால் ஈதர் மயக்க மருந்து பயன்படுத்தப்பட்டது.
1911 - கல்கத்தாவில் இடம்பெற்ற தேசிய காங்கிரசின் மாநாட்டில் இந்தியாவின் தேசிய கீதம் 'ஜன கண மன' முதன் முதலாகப் பாடப்பட்டது.
1918 - ஜேர்மனிக்கு எதிரான போலந்தின் எழுச்சி தொடங்கியது.
1922 - உலகின் முதலாவது விமானந் தாங்கிக் கப்பலாக ஜப்பானின் விமானம் தாங்கிக் கப்பல் ஹெஷோ சிறப்பாகத் தயாரிக்கப்பட்டது.
1988 - தெற்கில் தொடர்ந்தும் வன்செயல்கள்.
- தன்னைக் கொலை செய்ய மொசாட் திட்டமென அரபாத் தகவல்.
1993 - தளபதி சிசில் மீது பல ஊழல் குற்றச்சாட்டுக்கள்; மிரட்டலின் பின்னரே பதவி விலகினாராம்.
- அளம்பிலில் குண்டு வீச்சு; இரு சிறுவர்கள், பெண் ஒருவர் சாவு. ப.நோ.கூ.ச கட்டடமும் 5 வீடுகளும் சேதம்.
1999 - யாழ். புதிய இராணுவத் தளபதியாக நிஹால் ஜயக்கொடி பதவியேற்பு.
2005 - பருத்தித்துறையில் 12 இராணுவத்தினர் கிளைமோர்த் தாக்குதலில் சாவு.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2017 – 2020

சுப ஸ்ரீ துன்முகி வரும் தை மாதம் (26.01.2017) 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7:29 மணியளவில் சனிபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசுராசிக்குள் பிரவேசிக்கிறார். இங்கு அவர் 24.01.2020 வரை 3 ஆண்டுகள் சஞ்சாரம் செய்கிறார்.




உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்)

(போ, ஜ, ஜி, ஜீ, ஜே, க, கா, கி ஆகிய எழுத்துக்கள் பெயரின் முதல் எழுத்தாக கொண்டவர்களும் தை மாதத்தில் பிறந்தவர்களுக்கும் இந்தப் பலன்கள் பொருந்தும்.

வான மண்டலத்தில் 10ஆவது ராசியாக சஞ்சரிக்கும் சனிபகவானே உங்களது ராசியின் அதிபதி ஆவார். மனதில் உறுதியும், உழைப்பில் நேர்மையும், செயலில் சற்று வேகமும், எதையும் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆற்றலும் தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் செயலாற்றும் ஆற்றலும் உடையவர்கள். நீங்கள் எண்ணியதை எண்ணியபடி செயலாற்ற வேண்டும் என்ற எண்ணமும் எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையும், தெய்வ சிந்தனையும் உடையவர்கள். எதையும் கண்டு அஞ்சாத நெஞ்சமும், ஆர்ப்பரிக்காமல் எதையும் அமைதியாகச் செய்து முடிக்கும் விவேகமும் உங்கள் தனிச் சிறப்பாகவும் மற்றவர்களின் சொத்துக்கும் பொருளுக்கும் ஆசைப்படாத ஆன்மா நீங்கள். உழைப்பு என்ற சொல்லுக்கு அர்த்தம் உள்ளவர்கள் நீங்கள்.

உங்கள் ராசிக்கு இதுவரை 11ஆம் இடமான ஸ்தானத்தில் சஞ்சரித்த சனி பகவான் இப்பொழுது 12ஆம் இடமான விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்க போகிறார். 12ஆம் இடம் என்பது விரயஸ்தானம் மட்டுமல்ல அது முதலீட்டு ஸ்தானமும் கூட, உங்கள் மகர ராசியின் அதிபதி சனி ஆவார். அவரே உங்கள் ராசியின் 2ஆம் இடமான குடும்பஸ்தானத்திற்கும் அதிபதியாகி அவர் 12ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் நீங்கள் அடிக்கடி பிரயாணங்கள் செல்ல வாய்ப்பு அமையும். இடமாற்றம் அமையும். குடியிருக்கும் வீடு, தொழில் ஸ்தாபனம், பணிபுரியும் இடம், அலுவலகம் இவற்றில் மாற்றங்கள் வர வாய்ப்பு அமையும். இதுவரை நடைபெறாமல் தள்ளிப் போன வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணங்கள் செல்ல வாய்ப்புகள் வந்து அமையும். அலைச்சல்கள் அதிகரிக்கும். இதனால் உடல் அசதியும், சோர்வும் அதிகரித்துக் காணப்படும். எவ்வளவு சம்பாதித்தாலும் அந்தப் பணம் அல்லது பொருள் கையில் தங்காது. ஒன்றில் விரயமாகும் அல்லது செலவாகும் அல்லது முதலீடாகும். எனவே தேவையற்ற விரயங்களைத் தவிர்த்தல் நலமாகும். மறைமுகமான எதிரிகளால் நமக்கு தேவையற்ற பிரச்சினைகளும், இடைஞ்சல்களும் வந்து சேரும். பணப்புழக்கம் தாராளமாக இருந்தாலும் சற்று பற்றாக் குறையாகவே இருந்து வரும். கொடுக்கல் வாங்கல்களில் சற்று கவனமுடன் செயற்படுதல் வேண்டும்.

எடுக்கும் காரியங்களில் சற்று தடை ஏற்பட்டாலும் அதனால் நன்மைகள் அதிகமாகும். புதிய முயற்சிகள் சற்று சுமாராகவே இருந்து வரும். வேலை கிடைக்காதவர்களுக்கு வேலை கிடைக்கும். வேலையில் முன்னேற்றமும் ஊதிய உயர்வும் ஒரு சிலருக்கு அமையும் தாயாரின் உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுதல் அவசியம் காதல் விடயங்கள் சந்தோசமாக அமையும். தந்தையாரின் அன்பும் ஆதரவும் இருந்து வரும். புது நண்பர்கள் வட்டாரம் உருவாகும். பூர்வீக சொத்துக்கள் கைக்கு கிடைப்பதில் நிறைய தடைகளும், சிக்கல்களும் வந்து சேரும். உங்களைப் பற்றிய வீண் வதந்திகள் உலவிய வண்ணம் இருக்கும். அதிலும் தேவையற்ற விடயங்களில் தலையிடுவதோ தேவையற்ற விடயங்களைப் பற்றி பேசுவதோ கூடாது. எதிலும் நிதானம் தேவை. தொழில் ரீதியாக தேவை யற்ற போட்டி பொறாமைகளை சந்திக்க வேண்டி வரும்.

உடன் பணிபுரிபவர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும். அவர்களால் இதுவரை இருந்து வந்த நட்பும் பாசமும் போராட்டமாக மாறி வரும். போக்குவரத்து வண்டி வாகனங்களில் எப்பொழுதும் எச்சரிக்கை தேவை. சுய தொழில்களில் ஏற்றம் இறக்கம் இருந்து வரும். லாபம் வருவது போல் இருந்தாலும் அந்த லாபம் கைக்கு வருவதில் தடையேற்படும். வரவுகள் ஆறு போல் இருந்தாலும் செலவுகள் கடல் போல் ஆகிக் கொண்டே இருக்கும். இருப்பினும் தெய்வ அனு கூலத்தால் அவற்றை எளிதில் சமாளித்து விடுவீர்கள். கூட்டுத் தொழில்கள் செய்ய புது தொழில் கூட்டாளிகள் வந்து சேர்வர். நேரத்திற்கு உணவு அருந்துதல் வேண்டும். உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். உங்களது நிரந்தர பழக்க வழக்கங்களை மேற் கொள்ளக் கூடாது. முக்கிய பொறுப்புகளைச் செயல்படுத்துவதில் தடையும் கடமைகளை சரிவர நிறைவேற்றுவதில் நிறைய தடைகளும் இருந்து வரும். சந்தேகம் அவநம்பிக்கை தடுமாற்றம் இவற்றை தூக்கி எறிந்து வெற்றி என்ற ஒன்றை மட்டும் இலக்காக கொண்டு செயற்படுதல் வேண்டும்.

தொடர்ந்து மருந்து மாத்திரைகள் தேவையில்லாமல் சாப்பிட வேண்டியது வரும். சர்க்கரை, உப்பு சத்து இருப்பின் அதை கட்டுக்குள் வைக்கவும். கண், அடிவயிறு, கால் போன்ற உறுப்புகளில் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். உடலில் சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் பார்த்து கொள்ளல் வேண்டும். உடலில் சிறு பிரச்சினை என்றாலும் நல்ல மருத்துவரை அணுகுதல் வேண்டும்.

**பெண்களுக்கு**

வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்க சற்று போராட வேண்டி வரும். எதிர்பார்த்த வேலை அமைவதில் சற்று தடையேற்படும். உயரதிகாரிகளின் அன்பும் ஆதரவும் கிட்டும். சக ஊழியர்களால் தேவையற்ற பிரச்சினைகள் தோன்றி மறையும். காதல் விடயங்கள் சந்தோசமாக இருக்கும் திருமணம் போன்ற சுபாகாரியங்கள் நடைபெறும். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் அமையும்.

## நாளை

**மார்கழி-13**

புதன்கிழமை -28.12.2016
திதி: சதுர்த்தசி மு.ப.11.37
நட்சத்திரம்: கேட்டை மு.இ.10.17
ராகுகாலம்:12.28-01.58 வரை
சுபநேரம்:04.58-06.28 வரை
அமாவாசை விரதம்
கெர்ப்போட்டாரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையின் உயர்ந்த பண்புகள் நல்லாட்சியில் பேணப்படவேண்டும்

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவி ராஜ் கொலை வழக்கில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு தமிழர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

ஏனைய வழக்குகளும் இதே மாதிரியானதொரு தீர்ப்பைக் கொண்டிருக்கப் போகின்றனவா? என்ற பலத்த சந்தேகமும் அவர்களின் மனங்களில் எழுந்துள்ளது. அமைச்சர் மனோகணேசன் கேள்வி எழுப்பியதைப் போன்று ரவி ராஜ் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டாரா என எண்ணவும் தோன்றுகின்றது.

ஒரு நாட்டிலே அதியுயர்ந்த இடத்தை வகிப்பது நீதித்துறைதான். நீதித்துறை நேர்மையாகவும், சரியாகவும் செயற்படும்போதுதான் மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்.

கடந்த ஆட்சிக் காலத்தின்போது நீதித்துறையில் ஜனாதிபதியின் தலை யீடுகள் அதிகளவில் காணப்பட்டன. இதனால் அதன் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாக இருந்தது. தமக்கு நீதி கிடைக்குமா என்ற சந்தேகமும் மக்களிடம் காணப்பட்டது. ஆனால் இன்று நல்லாட்சி எனக் கூறிக் கொண்டு அரசொன்று செயற்பட்டு வருகின்றது. நல்லாட்சியில் அனைவருக்கும் நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். ரவிராஜ் கொலை வழக்கில் நிய மிக்கப்பட்ட ஜூரிமார் அனைவரும் சிங்கள மொழிபேசுபவர்கள். ஒரு தமிழர் கூட இதில் நியமிக்கப்படவில்லை. இதை அமைச்சர் ராஜிதவும் எடுத்துக் கூறியுள்ளார். ஆனால் நீதிக்குப் பொறுப்பான அமைச்சரான விஜயதாச ராஜபக்ச நீதித்துறை நம்பிக்கைக்கு உரியதாகவே உள்ளதெனக் கூறியுள்ளார். இவர் சமீப காலமாகவே குதர்க்கமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சி அரசு நீதித்துறையின் உயர்ந்த தன்மையை உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையின் நீதித்துறை மீது நம்பிக்கை கொள்வார்கள்.

இல்லையென்றால் மாற்று வழிமுறைகளைத்தான் அவர்கள் நாடவேண்டிய நிலை உருவாகும்.

ஏற்கனவே இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களையும், போர்க் குற்றங்களையும் விசாரிப்பதற்கு பன்னாட்டு நீதிபதிகளின் உதவி பெறப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளதை இங்கு சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

கதிரவன்

# தூக்கி வீசப்படவேண்டிய கதிரையும் களையப்பட வேண்டிய ஆடையும்

எமது உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு எமது உடல் அழகைப் பேணுவதற்கும் தொப்பை போன்ற உடல் பிரச்சினையைத்தவிர்க்கும் பொருட்டும் எமது வாழ்வோடு இணைந்த இலகுவான அறியப்படாத இரு வழிகள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன:

1. பொருத்தமான கதிரையைத் தெரிவுசெய்தல்
2. பொருத்தமான ஆடையைத் தெரிவு செய்தல்

**பொருத்தமான கதிரையைத் தெரிவுசெய்தல்.**

ஒரு கதிரையில் அதிகநேரம் தொடர்ந்து இருக்கும்போது இதய நோய் மற்றும் குருதிச் சுற்றோட்டத்தொகுதியுடன் தொடர்புடைய பலகோளாறுகள் ஏற்படும் என்றும்-இந்தப் பாதிப்பில் இருந்து தப்பித்துக்கொள்ளக் கால்களை ஆட்டுதல் வேண்டும் என்ற செய்தியையும் அறியமுடிந்தது. எனினும் (கால்களை ஆட்டுதல்) சிலரே சிலநேரங்களில் இந்தச் செயற்பாட்டில் ஈடுபடுபவர். அத்துடன் கால்களை ஆட்டியவண்ணம் கதிரையில் இருக்க வேண்டும் என்பது கடினமான விடயமாகும். இதனால் கதிரையில் இருக்கும்போது ஏற்படும் கோளாறுகளில் இருந்து தப்பித்துக் கொள்ள ஏதேனும் வழி உள்ளதா எனச் சிந்தித்த போது, கால்களை ஆட்டுவதைவிட எமக்குப் பொருத்தமான கதிரையைத் தெரிவு செய்தல் சிறந்தது அல்லது கதிரையின் அமைப்பிலும் உயரம் மற்றும் வடிவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் மேற்குறித்த பிரச்சினை தொடக்கம் தொப்பை போன்ற பிரச்சினைகளுக்கும் தீர்வாய் அமையும் என்பது இனங்காணப்பட்டுள்ளது.



இந்தக்கதிரையின் உயரம் எமது முழங்கால் சில்லின் மேற்பகுதி வரையான உயரத்தை உடையதாக இருத்தல் வேண்டும். முதுகுப் பக்கக் கதிரையின் பகுதி நேராக இருத்தல் வேண்டும்.

மேலே காட்டப்பட்டுள்ள கதிரையின் வடிவத்தை ஒத்த கதிரைகளைப் பயன்படுத்துவதன்மூலம் குருதிச் சுற்றோட்டத்தொகுதி சம்பந்தமான நோய்கள் மற்றும் சோம்பல் தொப்பை போன்ற விளைவுகளில் இருந்து எமது உடலை விடுவிக்க முடியும் என இனங்காண முடிகின்றது. இங்கு கூறப்பட்டுள்ளதைப்போல் எமக்குப் பொருத்தமான அளவுகள் உடைய கதிரையைத் தெரிவு செய்தல் வேண்டும். அவ்வாறு இல்லாது உயரம் கூடினாலோ குறைந்தாலோ-குறிப்பாக பெரும்பாலான கதிரைகள் அளவில் (உயரம்) சிறிதாகவே காணப்படுகின்றன. (சோபா) இவ்வாறான கதிரையில் உட்காரும்போது எமது கால் மற்றைய காலின் மீது ஏறிக் கொள்ளும். அதாவது காலுக்கு மேல் கால்போட்டுக் கதிரையில் அமர்ந்திருப்போம். எவ்வாறெனினும் இவ்வாறான கதிரைப் பாவனையை நீக்க வேண்டும்.

**பொருத்தமான ஆடையைத் தெரிவுசெய்தல்**

ஆண்கள் மற்றும் பெண்களின் உடலில் தொப்பை போன்ற உடலின் அழகைக் கெடுக்கும் பகுதியை உடலுடன் (இறுக்கமாக) அமர்த்திய வண்ணம் இருப்பதற்கான ஆடைகள் விற்பனைக்கு வந்துள்ளதாக அறியப்பட்டது.

அதேபோன்ற ஆடையினால் உடலின் தொப்பைபோன்ற விளைவுகளில் இருந்து விடுபடமுடியும். இந்த உடைகளை அணிவதால் உடலில் ஏற்படும் வெப்ப மாறுதல்களால் வயிற்றுப் பகுதியில் கலோரி எரிக்கப்பட்டு வியர்வையாக வெளியேறுகின்றது.


இதன்மூலம் இந்தப் பயன்களைப் பெறமுடியும். மேற்கூறப்பட்ட செயலைச் செய்யமுடியாத ஆடைகளைத் தவிர்த்தல் வேண்டும். இதற்கு நாம் எமக்குப் பொருத்தமான ஆடையைத்தெரிவு செய்தல் வேண்டும். அவ்வாறான ஆடையின் அமைப்பு காட்டப்பட்டுள்ளது. (உள்ளாடைகள்)


உருவில் வயிற்றுத் தொப்பையை மறைப்பதற்கான இறுக்கமான ஆடைபின் தொப்பையை நீக்கும் என்று அறியப்பட்டது

உள்ளாடை (வெள்ளை) மற்றும் என்றவாறு ஆடை அணிய வேண்டும்.

மேலே கூறப்பட்ட இரண்டு மாற்றத்தையும் செயற்படுத்துவதன் மூலம் எமது உடல் நலத்தைப் பேணுவதுடன் தொப்பையைத் தவிர்த்து உடலை கட்டழகுடன் பாதுகாக்க முடியும்.

இவ்வாறான விடயங்களைப் பின்பற்றும் போது ஆரம்பத்தில் சற்றுக் கடினமாகவே தென்படுமெனினும் தொடர்ந்து பின்பற்றின் இவ்வுணர்வுகள் மறைந்துவிடும் (பழகிப்போய் விடும்). பின்னர் உடலுக்கு தீமை ஏற்படுத்தும்.மேலே கூறப்பட்ட யோசனைக்கு முரணான விடயங்களைப் பின்பற்றும்போது சிறுவித்தியாசம் (கடினத்தன்மை) என்பவற்றை உணரமுடியும். இந்த உணர்வே வரவேற்கத்தக்கதாகும். எனினும் உடற்பயிற்சி செய்து உடலை கட்டழகுடன் பேண முயற்சிப்போருக்கு மேற்குறித்த யோசனைகளும் பலமடங்கு இலகுவானதாகும் என்பதைப் புரிந்துகொள்ளமுடியும். குறிப்பாக கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த யோசனையும் பயனுள்ளதாக அமையும்.





“ ஆண்கள் மற்றும் பெண்களின் உடலில் தொப்பை போன்ற உடலின் அழகைக் கெடுக்கும் பகுதியை உடலுடன் (இறுக்கமாக) அமர்த்திய வண்ணம் இருப்பதற்கான ஆடைகள் விற்பனைக்கு வந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது. அதேபோன்ற ஆடையினால் உடலின் தொப்பை போன்ற விளைவுகளில் இருந்து விடுபட முடியும். இந்த உடைகளை அணிவதால் உடலில் ஏற்படும் வெப்ப மாறுதல்களால் வயிற்றுப் பகுதியில் கலோரி எரிக்கப்பட்டு வியர்வையாக வெளியேறுகின்றது. இதன்மூலம் இந்தப் பயன்களைப் பெறமுடியும் மேற்கூறப்பட்ட செயலைச் செய்யமுடியாத ஆடைகளைத் தவிர்த்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 24 வருடங்களுக்கு பின் மீண்டும் ரஜினியின் மன்னன்

ரஜினி நடித்து வெற்றிபெற்ற மன்னன் படம் 24 வருடங்களுக்கு பின் மீளுருவாக்கம் (ரீமேக்) செய்யப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகின.

ரஜினி நடிப்பில் 1992 ஆம் ஆண்டு வெளிவந்து வெற்றிபெற்ற படம் மன்னன். இந்தப் படத்தை பி.வாசு இயக்கியிருந்தார். குஷ்பு, விஜய சாந்தி, பண்டரிபாய், மனோரமா, கவுண்டமணி உள்ளிட்டோர் நடித்திருந்த இந்தப் படத்திற்கு இளையராஜா இசையமைத்திருந்தார். சிவாஜி புரொடக்‌ஷன்ஸ் நிறுவனமும் தயாரித்திருந்தது.

கிட்டத்தட்ட 24 வருடங்களுக்கு பிறகு இந்தப் படத்தை மீளுருவாக்கம் செய்ய பி.வாசு முடிவு செய்துள்ளார். அதற்கான கதாநாயகனையும் தேர்ந்தெடுத்துவிட்டார். பி.வாசு தற்போது இயக்கிவரும் சிவலிங்கா படத்தின் கதாநாயகனான ராகவா லாரன்ஸையே மன்னன் ரீமேக்கிலும் நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளார்.

ஜனவரி முதல் வாரத்தில் சிவலிங்கா படத்தின் இசை மற்றும் முன்னோட்டத்தையும், ஜனவரி 26 ஆம் திகதி படத்தையும் வெளியிட முடிவு செய்துள்ள பி.வாசு, அதன்பிறகு மன்னன் மீளுருவாக்கத்துக்கான பணிகளை தொடங்குவார் என்று கூறப்படுகிறது.

மன்னன் படத்தில் ரஜினியுடன் நடித்த கவுண்டமணி வேடத்திற்கு வடிவேலுவை நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

குஷ்பு, விஜயசாந்தி உள்ளிட்டோர் வேடங்களில் நடிப்பவர்களின் நடிகைகள் தேர்வும் நடைபெற்று வருகிறது. விரைவில், இது குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார்கள் என்று சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல் டாக்டரை பார்க்க போனேன், அங்க பெண் டாக்டர் இருந்தாங்க திரும்பி வந்துட்டேன்.... ஏன்னா...



நாம எந்த பொண்ணுகிட்டயும் பல்லை காட்டி நிக்கமாட்டம்

பூமியில இருக்குற பெற்றோல் எல்லாத்தையும் எடுத்து கார், பஸ், ரயில், விமானம், கப்பல் என்று அடிச்சுகிட்டே இருக்கீங்களே...




ஒரு நாள் பூமியில பெற்றோல் இல்லாம போய்டும்... அப்புறம் எப்பிடி பூமி சுத்தும்....? உண்மையை சொன்னா நம்மள பைத்தியம் என்று சொல்லுவாங்க

அப்பா... அப்பா... அம்மா கோவிச்சிகிட்டு போறாங்க!



போனா போகட்டும்... தமிழ் நாட்டுக்கு ஒரு சின்னம்மா கிடைக்கும் போது உனக்கு ஒரு சின்னம்மா கிடைக்காதா மகனே

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 5 | 6 | | | | 3 |
| | 7 | | 1 | | | | | 9 |
| 5 | | | | 3 | | 1 | 6 | |
| | | 9 | 7 | | | | 1 | |
| | 4 | | | | | | 9 | |
| | 5 | | | | 3 | 7 | | |
| | 3 | 7 | | 1 | | | | 5 |
| 2 | | | | | 5 | | 3 | |
| 1 | | | | 2 | 4 | | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 7 | 1 | 5 | 8 | 2 | 6 | 9 |
| 5 | 6 | 1 | 2 | 9 | 3 | 7 | 8 | 4 |
| 9 | 2 | 8 | 4 | 7 | 6 | 5 | 3 | 1 |
| 6 | 9 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 8 |
| 4 | 1 | 2 | 8 | 3 | 9 | 6 | 7 | 5 |
| 8 | 7 | 5 | 6 | 1 | 2 | 4 | 9 | 3 |
| 7 | 3 | 9 | 5 | 6 | 4 | 8 | 1 | 2 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 1 | 3 | 4 | 7 |
| 1 | 8 | 4 | 3 | 2 | 7 | 9 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் வீட்டுச் செலவை சமாளிப்பர்.

**இடபம்:** சமயோசிதமாக செயற்பட்டு பிரச்சினையைத் தவிர்ப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் புதிய வழியில் வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கடகம்:** உறவினரின் அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பெண்கள் குடும்பத்தினரின் மத்தியில் நற்பெயர் காண்பர்.

**சிங்கம்:** அவமதித்தவரும் அன்பு பாராட்டும் சூழல் உருவாகும். தொழில் வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்க யோகம் உண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பம் உருவாகி மறையும். தொழில் வியாபாரத்தில் பணிச் சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். வீட்டுச் செலவுக்காக சேமிப்பு கரையும்.

**துலாம்:** செயலில் நேர்மை நிறைந்திருக்கும். நண்பர் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். சேமிக்கும் வகையில் தாராள பணவரவு உண்டு.

**விருச்சிகம்:** நம்பிக்கை இழந்த செயலில் வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். வெளியூர் செல்ல நேரிடலாம்.

**தனுசு:** மறைமுக எதிரியை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

**மகரம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சி தேவை. லாபம் சுமார். அரசியல் வாதிகளுக்கு எதிர் பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். பெண்கள் பிள்ளைகளால் சிரமத்திற்கு ஆளாகலாம்.

**கும்பம்:** நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற அதிகம் பணிபுரிவீர்கள். லாபம் திருப்தியளிக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**மீனம்:** தொடங்குகிற பணி தடையின்றி எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரம் வியப்பூட்டும் வகையில் வளர்ச்சி பெறும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.


தமிழினி

முடிந்தால் செய்!
எழ முடியாதவனுக்கு கை கொடு.
எழுந்து நின்று தடுமாறுபவனுக்கு தோள் கொடு. யார் கால்களையும் பிடிக்காதே, வாராதே.



ஆசிரியர்: சர்க்கரையைக் கொண்டு ஒரு வாக்கியம் அமை பார்க்கலாம்.
மாணவன்: நான் தேநீர் குடித்தேன்
ஆசிரியர்: இதில் சர்க்கரை எங்கே இருக்கு?
மாணவன்: தேநீரிலே சார்!

# தொப்பையைக் குறைக்க



தேன் - 1/2 கப்
தேங்காய் எண்ணெய் -3/4 கப்
பட்டை தூள் - 1 கரண்டி
கொக்கோ பவுடர் - 1 கரண்டி

தயாரிக்கும் முறை:
மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து பொருள்களையும் மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்து, பின் அதனை காற்றுப்புகாத கண்ணாடி சாடியில் போட்டு, தேவையான பொழுது பயன்படுத்த வேண்டும்.

பயன்படுத்தும் முறை:
தினமும் கோப்பி குடிக்கும் போது, தயாரித்து வைத்துள்ளதை ஒரு கரண்டி எடுத்து கோப்பியுடன் சேர்த்து நன்கு கலந்து பின் குடிக்க வேண்டும்.

# வெள்ளை உணவுகளை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்ன?

அன்றாடம் உணவுகளில் இயற்கை யாகவே கிடைக்கக்கூடிய வெள்ளை உணவுகள் சத்துக்கள் நிறைந்தவை. அவற்றை தாராளமாகச் சாப்பிடலாம். ஆனால், செயற்கை முறையில் வெள்ளை யாக்கப்பட்ட சர்க்கரை, உப்பு போன்ற உணவுகள்தான் உடலுக்குக் கெடுதியை ஏற்படுத்தக் கூடியவை. வெள்ளை உணவுகள் உடலுக்குக் கெடுதியானவை என்ற பரவலான கருத்தை நம்பி, சத்தானவற்றையும் சாப் பிடாமல் இருக்கக் கூடாது.




**பூ கோவா**
விற்றமின் பி, பி6, ஃபோலிக் அமிலம், பொட்டாசியம், நார்ச்சத்து நிறைந்துள் ளன. குறைந்த கலோரி கள் இருப்பதால், உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்களுக்கு ஏற்றது. இதில் உள்ள கொலைன் மற்றும் விற்ற மின் பி , மூளைக்கு உதவு கின்றன.
விற்றமின் சி, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. பூ கோவாவை, மிதமா கவே வேக வைக்க வேண்டும். தற்போது, பூச்சிகொல்லிகள் தெளிக்கப்படுவதால், மஞ்சள் நீரில் போட்டு, சில நிமிடங்கள் ஊறிய பிறகு, சமைப்பது நல்லது.

**முள்ளங்கி**
விற்றமின் சி, இரும்புச்சத்து, பொட்டாசி யம், ஃபோலிக் அமிலம், அன்டி ஒக்சி டன்ட், சல்ஃபோரோபேன் போன்ற சத்துக் கள் உள்ளன. மார்பகம், பெருங்குடல், சினைப்பை புற்றுநோய்கள் வராமல் தடுக்கிறது. குருதி அழுத்தப் பிரச்சினை யைச் சீராக்கும்.
மஞ்சள் காமாலை வந்தவர்கள் இதைச் சாப்பிட்டால், கல்லீரலில் உள்ள நச்சுக் களை நீக்கும். இதில் உள்ள நீர்ச்சத்து, மலச் சிக்கலைப் போக்கும். சருமத்துக்கும் நன் மைகளைச் செய்யும். தைரொய்டு நோயா ளிகள், முள்ளங்கியை அளவோடு சாப் பிட வேண்டும். வேகவைக்காமல், சாப் பிடக் கூடாது. இதில் உள்ள சாலிசிலேட் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடும்.

**பூண்டு**
குருதி அழுத்தம், உடல் பருமன் உடையோர், புற்று நோயா ளிகள் அவசியம் சாப் பிட வேண்டிய உணவு. கிருமிகள், வைரஸ், நுண்ணுயிரிகள் போன் றவற்றால் ஏற்படும் பாதிப்பிலிருந்து காக் கும். சுவாசப் பிரச்சி னைகளைத் தீர்க்க உதவும். தாய்ப்பால் சுரக்க உதவும். நீரிழிவு நோயாளிகள் தினமும் உண்ணலாம்.
இனிப்பின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக் கும், கணையத்துக்கு நன்மைகளைச் செய்யும். பூண்டு சாப் பிட்டால் துர்நாற்றம் வீசும் என்று, பூண்டை ஒதுக்கக் கூடாது. பெருங்குடல், நுரை யீரல், மார்பகம், மலக்குடல் புற்று நோய்கள் வராமல் தடுக்கும். கொழுப் பைக் கரைத்து, இதய நோய்கள் வராமல் காக்கும்.

**காளான்**
அசைவத்தில் உள்ள சுவையும், சத்துக் களும் காளானில் கிடைப்பதால், அசைவ உணவு சாப்பிடாதவர்கள் எடுத்துக் கொள்ளலாம். தாதுக்கள், அன்டிஒக்ஸி டன்ட், அமினோ அமிலங்கள், புரதம் போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. ஹார்மோன்கள் சுரப்பதற்கும், நரம்பு மண்டலத்துக்கும், பாண்டோதினிக் என்ற அமிலம் உதவுகிறது.
இதில் உள்ள செலினியம் உடலில் உள்ள செல்களுக் குக் கவசம். விற்ற மின் டி இருப்ப தால், எலும்பு கள் வலுப்பெ றும். கொழுப்பு இல்லை. கலோரிகளும் இதில் மிகக் குறைவுதான். இரண்டு நாள்களுக்குள் பயன்படுத்தி விடுவது நல்லது.





**தேங்காய்**
உடனடி ஆற்றலைக் கொடுக்கும் மிகச் சிறந்த உணவு. விற்றமின்கள், தாதுக் கள், கலோரிகள், நார்ச்சத்துக்கள், அமினோஅமிலங்கள் இதில் நிறைந் துள்ளன. வளர்சிதை மாற்றத்தை மேம் படுத்தும். தேங்காயில் நல்ல கொழுப்பு அதிகம். ஆதலால் கொழுப்பு என்று தேங்காயைத் தவிர்க்க வேண்டாம். பக்றீ ரியா, பூஞ்சை, வைரஸ் தொற்றுகளிலி ருந்து சருமத்தைக் காக்கும். தேங்காய், இளநீரில் உள்ள தாதுக்கள், உடலுக்குக் குளிர்ச்சியை அளித்து புத்துணர்வைத் தருகின்றன.

**முட்டைகோவா**
விற்றமின் சி, நார்ச்சத்து உள்ளன. அதிக அளவில் பீட்டாகரோட்டீன் உள்ள தால், கண்களுக்கு நல்லது. எடையைக் குறைக்க நினைப்பவர்கள், சூப் அல்லது சாலட்டாக சாப்பிடலாம். தாதுஉப்புக்கள் நிறைவாக உள்ளதால், எலும்பு மெலிதல் பிரச்சினையைப் போக்கும். இதில் உள்ள பொட்டாசியம் சத்து, குருதி அழுத்த நோயா ளிகளுக்கு நன்மையைச் செய்யும்.
உடலில் கட்டிகள், புற்றுநோய் செல்கள் வராமல் தடுக்கும். பெருங்குடல், மார் பகம், கர்ப்பப்பை, சினைப்பை புற்று நோய்கள் வராமல் காக்கும். வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்தும். வாயு அதி கரிக்க வாய்ப்பு உள்ளதால், அதிகம் சாப்பிட வேண்டாம்.








# பல வர்ண கைப்பைகள்

பலவர்ண கைப்பைகள் அறிமுக மாகியுள்ளன. புதுவித துணியி னால் ஆன இவை ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படு கின்றன. இவை துணியால் உரு வானவை என்பதால் தோய்த்து பாவிக்க முடியும்.

# கீரை உப்பு மா



## தேவையான பொருள்கள்:

கீரை - 1 கட்டு
இட்லி அரிசி - 2 கப்
துவரம் பருப்பு - கப்
தேங்காய் - ஒரு கைப்பிடி
மிளகாய் வற்றல் - 4
சீரகம் - 1 கரண்டி
உப்பு - சுவைக்கேற்ப
கடுகு, உளுந்து - 1 கரண்டி
மோர் மிளகாய் - 4
கறிவேப்பிலை - 1 ஈர்க்கு
எண்ணெய் - தேவையான அளவு

## செய்முறை:

இட்லி அரிசி, துவரம்பருப்பு இரண்டையும் 2 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். கீரையை (சிறு கீரை, அரை கீரை, தண்டு கீரை, பாலக் கீரை, பொன்னாங் கண்ணிக் கீரை இவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தலாம்.) நன்றாக சுத்தம் செய்த பின் பொடியாக நறுக்கிக்கொள்ள வேண்டும்.
இட்லி அரிசி, துவரம்பருப்பு, தேங்காய், மிளகாய் வற்றல், சீரகம் ஆகியவற்றை சேர்த்து கொரகொர வென்று ரவை பதத்தில் அரைத்துக்கொள்ள வேண் டும். அரைத்த மாவில் பொடியாக நறுக்கிய கீரை, உப்பு சேர்த்து கரைத்து, இட்லி தட்டில் ஊற்றி வேகவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.
இட்லி ஆறியவுடன் அதை கையினால் உதிர்த் துக்கொள்ள வேண்டும். சட்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு, உளுந்து, கறிவேப்பிலை தாளித்து, அதில் மோர் மிளகாய் சேர்த்து, பிறகு உதிர்த்த கீரை இட்லியை போட்டு உதிரியாக வரும் வரை மிதமான தீயில் வைத்து கிளற வேண்டும். கீரை உப்புமா தயார்.
இது மிகவும் ஆரோக்கியமான, சத்தான சிற்றுண்டி யாகும். இந்த கீரை உப்புமாவை சாம்பார் மற்றும் தேங்காய் சம்பலுடன் சாப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரங்களுக்கு உணர்வு உண்டா?



உணர்வுகளின் அடிப்படைத் தன்மைகளைக் கொண்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உயிரினங்களை ஆறு வகைகளாக வகைப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர். குறிப்பாக ஓரறிவினை அவர் பின்வரும் அடிகள் மூலம் தெளிவுகொள்ள வைக்கிறார்.

*'ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே'*
(தொல். பொருள். மரபியல், 27)

என்றும் அதற்கு உதாரணமாக

*"புல்லும் மரனு மோரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"*
(தொல். பொருள். மரபியல், 28)

என்றும் குறிப்பிடுகிறார்.

அதாவது புல், மரங்களை ஓரறிவு உயிர்களாக வகைப்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது.

அந்தவகையிலே அறிவியலாளர்கள் புலன்களின் அடிப்படையில் உயிரினங்களை வகைப்படுத்தியுள்ளதை நாம் நோக்க வேண்டியிருக்கிறது. அறிவியல் கூறும் ஐம்புலன்கள் மெய், வாய், மூக்கு, கண், காது என்பனவே. இவற்றின் இயங்குநிலைச் செயற்பாட்டின் அடிப்படையில் தொடுகை உணர்வு கொண்ட தாவரங்களும் மரங்களும் ஓரறிவு உள்ள உயிரிகளாக வெகு காலங்கள் முன்பே வகைப்படுத்தப்பட்டுள்ளமை ஆச்சரியத்தையும் வியப்பினையும் தருகின்ற தகவல்களாக விளங்குகின்றன.

தாவரங்கள் இசை கேட்கும் ஆற்றலை கொண்டுள்ளன.இதனை ஏற்றுக்கொள்வோர் உள்ளனர். ஒரு சில அறிவியல் ஆய்வுகளும் இதனை வலியுறுத்தியுள்ள போதும் இக்கருத்தினை அறிவியல் உலகம் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தபோதிலும் அறிவியல் உலகம் என்பது தாவரங்களுக்கு தொடுகை உணர்வு உண்டு என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கான உதாரணமாக தொட்டாற் சிணுங்கி (மிமோசா புடிக்கா ரச் மீ நொட் பிளாண்ட்) செடியினையும் பூச்சிகளை உண்ணும் தாவரத்தினையும் (டையோனியா மிசிப்பியுலா வீனஸ் பிளை ராப்) கூறலாம். இவை தவிர கடுகு இனக் குழுமத்தைச் சார்ந்த தாவரமான குதிரைப்புல்லில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஆய்வின் போது தாவரங்கள்



மழை, காற்று போன்ற இயற்கையின் அசைவுச் செயற்பாடுகள் ஏற்படுத்தும் அதிர்வுகளை உணர்ந்து அதற்கேற்ப செயற்படுகின்றது என்பதான தகவலும் கண்டறியப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ சங்கரராஜக் குருக்கள் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி சுகுமாரி சங்கரராஜக்குருக்கள்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அமரர் த. தர்மலிங்கம் குடும்பம்**
**முன்னாள் தலைவர் அரியாலை- ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம், அரியாலை**

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பர் **விமலராஜனின்** தந்தையாரான

**முத்துத்தம்பி நடராசா**

காலஞ்சென்றதையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நண்பர்கள்: விஷ்ணுதாசன், ஜெயகாந்தன், நாகேந்திரன், ஆனந்தராசா.**

**தெல்லிப்பழை**

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியர் கழக செயலாளரும் புவியியல் பாட ஆசிரியருமாகிய ச.இராஜராஜேஸ்வர சர்மா அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி சுகுமாரி சங்கரராஜசர்மா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**ஆசிரியர் கழகம்**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி**
**கோண்டாவில்**

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்மகிழ்வு 27 . 05 . 1943
விண் தழுவல் 23 . 12 . 2011

**திருமதி பரமேஸ்வரி நல்லதம்பி**
(நயினாதீவு)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

No - 24, நாமகள்லேன்,
கொக்குவில் கிழக்கு.
குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**சந்தனம் செல்வராசா**
(ஓய்வுபெற்ற இ.போ. ச. சாரதி கோண்டாவில்.)

தோற்றம்
15.01.1943

மறைவு
28.11.2016

கடந்த 28.11.2016 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு எமது துயரில் நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் பெற்றோலிய லிமிட்டட் அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் கிரியைகள் இன்று (27.12.2016) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 28.12.2016 புதன்கிழமை மு.ப 10 மணியளவிலும் நடைபெறும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இந்த நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தாங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட [illegible])

ஐயனார்கோவிலடி, [illegible]
நாவற்குழி மேற்கு. 077 5927326, 077 389 1446

## கண்ணீர் அஞ்சலி



கொழும்புத்துறை ஸ்ரீ வதிரி பீட விநாயகர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ தி.சங்கரராஜகுருக்கள் அவர்களின் அன்பு மனைவியார்

**சுகுமாரி அம்மாளின்**

மறைவையிட்டு ஆலய நிர்வாகமும், ஊர்மக்களும் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**ஆலய நிர்வாகமும்**
**ஊர் மக்களும்**
**கொழும்புத்துறை மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம் 20 . 09 . 1930



மரணம் 20 . 12 . 2014

**அமரர் சின்னக்குட்டி மகாலிங்கம்**

திதி: மார்கழி மாத அபரபக்க சதுர்த்தசி (27.12.2016)

ஆண்டுகள் இரண்டு கழிந்த போதும்
என்றும் உங்கள் நினைவுடன்

பழைய வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் விமலேந்திரன் கவிதன்**

கடந்த 28.11.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த விமலேந்திரன் கவிதன் அவர்களின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், உதவிகள் செய்தோருக்கும், இளைஞர் முன்னேற்றக் கழகத்தினருக்கும், பாரதி கல்வி நிலைய சமூகத்துக்கும், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், முகாமைத்துவ 15ஆம், 16ஆம் அணி நண்பர்களுக்கும் N.D.B வங்கிமுகாமையாளர்களுக்கும், அனைத்து ஊழியர்களுக்கும், N.T.B யாழ். வங்கிக்கிளை முகாமையாளர் மற்றும் ஊழியர்களுக்கும். S.L.T யாழ். பிராந்திய அலுவலர்களுக்கும், BOC வங்கி அலுவலர்களுக்கும், இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபன அலுவலர்களுக்கும், யாழ்.இந்துக் கல்லூரி 2009 A/L வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கும், சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் சார்ந்த அங்கத்தவர்களுக்கும், ஊர்மக்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைக் கூறுவதுடன் நாளை (28.12.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கணேசவாசம்,
சித்தன்கேணி.
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### அப்பாக்குட்டி கனகரெட்ணம்



அப்பாக்குட்டி கனகரெட்ணம் நேற்று (26.12.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற அப்பாக்குட்டி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகரெட்ணம், இராசம்மா, அன்னலட்சுமி மற்றும் பத்மாவதி ஆகியோரின் சகோதரனும் காலஞ் சென்றவர்களான சுசிலாதேவி, ரவீந்திரன் மற்றும் ஸ்ரீதரன், கருணாகரன், நந்தினிதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2016) செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**342/9, கச்சேரி நல்லூர் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர். 021 222 5431**

### குமாரசாமி இரத்தினம்

**(ஓய்வுநிலை கிளை முகாமையாளர் ,**
**சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவுச்சங்கம்)**



**உதிப்பு** 10.11.1947 **உதிர்வு** 26.12.2016

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி இரத்தினம் நேற்று (26.12.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அரியேஸ்வரியின் அன்புக் கணவரும் சகீலன்(சுவிஸ்), கோகிலன் (அபிஷா ரெக்ஸ் - சாவகச்சேரி), ராஜினி(டென்மார்க்), ஜீவாயினி (பிரான்ஸ்), பகீரதி(கனடா), சுகல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேந்திரம்(இ:போ.ச. புளியம் பொக்கனை), சிவானந்தம்(பிரதிக் கல்விப் பணிப்பாளர்- முல்லைத்தீவு), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் ஜெகதீஸ்வரி, மகேந்திரம்(கால்நடை வைத்திய நிலையம்- கைதடி), ஆகியோரின் அன்புச்சகோதரனும் யாழினி (சுவிஸ்), சுசிகலா, புவனேஸ்வரன் (டென்மார்க்), சிவநாதன் (பிரான்ஸ்), கிருபானந்தன் (கனடா), சதீஸ் (நகரசபை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சயானா, சாதனா, அபிஷா, அனோஸ்கா, அக்ஷயன், நிலக்ஷன், நிலக்ஷி, வாணன், நிலா, ரம்மியா, ரதுஷன், ஆகாஷ், சிபி, கனி, அஸ்மிதா, தருண் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**
**077 912 4249**

**தகவல்: குடும்பத்தினர்.**
**இ. கோகிலன் - மகன்**
**(அபிஷா ரெக்ஸ், சாவகச்சேரி**
**செயலாளர் லயன்ஸ் கழகம், சாவகச்சேரி)**

**ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக**

### திருமதி தெய்வானைப்பிள்ளை தர்மலிங்கம்

பிறப்பு 05.08.1939 **இறப்பு** 25.12.2016



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை தர்மலிங்கம் 25.12.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சின்னையா தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்ற சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நடராஜா, செல்லத்துரை மற்றும் தங்கரத்தினம், பாலசிங்கம், கதிரவேலு ஆகியோரின் சகோதரியும் சேவாசெல்வி, சிற்சபேசன் (நோர்வே), ரவீந்திரன் (நோர்வே), விஜயகுமாரி (சுவிஸ்), ஸ்ரீரதி (அச்சுவேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியபாமா, சாந்தி, யோகதாஸ், ஆனந்தசோதி ஆகி யோரின் அன்பு மாமியாரும் சாரங்கன், சாருஜன், ரகுஜன், அட்சயன், வினிதா, ஆர்த்தி, அபிரா, மதுஷாலினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மத்தி,**
**நீர்வேலி.**

(ஜே/7197)(17.19.20)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் மேற்கு, K.K.S வீதி,
முதலி கோயிலுக்கு அருகில்
நிலப்பரப்பு 1¾ விஸ்தீரணம் கொண்ட
காணி விற்பனைக்கு உண்டு.

**0777 111 400**

**உடனடிவேலைவாய்ப்பு**

( Management Trainees ) 2017
Study & Work in North & East Provincial


வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கும் நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் பயிற்சி பெற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி இலவசமாக வழங்கப்படும்
பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும் (Fixed In Coming Packge 12,000/=)
பயிற்சியின் பின்னர் அடிப்படை சம்பளம் EPF/ETF அடங்கலாக 60 000/= இற்கு மேல் தொழில் நிரந்தரமாக்கப்படும்
பயிற்சிக்காலம் 03 - 06 மாதங்கள் (January - June)

**Granton International (Pvt) LTD**
**Contact - 077 999 4807, 076 313 5120**

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் ஐயாத்துரை



சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் யாழ்சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் ஐயாத்துரை 25.12.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, கிருஸ்ணபிள்ளை, பொன்மணி, குணசேகரம் மற்றும் மாணிக்கம் (கணேஸ்) காசிப்பிள்ளை, சிவமணி, தவமணி, அருளம்பலம், குணபால சிங்கம் ஆகியோரின் அன்புத்தாயாரும் நடேசு, ஏழுமலைநாதன், பாலசுப்பிரமணியம், அன்னலட்சுமி, மகேஸ்வரி, கமலாதேவி, ஜீவா, கமலாதேவி, அமிர்தா ,கமலாதேவி ஆகியோரின் அன்புமாமியாரும் காலஞ்சென்றவர்களான கும்ரேசு, சவுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தவக்குமார், சுரேஸ்குமார், சுகிர்தா, வசந்தன், இராசசுந்தரம், துவாரகன், யுகேந்தன், கலைவதனா, அனோயா, அஜீனா, சசிகரன், புவிராஜ், பிரவுராஜ், தேனுஜா, சுபாங்கி, உதயவர்ணன், உதயஜீவன், கிருசாயினி, தவானா, யதுர்சா, அம்சிகா, காந்தமூர்த்தி, செல்வசந்திரன், ஜெயராசா, பாஸ்கரன், றமணன், நிர்மலன், திவாகரன், தனகேஸ்வரி, கலாதேவி, லோகேஸ்வரி, சர்மிலன், சரன்யா, சபேசன், ஸ்ரீகரன், ஸ்ரீசங்கர், ஸ்ரீசேந்தன், சிவரூபினி, சுதர்சினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 28.12.2016 புதன்கிழமை அவரது இல்லத்தில் ந.ப. 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பக்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .


இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள்,அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுப்பிட்டி மேற்கு,**
**நீர்வேலி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் மகேந்திரராஜா (கொக்குவில்)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் மகேந்திரராஜா 24.12.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினம் - இளையபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் யோகராணி (வசந்தி - லண்டன்), உதயகுமார் (வசந்தன் - கொக்குவில்), சிவகுமார் (சிவா - இத்தாலி), அன்பரசி (சுகந்தி - ஜேர்மனி), ராஜ்குமார் (ராசன் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரன் (லண்டன்), ஜானகி (கொக்குவில்), ராஜேஸ்வரி (இத்தாலி), கிருபாகரன் (ஜேர்மனி), அமுதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருஜா (லண்டன்), சோனியா (லண்டன்), சஞ்சீவன், சரண்யா, சர்மிளா, சர்மினி , காயத்திரி, அபர்ணா (இத்தாலி), அனுசா (இத்தாலி), தர்சிகா (இத்தாலி), ரஜீவன் (ஜேர்மனி), டனுசியன் (ஜேர்மனி), டனுசிகா (ஜேர்மனி), கிருபிகா (ஜேர்மனி), கீர்த்திகா (லண்டன்), வேனுஜன் (லண்டன்), ஆர்த்திகா (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் மகேஸ்வரி, சண்முகநாதன் (காந்தி), செல்வராசா, சுதாசிறி, சிறிசுதா காலஞ்சென்ற சிறிதரன், புஸ்பராணி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமுப்பிள்ளை வீதி**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்**
**021 205 2013**

(ஜே/7201)(17.19.20)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# கிறிஸ்மஸ் தகவல்கள்

### கிறிஸ்மஸ் கேக்

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு ஒரு மாதத்துக்கு முன்பு இங்கிலாந்திலுள்ள பெரும்பாலான வீடுகளில் கேக் செய்வார்கள். அப்போது குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் முன்னிலையிலும் கேக் செய்வதற்குரிய மாவைக் கொட்டி அவர்கள் அனைவரும் சேர்ந்து பிசைவர். தன் பங்காக அந்தக் குடும்பத்தின் தலைவி ரகசியமாக வெள்ளியிலான ஒரு நாணயத்தை மாவுடன் கலந்து விடுவார். இறுதியாக உருவாக்கப்பட்ட கேக் ஒரு மறை விடத்தில் வைக்கப்படும். கிறிஸ்மஸ் தினத் தன்று அந்தக் கேக்கை எடுத்து குடும்பத்திலுள்ள அனைவருக்கும் பரிமாறுவர். உண் ணும்போது யாருக்குக் கேக்கிலிருந்து வெள் ளிக் காசு கிடைக்கிறதோ அவர்கிறிஸ்மஸ்தினத்தின் அதிர்ஷ்டசாலியாக கருதப்பட்டு அனைத்துப்பரிசுகளும் அவருக்கே வழங்கப்படும்.

### பொக்ஸிங் தினம்

கிறிஸ்மஸுக்கு அடுத்த நாள் பொக்ஸிங் தினம் கொண்டாடப்படுகிறது. இதற்கும் குத்துச் சண்டைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட வழக்கம் இது. கிறிஸ்மஸ் தினத்தை ஒட்டி தேவாலயங்களில் ஒரு பெட்டி வைத்துவிடுவார்கள். பணம் படைத்தவர்கள் ஏழை எளிய மக்களுக்கு உதவும்வகையில் அந்தப் பெட்டிகளில் பணம் போட்டு வருவார்கள். வருடத்துக்கு ஒரு முறை கிறிஸ்துமஸுக்கு அடுத்த நாள் பெட்டியை திறந்து பணம் எண்ணப்படும். அதைக் கொண்டு ஏழைகளுக்கு பொருளாதார உதவிகள் செய்யப்படும்.

### கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை

15ஆம் நூற்றாண்டில் மரத்தில் செதுக்குவேலை செய்யும் வல்லுனர்கள் இந்த நாள் கிறிஸ்மஸ் அட்டைகளைப்போலவே வாசகங்களும் சித்திரங்களும் பொறித்து வந்தார்கள். இதன் பின் 18, 19ஆம் நூற்றாண்டில்தான் வாழ்த்துக்கடிதங்கள் வெளியாகின. 1843ஆம் ஆண்டில் முதன் முதலாக இங்கிலாந்தில் கிறிஸ்மஸ் அட்டை வெளியானது. தன் நண்பரான சேர் ஹென்றிகோல் என்பவருக்கு ஹார்ஸ்லி என்பவர் வாழ்த்து அட்டை தயாரித்துக் கொடுத்தார். தடித்த அட்டைக் காகிதத்தில் லித்தோ முறையில் அச்சிடப்பட்ட அட்டை அது. கிறிஸ்மஸ் இன்பம் நிறைந்த புத்தாண்டு என்று ஒரு குடும்ப விருந்துக் கூட்ட காட்சியின் சித்திரத்தை தாங்கி இருந்தது அந்த அட்டை.

### கிறிஸ்மஸ் தாத்தா

போலந்து நாட்டில் புனித நிக்கோலஸ் எனப்படும் கிறிஸ்மஸ் தாத்தா பிப் உடையில் குதிரை மீது அமர்ந்து வருவார். பரிசுகள் கொடுப்பார். பிரான்ஸ் நாட்டில் கிறிஸ்மஸ் தாத்தா பாபா நோயல் என்று அழைக்கப்படுகிறார். இவர் வீடுகளில் புகைபோக்கிவழியாக இனிப்புகளையும் பொம்மைகளையும் போட்டுவிட்டுச் செல்வார். கிரீஸ் நாட்டில் கிறிஸ்மஸ் தாத்தா புனித வாலஸ் என்ற பெயரில் அழைக்கப்படுகிறார். இவர் சிவப்பு உடை அணிந்து கிறிஸ்மஸ் அன்று குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்குவார்.

### புனித ஜோஸப் தேவாலயம்

கனடா நாட்டின் தலைநகரான ஒட்டாவாவில் மிகப் பிரம்மாண்டமான புனித ஜோஸப் தேவாலயம் உள்ளது. உலகப் புகழ் பெற்ற தேவாலயம் இது. வழிபடவும் பார்த்து மகிழவும் ஆண்டுதோறும் இருபது லட்சத்துக்கு மேல் மக்கள் வருகிறார்கள். இந்த தேவாலயத்தில் 56 மணிகள் உள்ளன. இந்த மணிகளின் நாதம் இனிமையானது. ரோமானிய பாணியில் இத் தேவாலயத்தை எழுப்பியவர் சகோதரர் ஆண்ரே என்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிதிறன் கைக்கடிகாரத்தை அறிமுகப்படுத்துகிறது கூகுள்



புத்தாண்டு வருவதை தொடர்ந்து ஒவ்வொரு நிறுவனமும் அதன் பிரேத்தியேக புதிய படைப்புகளை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் கூகுள் நிறுவனம் அன்ட்ரொய்ட் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ள கைக் கடிகாரத்தை அறிமுகப்படுத்தவுள்ளது. அன்ட்ரொய்ட் அதிதிறன் அலைபேசிகளைத் தொடர்ந்து அன்ட்ரொய்ட் இயங்கு தளத்தில் இயங்கக்கூடிய அதிதிறன் (ஸ்மார்ட்) கைக்கடி காரத்தை கூகுள் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த கைக்கடிகாரம் தொடு திரை வசதிகளுடன் வடிவமைக் கப்பட்டுள்ளது, 2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்த வகை கைக்கடிகாரங்கள் சந்தையில் விற்பனைக்கு வரும் என எதிர் பார்க்கப் படுகிறது. அதிதிறன் கைக்கடி காரம் அன்ட் ரொய்ட் 2.0 தளத்தில் உருவாக்கப்பட் டுள்ளதாக கூகுள் நிறுவன தயாரிப்பாளர் செப் ஜாங் தெரிவித்தார். இந்த கைக்கடிகாரத் தில் நேரம் பார்ப்பதுடன் கூகுள் தேடுப் பொறி தளத்தை இதில் பயன் படுத்த முடியும். மேலும் மற்றவர் களுக்கு மெசேஜ் செய்ய இயலும், மிகச் சிறிய தொடு திரை அமைந்துள்ள அதிதிறன் கைக் கடிகாரத்தில் குறிப்புகளை கூட சேமித்து வைக்க இயலும். கூகுளின் அன்ட் ரொய்ட் அதிதிறன் அலைபேசி மற் றும் பிக்ஸல் அதிதிறன் அலை பேசியைத் தொடர்ந்து அன்ட் ரொய்ட் கைக்கடி காரத்திற்கும் நல்ல வரவேற்பு இருக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.

(வ)


## BEACON STUDY CENTRE

வதிரி கரவெட்டி

A/L - 2019

கணித, உயிரியல்

தொழில்நுட்ப பிரிவுகள்

ஆரம்பம் - 30.12.2016

வெள்ளி காலை 7.30 மணி

## வேலையாள்கள் தேவை

* சாரதி (AD,Light Vehicle)
* பண வசூலிப்பாளர்
* உதவியாளர் என்போர் தேவை.

021 224 2570/ 021 720 1277

## SUPER BALL

சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 594

சீட்டிழுப்பு திகதி 26.12.2016 திங்கட்கிழமை

வெற்றி இலக்கங்கள்

01 35 55 70 F

அடுத்த சுப்பர் ஜக்பொட்

ரூ.45,396 820/=


## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினரும் சேமிப்பாளருமாகிய

திரு.இரத்தினம் கோகிலன்

(உரிமையாளர் - அபிஷா ரெக்ஸ், சாவகச்சேரி)

அவர்களின் பாசமிகு தந்தையார்


**குமாரசாமி இரத்தினம்**

அவர்கள் 26.12.2016 அன்று காலமானார். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம். (27275) (14,17,18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 . 03 . 1938



உதிர்வு 08 . 01 . 2016

அமரர் திரு. **சுப்பிரமணியம் கந்தசாமி**

(J.P.,UM. சட்டத்தரணியும், நொத்தாரிசும், பதில் நீதிவானும்)

திதி - அபரபக்க சதுர்த்தசி (27.12.2016)

ஊர் போற்ற உலகு போற்ற
உறவுகள் தலைவணங்க தானைத்
தலைவனாய், கலைமகனும், திருமகனும்
வழிநடத்த குறையாத வீரத்துடன்
எளிமையாய், வாழ்வுக்கு இலக்கணமாய்
வாழ்ந்து காட்டிய எம் தந்தையே
ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை
எம்மனம், உங்கள் இடம் வெற்றிடமாகவே
இருக்க, அதை நிரப்ப முடியாது தாய் மரமற்ற
விழுதுகளாய் தவிக்கின்றோம்.
எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் ஆத்மாவின்
ஆசீர்வாதம் எமை வழிநடத்தும் என்ற
அசைக்க முடியாத நம்பிக்கையில்
உங்கள் ஆத்மா பரமனின் பாதங்களில்
முக்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

35/10, 5ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம். 021 222 7079

சாவகச்சேரி. 021 227 0054

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த (23.12.2016) வெள்ளிக்கிழமை கொழும்பு தாமரைத்தடாக கலையரங்கில் நடைபெற்ற **கலாபூசணம்** அரச விருது வழங்கல் விழாவில் மூளாய் மண்ணைச் சேர்ந்த

**ஆசுகவி**

**செ. சிவசுப்பிரமணியம் ஐயா**

அவர்களுக்கு இந்த உயரிய விருது கிடைக்கப்பெற்றமையை இட்டு அவரை பாராட்டிவாழ்த்துவதோடு, இவ்விருதினை மட்டும் அல்லாது ஐயா அவர்கள் இன்னும் பல விருதுகளை பெற்று மூளாய் மண்ணிற்கு பெருமையினை பெற்றுத்தர வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள் :

இந்து இளைஞர் மன்றம் மூளாய்.


## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்



Professional IT Courses
- Dip.in Information Technology
- Dip.in Office Automation
- Dip.in PC Application
- Dip.in Microsoft Office
- Dip.in Web Designing
- Hardware , Mulitmedia

Diploma in English

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

SPOKEN ENGLISH

ஆங்கிலக் கல்வி

DMI COMPUTER EDUCATION

புதிய பிரிவுகள் நாளை ஆரம்பம்

பிரிவு 2 :- 28-12-2016. 9:00 am

பிரிவு 3 :- 02-01-2017. 9:00 am

IT & English Diploma

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

## DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |


## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

பதிவு இலக்கம்:- J/ 1557 பதிவுத் திகதி:- 12.03.1971

021 321 2380

**சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), சுன்னாகம்**

**31.07.2012 இல் உள்ளவாறான கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்**

சங்கத்தின் 2011 / 2012 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ள அக்காலத்துக்குரிய கணக்குப் புத்தகங்களுடன் கீழ் குறிப்பிட்ட நாள்களில் கிராமிய வங்கிக்கு சமுகமளித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் கணக்குகளை உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் மீதிகள் சங்கப் பேரேடுகளின்படி சரியானதென உறுதிப் படுத்தப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


| இல. | கிராமிய வங்கியின் பெயர் | பார்வையிடும் திகதி | பார்வையிடும் நேரம் |
|---|---|---|---|
| 01 | இணுவில் கிராமிய வங்கி | 09.01.2017 -திங்கள் | காலை 9 - பி.ப- 3.00 |
| 02 | ஏழாலை கிராமிய வங்கி | 09.01.2017- திங்கள் | காலை 9 - பி.ப. 3.00 |
| 03 | குப்பிளான் கிராமிய வங்கி | 09.01.2017 -திங்கள் | காலை 9 - பி.ப. 3.00 |
| 04 | சுன்னாகம் கிராமிய வங்கி | 09.01.2017 -திங்கள் | காலை 9 - பி.ப. 3.00 |

திரு.சி.குமரவேல்,
தலைவர் - சுன்னாகம், ப.நோ.கூ.சங்கம்

(சி/27274) (11,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக்குருவி.!



சிறுதானியங்களாக கருதப்படுகின்ற தினை, கம்பு, சாமை, வரகு, வேலியில் சிறு விதைகளுடைய செடிகள் போன்ற வற்றை பயிரிட்ட காலங்கள் எமது தேசத்தில் இருந்து மறைந்து விட்டன. சிறு விதைகளுடைய செடிகள் இல்லாமல் வீடுகள் நவீனமயப்படுத்தப்பட்டவிட்டன. வீட்டுச் சிறு கிணறுகள் மூடப் பட்டுவிட்டன. பூச்சிக்கொல்லி மருந்துகளால் சிறு புழு பூச்சி கள் குறைந்துவிட்டன.இந்தநிலையிலே வளர்வதற்கேற்ற சூழ்நிலை இல்லாததன் காரணமாக வீட்டுச்சிட்டுகள் என்று கூறப்படுகின்ற சிட்டுக்குருவிகள் முற்றிலுமாக அழிவு நிலைக்குட்பட்டுள்ளன.

ஆனாலும் குருவிகள் வளர்வதற்கேற்ற சூழ்நிலை எங்கு அமைந்துள்ளதோ அங்கெல்லாம் இந்த சிட்டுகள் இயல் பாகக் காணப்படுகின்றன.

மைனா, காகம் போன்று சிட்டுக்குருவிகளின் உணவுப் பழக்க மும், கூடு கட்டும் பழக்கமும் சூழ்நிலைக்கு தக்கவாறு மாற்றிக் கொள்ள முடியாத தன்மையும் அவை அழிந்து வருவதற்கு முக்கிய காரணம் என சொல்லப்படுகிறது. குறிப்பாக காகம், தேன்சிட்டு போன்ற பறவைகள் கம்பிகளில்கூட கூடுகட்டி வாழ்கின்றன.

இதனிடை வீட்டுச்சிட்டின் அளவுடைய பறவைதான் இந்த மஞ்சள் தொண்டைச் சிட்டு (ஜெலோ தொறேற்றட் ஸ்ப றோவ்). இச்சிட்டை பருவ கால மாற்றங்கள் தவிர்ந்த ஏனைய காலங்களில் நாம் பார்த்திருக்க வாய்ப்பில்லை. இவை அயல்நாடான இந்தியாவின் தமிழகத்தில் அதிகம் காணப்படுகின்றன. இவைகூட வேகமாக அழிந்து வருவ தான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. காலப்போக்கில் முற்றிலும் அழிந்துபோவதற்கான வாய்ப்புள்ளதாக விஞ் ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இவை சிறு தானியங்கள் மட்டுமன்றி சோளத்தை மிகுதியாக விரும்பிஉண்ணக்கூடிய பறவைகள். சோளம்விளைந்தகாடுகளி லும், கதிர் அறுத்த களத்திலும் சிறுசிறு கூட்டமாக காணப்படும். வீட்டுச்சிட்டை போன்ற இயல்புகளை கொண்டுள்ள இந்த மஞ் சள் தொண்டை சிட்டானது வனத்தை ஒட்டிய திறந்தவெளிப் பகுதிகளிலும், தானியங்கள் விளைந்த வயல் சார் காட்டுப் பகுதிகளிலும் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இதன் கூடும் வீட்டுச்சிட்டைப் போன்ற அமைப்புடனே இருக்கும். வீட்டுச்சிட்டு ஆண்டு முழுவதும் இனப்பெருக்கம் செய்யும். ஆனால் இவை பெப்ரவரி, மே மாதங்களில் முட்டையிடுகின்றன. மரப்பொந்துகளில் 8 முதல் 40 அடி உயரம் வரை கூடு கட்டுகின்றன.சாதாரணமாக 3 தொடக்கம் 4 முட்டைகள் வரை இடும்.

இவற்றின் முக்கிய எதிரியாக ஆறறிவு படைத்த மனிதர் களாகிய நாமே காரணமாக விளங்குகிறோம். குறிப்பாக சிறு வர்கள் விளையாட்டாக உண்டி வில் (கெற்றப்புல்) கொண்டு அடிப்பது மட்டுமில்லாமல், சிலர் உணவுக்காகவும் இதை அழிக்கின்றனர். வளர்ப்புப் பூனை, காகம்,வல்லூறுகள் போன்ற பறவைகளாலும் இதற்கு ஆபத்து ஏற்படுகிறது.

ஆக,இப்பறவைகளை அழிவிலிருந்து பாதுகாக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

**மஞ்சள் சிட்டும் பறவையியல் அறிஞரும்**

உலகப் புகழ்பெற்ற பறவையியல் அறிஞர் சாலிம் அலி, பறவைகளின் மீது ஈடுபாடு கொண்டதற்கு அடிப்படையாக அவரது சிறு வயதில் இடம் பெற்ற சம்பவம் ஒன்று கதையாடலாக சொல்லப் பட்டு வருகிறது.



ஆரம்ப காலத்தில் பல ரது வீடுகளில் ஏயர் கன் எனப் படும் குருவி சுடும் துப்பாக் கிகள் இருந்தன. சாலிமுக் கும் அப்படி ஒரு துப்பாக்கி பரிசாகக் கிடைத்திருந்தது. ஒரு நாள் தொண்டைப் பகுதியில் மஞ்சளாக, சற்று புதுமையாக இருந்த ஒரு குருவியை சாலிம் அலி பார்த்தார்.

அந்தக் குருவியை அதற்கு முன் அவர் பார்த்தி ருக்கவில்லை. நம் மிடம் உள்ள பறவைகளில் இருந்து இது மாறுபட்டிருக் கிறதே என்று அவருக்குத் தோன்றியது. பி.என். எச்.எஸ். எனப்படும் இந்தி யாவின் பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகத்தை நாடினார். பறவைகள், உயிரினங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வது, சூழ லைக் காக்க முயற்சிப்பது தான் அந்த நிறுவனத்தின் வேலையாக இருந்தது. அங்கே நிறைய பறவை கள் பதப்படுத்தி பாதுகாக் கப்பட்டிருந்தன. அருங் காட்சியகங்களில் வைத்தி ருப்பதைப் போல. அந்தப் பறவைகளால் கவரப்பட்ட சாலிம் பறவைகளைப் பற்றி என்ன வெல்லாம் முடியுமோ அவற்றைப் பற்றியெல்லாம் ஒரு நாள் படிப்பேன் என்பதாய் தனக்குள்ளே முணு முணுத்துக் கொண்டார்.

அதன்படி பிற்காலத்தில் அவர் ஒரு பறவையியல் அறிஞராக மாற்றங் கொண்டார்.

அவர் பறவை அறிவியல் நிபுணராக உயர்ந்திட மேற்படி சம்பவமே கார ணம் என்று சொல்லப் படுகிறது.

## மரண அறிவித்தல்கள்

### கதிரித்தம்பி காளிதாசப்புலவர்



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி காளிதாசப்புலவர் 25.12.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கருணாதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் ரஞ்சிதமலர், காலஞ்சென்ற கண்ணதாசன் மற்றும் அருந்தவமலர், திராவிடமலர் ஆகியோரின் சகோதரனும் ராஜகோபலன், ரஞ்சனாதேவி, அகிலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் அனுரதன், அனுஷியா, அனுலா, அனுதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரோஜினி, கஜேஸ்வரா, கிஷோர்வர்மன் ஆகியோரின் மாமனாரும் அஞ்யனி, சருஞ்யன், லோகேஞ்யனி, சதுஸ்ரிகா, சபிரிஷன், கபினாஸ், ஹரிவர்மன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலும்பிலாட்டி,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்

தகவல்:
குடும்பத்தினர்.

மனைவி: 077 990 5816, மகன்: 077 2487591



### திருமதி சின்னத்தங்கம் புலேந்திரலிங்கம்

சப்பச்சிமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், முதலாம் மைல் வீதி இல.2, பெரிய அரசடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் புலேந்திரலிங்கம் 25.12.2016 ஞாயிற்றுக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், புலேந்திரலிங்கத்தின் (காட்டர்) அன்பு மனைவியும், நவநந்தினி (நோர்வே), சதாநந்தன் (ஜேர்மனி), சத்தியாநந்தன் (ஜேர்மனி), சர்வாநந்தன் (லண்டன்), குகாநந்தன் (ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமார் (நோர்வே), சுகந்தினி (ஜேர்மனி), பூங்கோதை (ஜேர்மனி), கிருத்திகா (லண்டன்), அனுஷா (ஆசிரியர் - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், விநாயகமூர்த்தி, சின்னத்தம்பி, யோகம்மா, சின்னையா, கணேசு, சறோஜினி (சுவீடன்), இரத்தினம், பரமேஸ்வரி (ஜேர்மனி), புவனேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அகிந், ஆகாஷ், சமேறா, காருண்யா, யாதுரன், டமிதா, பூமிதா, சனதா, அஸ்வின், அனிஸ், ஜஸ்மிதன், லக்சுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2016) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் மைல் வீதி,
இல.2, பெரிய அரசடி,
சாவகச்சேரி.

(C/205)
(11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

077 757 0510, 077 728 6031

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா செல்லையா



தோற்றம் 12.05.1932
மறைவு 25.12.2016

கொக்குவில்கிழக்கு, பொற்பதிவீதியைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா செல்லையா 25.12.2016 ஞாயிற்றுக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவரான செல்லையாவின் அன்பு மனைவியும் சந்தாணலட்சுமி, விஜயலட்சுமி, மகேந்திரராஜா, புவனேந்திரராஜா, ஜெயலட்சுமி, இராச லட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தின சிங்கம், வரதராசா, மரியலெனா, அனற், இராசரட்ணம், மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் றொக்சன், துளசிகா, கோபிறாஜ், மிதிலா, ஜபீதா, ஜனார்த்தனன், ஜனகன், ஜதா, மகிந்தன், சிந்துஜா, செந்தூரன், சிவானு ஜன், பிறீட்மன், கெயிஸ்மன், லாகின்ஸ்மன், ஷாம், ஜோசியா, டிபோறா, ரவீந்திரன், துஷ்யந்தன், ஜெயகாந் தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சபீனா, ஸ்ரவணியா, அர்விதன், ஆதிரன், பிரவீன், சபீனா, நிலக்ஷிகா, சுஜின், லூக்கா, கிறிஸ்தோப்பர் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒருமணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில்கிழக்கு,
பொற்பதி வீதி.

(J/7190)
(14,17,18,)

தகவல்:
குடும்பத்தினர்.

பிறப்பு 08 . 02 . 1980



இறப்பு 24 . 12 . 2016

### ஆசீர்வாதம் ஜெயஸ்ரீபன் (அறிவிப்பாளர்)

நீர்வேலி பரலோக மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும், நெடுங்கேணி குளவி சுட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் ஜெயஸ்ரீபன் (ஸ்ரீபன்) 24.12.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - புஸ்பராணி தம்பதிகளின் பாசமிகு மகனும், மயில்வாகனம் - குணபூரணம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், மதிவதனியின் (லதா) அன்புக் கணவரும், சாகித்தியன், மாதுளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வேணாட், விசயராக்கினி, டெரன்ஸ்,யூட், ஜெறோம், றொபேட், காலஞ்சென்ற பிரதீபன் ஆகியோரின் சகோதரனும், காமினி, டெசி, வவா, செல்வபூபதி, றஜனி, மதிவதனன், மதிவதனா, மதியழகன் ஆகியோரின் மைத்துனரும், பெனடிக்ற், காலஞ்சென்றவர்களான தியோனியாஸ், வின்சன் ஆகியோரின் மருமகனும், சூசைநாதன் ( கிளி - அமெரிக்கா) பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.12.2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நீர்வேலி பரலோகமாதா ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் பரலோகா மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி.

(J/7185)
(11,17)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மயிலிட்டியை...

படை அதிகாரிகளின் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த அமைப்பைச் சேர்ந்த முன்னாள் படை அதிகாரிகள் ஜனாதிபதி மைத்திரிபாலவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

கடற்படையின் முன்னாள் தலைமை அதிகாரியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான றியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான முன்னாள் படை அதிகாரிகள் குழுவே இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டது.

சந்திப்புத் தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ள றியர் அட்மிரல் சரத் வீரசேகர,

தீவிரவாதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார். மிருசுவிலில் 2000ஆம் ஆண்டு 8 பொதுமக்களைப் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தைச் சேர்ந்த ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கும், ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளை நினைவு கூர அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, போர் வெற்றி நாள் அணிவகுப்பை நிறுத்தியுள்ளது குறித்தும் முறைப்பாடு செய்தோம். தீவிரவாதிகளை நினைவு கூர எந்த நாடும் அனுமதிப்பதில்லை. வெற்றியை நினைவு கூரும் உரிமை இராணுவத்துக்கு உள்ளது.

மயிலிட்டியில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆயுதக் கிடங்குகள் உள்ளிட்ட மிக முக்கியமான இராணுவ நிலைகள் மயிலிட்டியில் அமைந்துள்ளன. இங்கு மீள்குடியேற்றம் மேற்கொள்வதற்கு, இராணுவத்தை அகற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அழுத்தம் கொடுப்பதுடன், இடம்பெயர்ந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். எந்தச் சூழ்நிலையிலும் மயிலிட்டியை விட்டுக் கொடுக்கக் கூடாது. இராணுவம் அங்கு நிலை கொண்டிருக்க வேண்டும். மயிலிட்டியை விட்டு வெளியேற்றப்பட்டால், இராணுவத்தினரின் திறன் பாதிக்கப்படும்.

வடக்கில் இருந்து திட்டமிட்ட அடிப்படையில், எல்லா சிங்கள பொதுச் சேவை அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டு தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது. இந்த விடயங்களை ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளோம் - என்றார். (த-5)

## மேலும்...

களின் நிலை தொடர்பாக 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பிலான முழுமையான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயீட் ஹூசைன் வெளியிடுவார்.

கொழும்பு அரசும் இணைந்தே அந்தத் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபை யில் நிறைவேற்றியது. ஆனால், அதில் கூறப்பட்டுள்ள பல விடயங்களை அது இதுவரையில் நிறைவேற்றவில்லை. ஒரு சில விடயங்களில் மிகச் சிறிய அளவிலான முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் பல விடயங்கள் தொடங்கப்படக்கூட இல்லை.

இந்த நிலையில் அடுத்த மார்ச் மாதம் மேலும் ஒரு ஆண்டு கால நீடிப்பைக் கேட்பதைத் தவிர கொழும்புக்கு வேறு வழியில்லை என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படியொரு நிலமை ஏற்பட்டால் அதற்கு ஆதரவு தெரிவிப்பதற்குக் கூட்டமைப்பு இரு நிபந்தனைகளை விதிக்கிறது என்று அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

“இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஒப்புக்கொண்ட எட்டு விடயங்களும் செய்யப்பட வேண்டும். அதற்காக இலங்கை அரசுக்கு இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில், மேலும் ஒரு வருட கால நீடிப்புக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கும்” என்றார் அவர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

அரசு உறுதி வழங்கிய எட்டு விடயங்களில் ஒரு விடயத்தை மாத்திரம் அது தொட்டுப் பார்த்துள்ளது. காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் அமைப்பதற்கான சட்டம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா அமர்வில், இலங்கை தொடர்பில் மீளாய்வு நடைபெறும். அரசு இத்தனை விடயங்கள் செய்யவில்லை என்று அங்கு சொல்வதன் ஊடாக எங்களுக்கு எந்தப் பயனும் அங்கு கிட்டப்போவதில்லை. இலங்கை அரசு உறுதியளித்த விடயங்களைச் செய்ய வைக்க வேண்டும். அதுவே முக்கியம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் சொல்லப்பட்டவற்றை கட்டாயம் நிறைவேற்ற வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் அரசுக்கு இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே, இலங்கை அரசு இவற்றைச் செய்யவில்லை என்ற அறிக்கையுடன் மட்டும் இந்த விடயங்கள் காணாமற்போய்விடுவதை நாங்கள் விரும்பவில்லை.

இலங்கை அரசு தான் உறுதியளித்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் போதவில்லை. அதனை நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கோரினால் இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் அதற்கு அனுமதி வழங்கலாம்.

கால அவகாசம் வழங்குவதன் ஊடாகவே, இலங்கை மீது பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையைத் தொடர முடியும். இந்தக் கால அவகாசம் மேலும் ஒரு வருடத்திற்குரியதாகவே இருக்கும்.

இந்தக் கால அவகாசத்திற்கு நாம் இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இணங்குவோம். புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் மார்ச் மாதம் வரையில் ஏற்படும் முன்னேற்றங்களைக் கவனத்தில்கொள்வோம். அடுத்து, உடனடியாக நிறைவேற்றக் கூடிய தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, மீள்குடியமர்வு உள்ளிட்ட விடயங்கள் முழுமையாகச் செய்து முடிக்கப்படவேண்டும் - என்றார். (உ-5)

## காலை...

கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

‘பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பது என்ற தீர்மானத்தில் எந்தவித மாற்றமும் இல்லை’ என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் இதுவரை காலமும் காலை 8 மணிக்கு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஜனவரி மாதத்திலிருந்து - புதிய தவணையிலிருந்து காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் மேற்படி தீர்மானத்திற்குப் பல தரப்புக்களும் எதிர்ப்புக்கள் வெளியிட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட விவாத அமர்விலும் இந்த விடயம் எதிரொலித்திருந்தது. காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

‘வடக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் புதிய தவணையில் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கும் தீர்மானத்தில் எதுவித மாற்றமும் கிடையாது. இந்தத் தீர்மானத்தை மாற்றியமைக்கும் அதிகாரமும் எனக்குக் கிடையாது. இந்தத் தீர்மானம் வடக்கு மாகாண அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்டது. பாடசாலையைக் காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதில் பாதகங்கள் சுட்டிக்காட்டப்படுவதைப் போன்று சாதகங்கள் பலவும் குறித்துக் காட்டப்பட்டுள்ளன’ என்று கல்வி அமைச்சின் செயலர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

‘இந்த விடயம் இலங்கையின் ஏனைய மாகாணங்களில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது சாத்தியப்பாடான விடயம். காலையில் கற்றல் சிறுவர்களுக்கு உகந்தது’ என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார். (த-5-101)

## வெவ்வேறு...

பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் கீரிமலை - மாதகல் கடற்பரப்பில் ஐந்து கணை கடற்கரையில் நீராடச் சென்ற ஆசிரியர் ஒருவர் நேற்றையதினம் நீரில் மூழ்கிச் சாவடைந்தார். யாழ். இளவாலை சென்.ஹென்றிஸ் பாடசாலையின் ஆசிரியரான வே.நகுலன் (வயது -31) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார். இது தொடர்பான விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணம், கந்தரோடை பகுதியில் உள்ள இக்கிரானை குளத்தில் நீராடச் சென்ற 3 சிறுவர்களில் ஒருவர் நீரில் மூழ்கிச் சாவடைந்தார். அளவெட்டி, அளுக்கன் பகுதியை சேர்ந்த பரமேஸ்வரன் சாருஜன் (வயது -9) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார். சிறுவனது உடலத்தை மீட்ட போலிஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். விசாரணைகளை தெல்லிப்பழைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-21,31)

## போராளிகளின்...

விவகாரம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. நூற்றுக்கணக்கான முன்னாள் போராளிகள் மர்மான முறையில் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என, நாடாளுமன்றத்தில் வைத்து சி.சிறீதரன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்பில் ஆராய்வதற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்திருந்தது. மர்மமான முறையில் உயிரிழந்த போராளிகள் தொடர்பில் அவர்களது உறவினர்களைப் பதிவு மேற்கொள்ளுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் முன்னாள் போராளிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

‘மர்மமான முறையில் உயிரிழந்த போராளிகள் தொடர்பில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்தோம். எவரும் இது தொடர்பில் பதிவுகளை மேற்கொள்ளவில்லை. முன்னாள் போராளிகளுக்கான பரிசோதனையில், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 130 பேரும், யாழ்ப்பாணத்தில் 33 பேரும், கிளிநொச்சியில் 29 பேரும், வவுனியாவில் 7 பேரும், மன்னாரில் 5 பேருமாக 204 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கான முதல் கட்ட மருத்துவச் சோதனை நடத்தப்பட்டது. அதில் பாரதூரமான எந்தவொரு விடயமும் இவர்களிடம் அவதானிக்கப்படவில்லை’ என்று சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். (த-5)

## பொருளாதார...

இடங்களிலுமே பொருளாதார வலயம் நிறுவப்படவுள்ளது. வவுனியா மாவட்டத்தில் பொருளாதார வலயம் நிறுவுவதற்குக் கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கான இடத் தெரிவில் நீண்ட - நெடிய சர்ச்சை நிலவியது. கொழும்பு அரசு பிரேரித்த இடத்திற்கு வடக்கு மாகாண அரசு எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. இறுதியில் கொழும்பு அரசும் - வடக்கு அரசும் இணங்கிப் பொருளாதார வலயம் இரண்டு இடங்களில் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பின்னரும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. வவுனியாவில் அமையும் பொருளாதார வலயம் ஓமந்தையில் அமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டு மதகுவைத்த குளத்தில் அடிக்கல் நடும் நிகழ்வு இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது. இதனால் மீளவும் இந்த விடயம் இழுபறிக்குள்ளானது. வவுனியா மாவட்டத்தில் மதகுவைத்த குளம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளத்தில் பொருளாதார வலயம் அமைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு கொழும்பு அரசின் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கடிதம் அனுப்பியிருந்தது.

பொருளாதார வலயத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்த நிறுவனத்திடம் மேற்படி காணிகளைக் கையளிப்பதற்கு ஏதுவாக, கிராமிய பொருளாத அபிவிருத்தி அமைச்சுக்கு இரண்டு காணிகளையும் வழங்குமாறு மாவட்டச் செயலர்களிடம் கேட்கப்பட்டிருந்தது.

இரண்டு காணிகளும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தக் காணிகளில் நிர்மாணப் பணிகளை ஒப்பந்த நிறுவனம் சில தினங்களில் ஆரம்பிக்கவுள்ளது. (த-5-101)

## எல்லை...

ஜயரட்னவிடம் கையளிக்கவுள்ள தாக எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

எல்லை நிர்ணயக் குழுவின் பணிகள் நிறைவடைந்து இன்று அந்த அறிக்கை கையளிக்கப்படவிருந்த நிலையில், மாகாண மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளிநாடு சென்றுள்ளார். இந்த அறிக்கை வெளியீட்டைத் தாமதப்படுத்தவே திட்டமிட்டு அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கபே அமைப்பு குற்றம் சுமத்தியிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, உள்ளூராட்சிச் சபைகள் இராஜாங்க அமைச்சர் பிரியங்க ஜயரத்னவிடம் உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கையை இன்று கையளிக்கவுள்ளதாக எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கை இன்று கையளிக்கப்பட்ட பின்னர் 2017ஆம் ஆண்டின் ஜனவரி முதல் வாரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தலை அரசு வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## அனுராதபுரத்தில்...

களம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள சிறிமுத்துமாரி அம்மன் ஆலயம், நவராத்திரி திருவிழாவின் இறுதி நாள் அன்று உடைத்துச் சேதமாக்கப்பட்டது. ஆலயத்தின் சிலைகளும் அடித்து நொறுக்கப்பட்டிருந்தன. ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவிகள் வழங்குவதாக மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் இயங்கும், இந்து கலாசாரத் திணைக்களம் தெரிவித்திருந்தது. உதவிகள் இதுவரை தமக்குக் கிடைக்கப்பெறவில்லை என்று ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

‘ஆலயத்திற்குரிய இரண்டு சிலைகள் திணைக்களத்தினால் செய்யப்பட்டுள்ளன. அவற்றை அடுத்த மாதம் நடைபெறும் கும்பாபிசேகத்தின்போது வழங்கத் தீர்மானித்துள்ளோம். ஆலயத்தின் முன் மண்டபம் அமைப்பதற்கும் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் வழங்கப்படும். ஏனைய ஆலயங்களுக்கு கும்பாபிசேகத்தின்போது வழங்கப்படும் உதவிகள் இந்த ஆலயத்திற்கும் வழங்கப்படும்’ என்று இந்து கலாசாரத் திணைக்களத்தினர் குறிப்பிட்டனர். (த-5-

## கஞ்சாவுடன்...

செல்ல முற்பட்ட நபர் ஒருவர் வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்துக் கை செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந் மூன்றரைக் கிலோ கேரளக் கஞ்சா மீட் பட்டது என வவுனியாப் பொலிஸார் தெ வித்தனர்.


வவுனியா பேருந்து நிலையத்தில் நேற் முன்தினம் மாலை சந்தேகத்துக்கிடமா ஒருவரைச் சோதனை செய்தபோது அவ மிருந்து 3 கிலோ 550 கிராம் கேரளக் கஞ் மீட்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இரு தென்பகுதிக்குக் கொண்டு செல்வதற் இந்தக் கஞ்சா எடுத்துவரப்பட்டுள்ளது. வவுனியா பிரதான பேருந்து நிலையத் தென்பகுதி செல்லும் பேருந்தில் ஏறமுற் ஒருவர் மீது பொலிஸார் சந்தேகமடை மேற்கொண்ட சோதனையின்போதே தக் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப் காரி விஜயமுனி சோமரட்ணவின் வழிக லில் மது ஒழிப்புப் பிரிவு உபபொலிஸ் சோதகர் கலா வினோதன் தலைமை லான குழுவினரே இதனைக் கைப்ப யிருந்தனர். அதனை வைத்திருந்த நப கைது செய்யப்பட்டார். கைது செய்யப் நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற் நடவடிக்கைகளை வவுனியா மது ஒழ் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (கு-21-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் காலில் ஏற்பட்ட தசைப் பிடிப்புக் காரணமாக ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்து பாதியில் வெளியேறினார் ரகிம். இதனால் நாளைமறுதினம் நடைபெறவுள்ள இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டத்தில் ரகிமின் பங்குபற்றல் சந்தேகத்துக்குள்ளாகியுள்ளது. (ம)



# திக்கம் இளைஞர் அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், டிசெ. 27
மயிலங்காடு ஞானமுருகன் வி.கழகம் நடத்தும் கால்பந் தாட்டத் தொடரில் திக்கம் இளைஞர் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 27
**எவ்.ஏ. கிண்ணம்**
**வவுனியா லீக்**
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் தேசியமட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. வவுனியா லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் இன்று செவ் வாய்க் கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் கிஜிரா அணியைஎதிர்த்து லயன்ஸ் அணி மோதவுள்ளது.
**ஐக்கியத்தின் கால்பந்தாட்டம்**
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகம் நடத்தும் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி 'பி' அணியை எதிர்த்து மலையூர் கண்ணகி அணியும் மாலை 5 மணிக்கு பருத்தித்துறை ஐக்கியம் 'ஏ' அணியை எதிர்த்து அண்ணாசிலையடி அணியும் மோதவுள்ளன.
(ம-422-23)



# மாகாண ஊர் சுற்றும் போட்டி; பெண்களில் முல்லை, சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ. 27
வடமாகாண ஊர் சுற்றும் போட்டியில் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு சம்பியனானது.
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 10 கிலோ மீற்றர் ஊர் சுற்றும் போட்டி அண்மையில் முல்லைத்தீவில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட மாவட்டங்கள் பெற்ற ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் ஆண்கள் பிரிவில் வவனியா மாவட்டமும் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டமும் சம்பியனாகின.
தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் பெண்கள் பிரிவில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மேரி ஜெனசி முதலாமிடத்தையும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.சாளினி இரண்டாமிடத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். விதுசனா மூன்றாமிடத்தையும் தமதாக்கினர். (ம-108)



யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தொடரின் இறுதியாட்டம் அரியாலை சரஸ்வதி சனமூக நிலைய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது. விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு சேவை செய்து வரும் ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் நாகரத்தினம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார். (ம-23)

# லோட்ஸ் தரப்படுத்தலில் முதலிடம் கோக்லிக்கு அதி உயர் கௌரவம்

## கேரத், குசல் மெண்டிஸுக்கும் இடம்



கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்தின் பழமையானதும் புகழ் பெற்றதுமான லோட்ஸ் நிர்வாகம் நடப்பு வருடத்தில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்கள் என்று தான் கருதும் 20 வீரர்களைப் பட்டியலிட்டுள்ளது. இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி முதலிடம் பிடித்தார்.
லோட்ஸ் நிர்வாகப் பட்டியலின் படி நான்காவது இடத்தில் கேரத்தும், பதினாறாவது இடத்தில் குசல் மெண்டிஸும் உள்ளனர். இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணியின் வீரர்களே அதிகளவில் உள்ளனர்.
லோட்ஸ் நிர்வாகத்தின் பட்டியல் - கோக்லி (இந்தியா), பரிஸ்ரெளவ் (இங்கிலாந்து), அஸ்வின் (இந்தியா), கேரத் (இலங்கை), கிறிஸ் வோக்ஸ் (இங்கிலாந்து), ரபாடா (தென்னாபிரிக்கா), ரூட் (இங்கிலாந்து), குயின்டன் டி ஹொக் (தென்னாபிரிக்கா), ஸ்ராக் (ஆஸ்திரேலியா), ஸ்ரோக்ஸ் (இங்கிலாந்து), மிஸ்பா (பாகிஸ்தான்), வோர்ணர் (ஆஸ்திரேலியா), ரகானே (இந்தியா), சிமித் (ஆஸ்திரேலியா), யாசீர் (பாகிஸ்தான்), குசல் மெண்டிஸ் (இலங்கை), புஜாரா (இந்தியா), தாகிர் (தென்னாபிரிக்கா), சகிப் அல் ஹசன் (பங்களாதேஷ்).
பன்னாட்டு கிரிக்கெட் சபை அண்மையில் நடப்பு வருடத்தின் சிறந்த அணியை அறிவித்தது. கோக்லிக்கு இடம் கிடைக்கவில்லை. ஆனால் லோட்ஸ் நிர்வாகத்தின் பட்டியலில் முதலிட அந்தஸ்து அவருக்குக் கிடைத்தது. அதே நேரம் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தரப்படுத்தலில் வில்லியம்சனுக்கு இடம் கிடைத்தது. லோட்ஸ் நிர்வாகத் தரப்படுத்தலில் முதல் இருபது இடங்களுக்குள் அவர் இல்லை.
(ம)

# அதிகளவில் தேடப்படுகிறார் பி.வி.சிந்து

நடப்பு வருடத்தில் கூகுளில் இந்திய அணியில் அதிகளவில் தேடப்பட்ட விளையாட்டு நட்சத்திரமாக பி.வி. சிந்து உள்ளார்.
நடப்பு வருடம் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி. சிந்து வெள்ளிப்பதக்கம் வென்றார். இந்தியாவின் சார்பில் இந்த வருடம் பதிவான ஆகச் சிறந்த அடைவாகவும் இதுவே உள்ளது. இதனையடுத்தே அவரைத் தேடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# ஈஸ்வரன், அல்கிஜிரா, கோல்டன் ஸ்ரார் வென்றன

யாழ்ப்பாணம், டிசெ. 27
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் ஈஸ்வரன், அல்கிஜிரா அணிகள் வெற்றிபெற்றன.
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் தேசியமட்டத்தில் எவ்.ஏ. கிண்ணத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. வவுனியா லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. கடந்த சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஈஸ்வரன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்கிஜிரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூபைட் அணி மோதியது. இதில் அல்கிஜிரா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் லக்கி ஸ்ரார் அணியை எதிர்த்து கோல்டன் ஸ்ரார் அணி மோதியது. இதில் 3:2 என்ற கோல் கணக்கில் கோல்டன் ஸ்ரார் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைக்கு ஓய்வில்லை

## அப்ரிடி வெளிப்படை


பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து தற்போதைக்கு ஓய்வுபெறும் எண்ணம் இல்லை என்று பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரரான அப்ரிடி தெரிவித்தார்.

பிரிவு உபசார ஆட்ட மொன்றில் விளையாட வாய்ப்புத் தரும்படி பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை அப்ரிடி கேட்டு வருகிறார் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் குறித்த கருத்துக்களை மறுத்து தனது நிலைப்பாட்டை அப்ரிடி வெளிப் படுத்தினார்.

பாகிஸ்தான் அணிக்காக 20 ஆண்டுகள் பன்னாட்டு கிரிக்கெட்டில் விளையாடி வருகிறேனே தவிர, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்காக அல்ல. வழியனுப்பும் வகையிலான ஆட்டத்துக்காக நான் எவரையும் கேட்கவில்லை. ரசிகர்களின் அன்பும், ஆதரவுமே எனக்கு கிடைத்த உன்னதமான பரிசாகும். எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து



விட்டதாக நினைக்கவில்லை. கிரிக்கெட் விளையாடுவதில் இன்னும் உற்சாகமாகவே இருக்கிறேன். எனக்கு வாய்ப்பு வழங்குவது தேர்வுக் குழுவின் முடிவைப் பொறுத்தது என்று அப்ரிடி மேலும் தெரிவித்தார். (ம)



# தேசிய அணித் தெரிவில் நிர்வாகக் குழு தலையீடு

## தெரிவுக்குழு குற்றம் சுமத்தியது

இலங்கை கிரிக்கெட் தேசிய அணித்தெரிவில் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் ஆரோக்கியமற்ற தலையீடு அதிகம் உள்ளது என்று தெரிவுக்குழு குற்றம் சுமத்தியது என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தாங்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்ய விரும்பாத சில வீரர்களை தேர்வு செய்யவேண்டும்என இலங்கை அணியின் நிர்வாக உறுப்பினர்கள் தங்களை கட்டாயப் படுத்து கின்றனர் என்று சனத் ஜெயசூர்யவின் தலைமையில் செயற்படும் இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

அதே போல இலங்கை அணி பங்கேற்கும் தொடர்கள் நடைபெறும் இடங்களுக்கு தங்களைப் போக விடாமல் அவர்கள் தடுக்கின்றனர் எனவும் குறித்த குழு தெரிவித்தது. மேலும் இது போன்ற விடயங்கள் தொடருமானால், பதவி விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழு தெரிவித்தது என்று குறித்த ஊடகங்கள் மேலும் செய்தி வெளியிட்டன. (ம)

# பாகிஸ்தான் தடுமாற்றம் மழையும் குறுக்கிடுகிறது

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்றைய நிலவரத்தின் படி பாகிஸ்தான் தடுமாற்றமான தொடக்கம் கண்டது. மழை குறுக்கிட்ட காரணத்தால் 40 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்படாத நிலையில் நாள் முடிவு கண்டது.

மெல்போர்ணில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக அஸ்லாம் மற்றும் அசார் அலி. 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் லையனின் சுழலில் அஸ்லாம் ஆட்டமிழந்தார். அசார் அலி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும் அவருடன் நீடித்து நின்று எவரும் இணைப்பாட் டத்தைப் பகிரவில்லை. அசாம் 23 ஓட்டங்களுடனும் யுனிஸ்கான் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமி ழந்தனர். அசாமை வீழ்த்தியவர் கசில்வூட். யுனிஸ் கானை போல்ட் செய்தவர் பேட். சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் மிஸ்பா. இருப்பினும் அவரால் முடிந்தது 11 ஓட்டங்கள் மட்டுமே. ஒரு முனையில் சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய மறுமுனையில் அரைச்சதத்தைப் பதிவு செய்தார் அசார் அலி.

ஆஸ்திரேலியாவை வீழ்த்துவோம் என்று அறிக்கை விட்ட சபிக், களத்துக்கு வந்தார். கூடவே மழையையும் கூட்டிவந்தார். ஆஸ்திரேலியாவின் ஆதிக்கத்தை விட மழையின் ஆதிக்கம் அதிகரிக்க 40 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்படாத நிலையில் நாள் முடிவு கண்டது. அசார் அலி 66 ஓட்டங்களுடனும், சபிக் 4 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



# நியூசிலாந்து பதற்றமில்லாத வெற்றி

## பங்களாதேஷ் சிறப்பான போராட்டம்

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்று முன்னிலை பெற்றது நியூசிலாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் ஆரம்ப வீரர்களாக குப்தில் மற்றும் லாதம். 15 ஓட்டங்களுடன் குப்திலை வீழ்த்தினார் ரகுமான். காயம் காரணமாக நீண்டகாலம் ஓய்விலிருந்த பின்னர் தனது சிறந்த மீள்வருகையை ரகுமான் நிகழ்த்தினார். லாதம் வில்லியம்சன் இணை சிறிது நீடித்தது. அணி 79 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 31 ஓட்டங்களுடன் வில்லியம்சனை வீழ்த்தினார் ரஸ்கின் அகமட். புரூம், நீஸ்கம் பெரிதாக இல்லை. லாதத்துடன் இணைந்து தடுமாற்றத்தை சரி செய்தார் முன்றோ. 56 பந்துகளில் லாதத்தின் அரைச் சதம் பதிவானது. முன்றோ ஆரம்பம் முதலே அடித்தாட ஆரம்பித்தார். முன்றோ நிலைத்ததை அடுத்து லாதமும் அதிரடியைக் கையிலெடுத்தார். 44 பந்துகளில் முன்றோவின் அரைச்சதம் பதிவானது. லாதம் சதம் கடந்தார். இணைப்பாட்டமாக 158 ஓட்டங்கள் பகிரப் பட்ட பின்னர் 87 ஓட்டங்களுடன் முன்றோ ஆட்டமிழந்தார். 137 ஓட்டங்களுடன் லாதத்தை வீழ்த்தினார் ரகுமான். முடிவில் நியூசி லாந்து 341-7.

பந்துவீச்சில் சகிப் அல் ஹசன் 3 இலக்குகளையும் ரகுமான், அக மட் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷுக்கு அந்த அணியின் ஆரம்ப வீரர்களான இக்பால் மற்றும் கையிஸ் இருவரும் இலங்கை எட்டும் படியான நம்பிக்கையை வழங்கவில்லை. அணி 50 ஓட் டங்களை எட்டும் முன்னர் முதல் மூன்று வீரர்களும் ஆட்டமிழந்திருந்தனர். சகிப் அல் ஹசன் அரைச்சதம் கடந்தார். அவர் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரகிம் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்துச் சென்றார். மொஸ்டக் கொசைன் அதிரடி காட்டி அரைச்சதம் கடந்தாலும் மறுமுனையால் இலக்குகள் சரிய முடிவில் 264 ஓட்டங்களில் சுருண்டது பங்களாதேஷ். 77 ஓட்டங்களால் வெற்றிபெற்றது நியூசிலாந்து. (ம)

# ஆஸி. கிரிக்கெட் சபையின் கனவு அணி; இடம்பிடித்தார் சுழல்பந்து வீச்சாளர் கேரத்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நடப்பு வருடத்தின் தனது கனவு அணியை நேற்றுமுன்தினம் அறிவித்தது. இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளரான ரங்கன கேரத்தும் குறித்த அணியில் இடம் பெற்றார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் குறித்த அணிக்கு இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி தலைவராக நியமிக்கப்பட்டார். ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித் ஒரு வீரராக அணியில் தொடர்கிறார். பரிஸ்ரெளவ் மற்றும் குயின்டன் டி ஹொக் என்று இரு இலக்குக் காப்பாளர்கள் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் கனவு அணி: கோக்லி (தலைவர்), அசார் அலி, சிமித், ஸ்ரொக், ஸ்ரோக்ஸ், பரிஸ்ரெளவ், குயின்டன் டி ஹொக், ரபாடா, அஸ்வின், கேரத். (ம)



தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி வீரர்கள் கிறிஸ்மஸ் தினத்தை போர்ட் எலிசபேத் நகரில் உள்ள ஒரு விருந்தினர் விடுதியில் கொண்டாடினர். இது தொடர்பான படத்தை துடுப்பாட்ட வீரரான தரங்க தனது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோக்லியும் கும்ளேயுமே வெற்றிக்கு வித்திட்டோர்

இந்திய அணி டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ச்சியாக சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருவதற்கு அணியின் தலைவரான கோக்லியும் தலைமைப் பயிற்சியாளரான அனில் கும்ளேயும் முக்கிய காரணமானவர்கள் என்று இந்திய 'ஏ' அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராவிட் தெரிவித்தார்.

இந்திய இணையம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். கருண் நாயர், ஜெயந்த் யாதவ் போன்ற இளம் வீரர்கள் இந்திய அணிக்குள் நுழைந்து சிறப்பாக விளையாடுவதைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது. தேசிய அணிக்கு வந்த உடனே இவர்கள் வெற்றிகரமாக செயற்படுவதற்கு, கோக்லியும், தலைமைப் பயிற்சியாளர் அனில் கும்ளேயும் உருவாக்கிக் கொடுத்துள்ள சாதகமான சூழலே காரணம் ஆகும்.

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில், கருண் நாயர் முதலில் சதம் அடித்து பிறகு அதையே முச்சதமாக (303 ஓட்டங்கள்) மாற்



றிய விதம் அற்புதமானது. இந்த ஓட்டக் குவிப்பு அவரது திறமையை மட்டும் பேசவில்லை. அவரது வேட்கையையும், ஆர்வத்தையும் காட்டுகிறது. அது தான் மிகவும் முக்கியமான விடயமாகும். இந்திய கிரிக்கெட் அணியின் தற்போதைய நிலையும், தொடர்ந்து இளம் வீரர்கள் வருவதையும் கருத்திற் கொண்டால் அந்த அணிக்கு மிகப்பெரிய எதிர் காலம் உள்ளது தெரியவரும் என ராவிட் மேலும் தெரிவித்தார். (ம)



# லக்மலின் அபாரப் பந்துவீச்சால் முன்னணி வீரர்கள் பவிலியனில்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று லக்மலின் அபாரப் பந்துவீச்சு கைகொடுக்க தென்னாபிரிக்காவை தடுமாற வைத்தது இலங்கை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக ஸ்ரீபன் குக் மற்றும் எல்கர் களமிறங்கினர். ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானது. அத்தகைய ஆடுகளத்தில் நன்கு பரிட்சயமுடைய தென்னாபிரிக்காவுக்கு நிகரான அல்லது சவால் விடக்கூடிய போராட்டத்தை முதல் செசனில் இலங்கை வெளிப்படுத்தவில்லை. தென்னாபிரிக்க அணி இலக்குச் சரிவில்லாமல் 92 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல் செசன் முடிவுக்க வந்தது.

இடைவேளை முடித்து வந்ததும் லக்மலின் பந்துவீச்சு திடீர் எழுச்சி கண்டது. ஆரம்ப வீர்கள் இருவரையும் அடுத்தடுத்து பவிலியனுக்கு அனுப்பினார். அம்லாவும் லக்மலிடம் சிக்கினார். அரைச்சதம் கடந்த டுமினியை 63 ஓட்டங்களுடனும் பவுமாவை வெறும் மூன்று ஓட்டங்களுடனும் பவிலியனுக்குத் திருப்பினார் கேரத். 37 ஓட்டங்களுடன் பிளாசிஸும் ஆட்டமிழக்க நாள் முடிவில் தென்னாபிரிக்கா 267-6 என்றுள்ளது. குயின்டன் டி ஹொக் 25 ஓட்டங்களுடனும் பிளன்டர் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# அஸ்வின், ஜடேயா இல்லை; டோனிக்கு மேலும் நெருக்கடி

இங்கிலாந்துக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட தொடர்களில் இந்திய அணியில் சுழல்பந்து வீச்சாளர்களான அஸ்வின், ஜடேயா ஆகியோர் இடம்பெறமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் ஜனவரி 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் பின்னர் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர்களில் இந்தியா விளையாடவுள்ளது. இந்தத் தொடர்களைக் கருத்தில் கொண்டே அஸ்வின், ஜடேயாவுக்கு ஓய்வு கொடுக்கப்படவுள்ளது என்று தெரிவுக்குழுவின் தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக அண்மையில் இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இந்திய அணி தொடரை 4:0 என்று கைப்பற்றியது. டெஸ்ட் தொடரை சிறந்த தரநிலையுடன் கோக்லி கைப்பற்றிய காரணத்தால் ஒருநாள் தொடரை டோனி நிச்சயம் கைப்பற்ற வேண்டும் என்ற நெருக்கடி உள்ளது. டோனியின் ஓய்வு காலம் நெருங்குகிறது, அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது, ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களின் தலைமைத்துவமும் கோக்லிக்குச் செல்லவேண்டும் என்று சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் தன்னை நிரூபித்து விமர்சனங்களைக் குறைத்துக் கொள்ள டோனி இந்தத் தொடர்களை கைப்பற்ற வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த நிலையில் அஸ்வின், ஜடேயாவின் விலகல் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்று கருதப்படுகிறது. (ம)



Data entry operator தேவை
தகைமை
* A/L
* M.S office package ஐ கையாளக்கூடிய திறமை
* சிங்களம் / ஆங்கிலம் பேசக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
யாழ்.நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
Lukshmee Agency
23/1, 4th Lane,
Brown road,Jaffna.
T.P. 021 222 7167

# விருது கிடைக்காவிட்டால் செத்துவிடப் போவதில்லை

## நெய்மர் தெரிவிப்பு

நடப்பு வருடத்துக்கான சிறந்த கால் பந்து வீரராக நெய்மர் மெஸ்ஸியைத் தோற்கடித்து ரொனால்டோ தெரிவாகிய நிலையில் குறித்த விருது கிடைக்கா விட்டால், தான் செத்துவிடப் போவதில்லை என்று நெய்மர்தெரிவித்தார். சிறந்த கால்பந்து வீரராகத் தெரிவாகவேண்டும் என்பது தான் பல வீரர்களின் நோக்கம். எனது நோக்கமும் அதுவே. ஆனால், அந்த விருது கிடைக்காவிட்டால் நான் செத்துவிடமாட்டேன். விருதுகளைவிட எப்போதுமே சந்தோசமாக இருக்க விரும்புகிறேன். தற்போதும் மகிழ் சியாகவே விளையாடுகிறேன். தொடர்ந்தும் குறித்த விருதுக்காக முயற்சி செய்வேன் என நெய்மர் மேலும் தெரிவித்தார். (ம)

பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு
எமது American நிறுவனமானது முகாமைத்துவ பயிற்சிநெறியும் அதனுடன் கூடிய வேலை வாய்ப்புக்களையும் 10 புதிய கிளைகளிற்கு வழங்கவுள்ளது. அலுவலகர், மேற்பார்வையாளர், களஞ்சியப் பாதுகாவலர் மற்றும் பயிற்சியின் பின்னர் உதவி முகாமையாளர், முகாமையாளர் போன்ற பதவிகள் பூர்த்திசெய்யப்படவுள்ளன.
குறிப்பு : பயிற்சி பெறுநர் 03 மாதகால பயிற்சியின் பின் தகுதிகாண் தேர்வின் மூலம் (அமெரிக்கா, கனடா, லண்டன்) வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புகள் உண்டு.
தகைமை :
O/L, A/L மேற்பட்ட தகைமையுடையோர்.
தொடர்பு : 077 298 6763, 071 187 3807, 077 077 1377

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் - கே.கே.எஸ்.றோட்
யாழ்ப்பாணம் - இணுவில்
(இரு இடத்திலும்)
A/L 2019
தொழில் நுட்பம், கலை.வர்த்தகம்
ஆரம்பம் - 01.01.2017
ஞாயிற்றுக்கிழமை
யாழ்நகரில் - சகலபிரிவும்
8.00AM
இணுவிலில் - கலைப்பிரிவு
8.00 AM
வர்த்தகப்பிரிவு , தொழில்நுட்பப்பிரிவு -
2.00 PM
உங்கள் அனுமதிகளை முன்கூட்டி பெற்றுக்கொள்ளவும்
அலுவலக நேரம் - 8.00-11.30 AM வரை
Note:-
எமது மற்ற நிறுவனமான
BARATHY சித்தன்கேணியில் இதே திகதியில் ஆரம்பமாகின்றது .இங்கும் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

# போல்ட், சவுத்தி மட்டில் உறுதி இல்லாத நிலை



பங்களாதேஷ்- நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் ஒருநாள் தொடர்நடைபெற்றுவரும் நிலையில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர்களான போல்ட் மற்றும் சவுத்தி இருவரினதும் பங்குபற்றல் தொடர்பில் உறுதியற்ற நிலை உள்ளது.

பங்களாதேஷ் தொடரைத் தொடர்ந்து நியூசிலாந்து அணி தரப்படுத்தலில் முன்னணியில் உள்ள அணிகளுடன் டெஸ்ட் தொடரில் விளையாட வுள்ளது. குறிப்பாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர் மார்ச் மாதத் தில் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடர் களை கருத்தில் கொண்டே போல்ட் மற்றும் சவுத்திக்கு ஓய்வு கொடுக்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகின. இருப்பினும், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர்கள் விளையாடினார்கள். ஆனால் அடுத் தடுத்த ஆட்டங்களில் அவர்களுக்குப் பதிலாக மாற்று வீரர்கள் களமிறக்கப்படலாம் என்று தெரிகிறது. எனினும் உறுதியான அறிவிப்புக்கள் எதுவும் வெளியாகவில்லை. (ம)

VCM INSTITUTE
Near the Manogara Junction, K.K.S Road, Jaffna.
A/L 2019
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன் B.Sc
ஆரம்பம்
01.01.2017
ஞாயிறு
காலை 9.30 மணி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org